

# ஞானச்சுடர்

ஆவணி

2011



முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள்வழி

**இனைத்துணைத் தென்பதொன் றில்லை**
**-விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்**

பொருள் : மனைவியொடு வனத்தில் செல்லாது இல்லின் கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம், விருந்தினரைப் பேணி அவர்கட்கு உபகாரம் செய்தற் பொருட்டேயாம். (87)

**பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**
**வேள்வி தலைப்படா தார்.**

பொருள் : நிலையாப் பொருளை வருந்திக் காத்துப் பின் அதனை இழந்து இருபொழுது யாம் பற்றுக் கோடு இலமாயினேம் என்று இரங்குபவர், அப்பொரு ளான் விருந்தினரை ஓம்பி வேள்விப் பயனை எய்தும் பொறியிலாதார். (88)



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### யோகநெறி

**சஞ்சலத்தை நீக்கிவிடு தாமரைத்தாட் கபயம்புகு**
**நெஞ்சில்வஞ்சம் வையாதே - தங்கமே**
**நித்தியமுன் வீடாமறி** 25

**பொன்னின் குடத்துக்கெவர் பொட்டிட்டுப் பார்த்திடுவர்**
**உன்னை மறவாதே - தங்கமே**
**ஊரூராய்த் திரியாதே** 26

**ஊருமிலான் பேருமிலான் உடன்பிறந்தார் சுற்றமிலான்**
**ஆருமி - லானவனைத் - தங்கமே**
**ஆர்தா னறிவாரெடி** 27

**விண்ணும் மண்ணுந் தண்ணீரும் விளக்கொளியும் மாருதமும்**
**கண்ணுதலின் வடிவமெடி - தங்கமே**
**காண்பாரார் காட்டாவிட்டால்** 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானச்சுடர்

வெளியீடு-2 சுடர்-164

2011 ஆவணி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| குத்துவிளக்கு | செ. ஜடா | 01- 03 |
| சைவ நற்சிந்தனை | கு. சோமசுந்தரம் | 04- 05 |
| சிவனார் மனங்குளிர... | செ. பாலச்சந்திரன் | 06- 07 |
| அன்பில் மலரும்... | நா. நல்லதம்பி | 08- 10 |
| மூவரும் ஒருவரே | செல்வி பா. வேலுப்பிள்ளை | 11- 13 |
| அன்பும் இறைஇயலும் | த. நாகராசா | 14- 16 |
| சிறுவர் கதைகள் | - | 17- 18 |
| நித்திய அன்னப்பணி | - | 19- 20 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 21- 22 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 23- 25 |
| கந்தனே கலியுகத்... | கே.வி. குணசேகரம் | 26- 28 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 29- 32 |
| பரிபாடல் பகரும்... | சிவ. சண்முகவடிவேல் | 33- 35 |
| சமையமும் சமயியும் | முருகவே பரமநாதன் | 36- 37 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 38- 40 |
| வித்தகா! உன் ஆடல்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 41- 43 |
| ஆரோக்கியத்தை... | Dr S. குமுதினி | 44- 45 |
| சுயநலம் வேண்டும் | ஜக்கி வாசுதேவ் | 46- 48 |
| தகவற் பக்கம் | - | 49- 50 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய.. | - | 51- 52 |
| திருமந்திரம் கூறும்... | செல்வி த. அம்பாலிகா | 53- 57 |
| சமய நிறுவனங்..... | - | 58- 62 |
| தமிழகத் திருக்கோயில்.. | வல்வையூர் அப்பாண்ணா | 63- 68 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா


சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஆடிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜ் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது வெளியீட்டுரையில், ஞானச்சுடர் வெளிவரத் தொடங்கிய காலத்திலிருந்து ஆழமான கருத்துக்களையும், எளிமையான சொற்பிரயோகங்களையும் கொண்டு சிறப்பாக வெளிவருகின்ற ஓர் நூலாகும் என்று சபையில் கூடியிருந்த முருகன் அடியார்களுக்கு எடுத்துக்கூறினார்.

ஆச்சிரமம் என்று கூறும்போது எல்லோரது மனக்கண் முன்னே வருவது அன்னதானப் பணியே ஆகும். "பசி வந்தால் பத்தும் பறக்கும்" என்ற வாக்கிற்கிணங்க ஆச்சிரமமானது அங்கு வரும் அடியவர்களின் வயிற்றுப் பசியைப் போக்குவதோடு, ஞானச்சுடர் என்னும் மலரை வெளியிட்டு மக்களது அறிவுப் பசியைப் போக்குகின்றது என்று கூறி தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

ஆடிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு ஐ. சண்முகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்

அவர் தனது ஆரம்ப உரையில், சைவ கலை பண்பாட்டுப் பேரவை பிரதி வெள்ளிக்கிழமைதோறும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது. அந்த வகையில் "ஞானச்சுடர்" எனும் மலர் வெளியீடும் ஒன்றாகும் என்று கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில், ஞானச்சுடர் அட்டையில் காணப்படும் "சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை" எனப் பொறிக்கப்பட்ட இலட்சனையில் இசைக் கருவிகள் காணப்படுகின்றன. அவை இசையின் மகத்துவத்தையும், இங்கு இசை நிகழ்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பதையும் அனைவருக்கும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து கூறுகையில், ஞானச்சுடர் மலரில் காணப்படும் ஒவ்வொரு விடயமும் ஏதோ ஒரு வகையில் மற்றவர்களுக்கும் பயன்பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு அமைந்துள்ளது என்று கூறியதோடு, இனிவரும் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது பல்வேறு அம்சங்களைக் கொண்டு திகழவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நல்லூரான் என்றாலே அலங்காரக் கந்தன் என்று பொருள். தமிழ்க் கடவுளாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடபகுதியில் நல்லூரானாகக் கந்தன் குடிகொண்ட தலமே நல்லூர்க் கந்தசாமி கோயில். சரித்திரப் பிரசித்திபெற்ற ஆலயமாகத் திகழ்ந்து வரும் நல்லூர், தமிழரின் யாழ்ப்பாண இராச்சியத்தின் 763 வருடகால வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட தனிச்சிறப்புடையது.

இது நல்லூரானின் திருவிழாக்காலம். நல்லூரான் அருள்வேண்டி அடியார்கள் அலை அலையாகத் திரண்டு வருகிறார்கள். நல்லூரின் தெற்கு வாசல் தெய்வமாக வீற்றிருக்கும் ஆறுமுகசாமி கோயிலுக்கு நேராக, புதிதாக நிர்மாணிக்கப் பட்டு வானுயர நீண்டு நிமிர்ந்து நிற்கிறது. இந்த நவதள ஸ்ரீ சண்முக ராஜகோபுரம். 120 அடி உயரம் கொண்ட இந்த ராஜகோபுரம் 9 வாசல்கள் கொண்ட 9 நிலைகளாக, பக்கங்களில் 27 வாசல்களுடன் காணப் படுகிறது. 21.08.2011 ஞாயிறு (18ஆம் திருவிழா) கார்த்திகை நன்நாளில் காலைவேளைய சுபவேளையில் ஸ்ரீ சண்முக ராஜகோபுரத்துக்கு நவ கலசங்கள் வைக்கப்பட்டு கும்பாபிஷேகம் இனிதே நிறைவெய்தியுள்ளது. வெளியிலிருந்த யாருமே சம்பந்தப்படாமல், குடாநாட்டில் உள்ள உள்ளூர் சிற்ப ஆசாரியார்களைக் கொண்டே இக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



நவதள ராஜகோபுரத்தின் முதற் தளத்தில் ஒரு கிளியின் சிற்பம் அமைந்துள்ளது. அருணகிரிநாதர் கிளிவடிவிலேயே கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம் பாடினார் என்பது அனைவரும் அறிந்ததே. சண்முகனைத் திருப்புகழால் அர்ச்சித்த அருணகிரிநாதருக்கு, புதிய ராஜகோபுரத்திற்கு அண்மையிலே தனிக்கோயில் அமைத்துள்ளார்கள் என்பதும் ஒரு சிறப்புச் செய்தியாகும்.

27.08.2011 சனிக்கிழமையன்று (24ஆம் திருவிழா) தேர்த் திருவிழாவும், 28.08.2011 ஞாயிற்றுக்கிழமையன்று (25ஆம் திருவிழா) நடைபெறும் தீர்த்தோற்சவமும் 29.08.2011 திங்கட்கிழமையன்று பூங்காவனத் திருவிழாவுடனும் நல்லூரான் மகோற்சவம் நிறைவுக்கு வருகிறது. நாமும் அவன் பாதம் பணிந்து நலம்பல பெற்று உய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி மகோற்சவம் - 2011- ஆவணி



ஆவணி மாதம் சந்நிதி கொடியேற்றம்
அடுத்துப் பதினைந்து நாள்- தினமும்
அருளாளன் முருகனுடன் ஆலயத்தை வலமாய்
அன்புடன் உலாவி வருவோம்
ஆவலாய் முருகனின் பாலபிஷேகம் பார்ப்போம்
அவனலங் காரமும் பார்ப்போம் - புகழ்பாடி
அரிசியமுக் கனியுடன் தேன்தினை மாபடைப்போம்
அன்புமா விளக்குமிடு வோம்
காவடி எடுத்தும் கரகங்கள் ஆடியும்
கர்ப்பூரச் சுடர்பிடிப்போம்- அன்புடன்
கந்தா குகா என்போம் கார்த்திகே யாவென்றவன்
கழலடி பாடிப் போற்று வோம்
தேவிமார் புடைசூழ முருகன்வரும் தேரின் வடம்
சிந்தித்து பிடித்து வருவோம்- மறுநாள்
சிறந்தபூ ரணைகாலை சண்முகப் பெருமானுடன்
தீர்த்தமாடி மகிழ்வோமே.
மேவிய ஒவ்வொரு நாளும் சந்நிதி ஆச்சிரமத்தில்
நோன்புடை அடியார்க்கிடும் அன்னத்தை- பக்தியாய்
நோக்கிமனை மக்களுடன் பாக்கிய மாகவுண்டு- சுவாமி
மோகனதாஸ் பணி வியப் போமே
முருகனை வேண்டி வரம்பெற்று வாழ்வோம்

முதுபெரும்புலவர், கலாபூஷணம்
புலவர் மணி வை.க. சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. ஆனந்தகுமார்
(லண்டன்)
Dr. G. பவானி
(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)
Dr. திருமதி பத்மராணி குகானந்தன்
(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)
S.S. றஜீந்திரன்
(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)
சி. சிவமூர்த்தி
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
ஏ. அனுசாந்தன்
(ஆசிரியர், குப்பிளான்)
திருமதி கி. மாலினி
(கலாச்சார உத்தியோகத்தர், கோப்பாய்)
A. நாகரெத்தினம்
(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)
சி. குமாரசாமி J.P.
(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)
வே. இராஜேந்திரா
(பொது சுகாதாரப் பரிசோதகர், ஆவரங்கால்)
பொ. குமாரசாமி
(சட்டத்தரணி, நவிண்டில்)
உரிமையாளர்
(அருளானந்தா புடவை மாளிகை, சங்கானை)
Dr. V. சச்சிதானந்தராஜா
(கண்ணா கிளினிக், சித்தங்கேணி)
திருமதி கௌரி சுரேசன்
(ஆசிரியர், ஆவரங்கால்)
S. அருளையா
(கொழும்பு)
M.P. தர்மலிங்கம்
(பத்திரிகை முகவர், உடுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செ. கந்தசாமி**
(வங்கியாளர், சண்டிலிப்பாய்)
**நா. சிவசிதம்பரம்**
(கோணாவளைலேன், கொக்குவில்)
**இ. அரிகரன்**
(ஈவினை, புன்னாலைக்கட்டுவன்)
**முகாமையாளர்**
(திருமகள் அழுத்தகம், தெல்லிப்பளை)
**திருமதி தமிழ்ச்செல்வி செந்தில்ராஜா**
(மிருசுவில்)
**ச. பத்மநாதன்**
(தெற்குத் தோப்பு, புத்தூர்)
**சி. சிவயோகநாதன்**
(விக்னேஸ்வரா வீதி, கரணவாய்)
**தே. தேவராஜேந்திரன்**
(திகிரி லேன், தும்பளை)
**பொ. நாகலிங்கம்**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
**க. மயில்வாகனம்**
(விஜிதா வளவு, அல்வாய்)
**இ. நித்தனசுந்தரம்**
(ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)
**நா. தங்கராசா**
(வலவந்தோட்டம், கரணவாய்)
**இரத்தினம் சதீஸ்குமார்**
(மடத்தடி, குப்பிளான்)
**முத்து கணேஷ்**
(மஞ்சத்தடி, இணுவில்)
**K. கஜமுகன்**
(இராசவீதி, நீர்வேலி)
**செ. சிவலிங்கம்**
(மலர் வசந்தம், இணுவில்)
**N. ஜெயரட்ணராசா**
(பண்ணாகம், சுழிபுரம்)
**சி. சிவமோகன்**
(ஆனந்தகிரி, தாவடி)
**சி.து. கலைச்செல்வம்**
(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. கிருபாகரன்
(உபதபால்கந்தோர், ஆனைக்கோட்டை)
வ. ரவிச்சந்திரன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
வே. பரமேஸ்வரன்
(மாரக்காய், புலோலி தெற்கு)
வை.ச. பரஞ்சோதி
(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)
ச. ஸ்ரீவிவேகானந்தராசா
(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
சீ.சி. கந்தையா (பலாலி)
(ஆவரங்கால்)
தி. கருணாகரன்
(கரன் எலக்ரோனிக், கரணவாய்)
ந. முத்துக்குமாரசாமி
(சிறுப்பிட்டி தெற்கு)
அதிபர்
(ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை)
பூ. நித்தியானந்தம்
(சிறுப்பிட்டி தெற்கு)
S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்
(மானிப்பாய் தெற்கு)
இ. தயாபரன்
(கோண்டாவில்)
க. ஜெயபாலகணேசன்
(சிறுப்பிட்டி தெற்கு)
S. சாம்பவி
(யாழ்ப்பாணம்)
S. கனகசுந்தரம்
(சிறுப்பிட்டி தெற்கு)
து. மனோகரன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
அருளையா சுப்பிரமணியம்
(நீர்வேலி மேற்கு)
கி. சேந்தன்
(குடமியன், பருத்தித்துறை வீதி, வரணி)
த. புவனேந்திரன்
(அந்திரானை, ஈவினை)
ஆ. விநாயகமூர்த்தி
(சாளம்பை, கரணவாய் மத்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீ. வைகுந்தசாமி**
(திருத்தணி, வட அல்வாய்)
**சு. நவமணிநாதன்**
(புலோலி தெற்கு, புலோலி)
**ச. சிவகுமாரன் G.S.**
(அமுதசுரபி, கட்டுடை)
**K. நடராசா**
(பொறியியலாளர், பத்தமேனி)
**சி. நவரெத்தினம்**
(ஆனந்தா வீதி, மானிப்பாய்)
**S. சரவணபவன்**
(தோப்பு, அச்சுவேலி)
**ந. கனகநாயகம்**
(வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி)
**உரிமையாளர்**
(லக்ஷி தொலைத் தொடர்பகம், அச்சுவேலி)
**திருமதி ம. கமலக்கண்ணன்**
(கந்தப்பா வளவு, வல்வெட்டி)
**சி. சுப்பிரமணியம்**
(சமரபாகு, உடுப்பிட்டி)
**த. முகுந்தன்**
(மூளாய், சுழிபுரம்)
**வ. இளையதம்பி**
(முருகையன் கோவில் ஒழுங்கை, தும்பளை)
**வ. சிவலிங்கம்**
(குருபரன் தொலைத்தொடர்பு நிலையம், கரவெட்டி)
**ந. பொன்னுத்துரை**
(தொம்பை வீதி, உடுவில்)
**ச. திவாகரன்**
(உரும்பராய் மேற்கு)
**க. சச்சிதானந்தன்**
(சந்தை வீதி, உடுப்பிட்டி)
**நா. கதிரமலைநாதன்**
(உரும்பராய் கிழக்கு)
**நா. மகேந்திரராசா**
(பிறேம மகால், வல்வெட்டி)
**ச. ஹரிஹரன்**
(கரணவாய் தெற்கு)
**இ. விக்னேஸ்வரன்**
(இணுவில் மேற்கு ஓ ழுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்துவிளக்கு

திரு செ. ஜடா அவர்கள்

குத்துவிளக்கின் அடிப்பாகம் படைத்தல் தொழிலை ஆற்றுபவரான பிரமாவையும் (பிரமாவின் சக்தி சரஸ்வதி) தண்டுப்பகுதி காத்தல் தொழிலை புரிபவரான மகாவிஷ்ணுவையும் (விஷ்ணுவின் சக்தி மகாலட்சுமி) தீச்சுடர் அழித்தல் தொழிலை புரிபவரான உருத்திரனையும் (சக்தி உமை) தகழியின் மேலேயுள்ள தண்டுப்பகுதி மறைத்தல் தொழிலை ஆற்றுபவரான மகேஸ்வரனையும் (சக்தி மகேஸ்வரி) நுனிப்பாகம் அருளல் தொழிலை புரிபவரான சதாசிவனையும் (சக்தி மனோன்மணி) குறிக்கும். குத்துவிளக்கேற்றி எக்காரியமும் ஆற்றுமிடத்து ஐவகைச் சக்திகளும் எம்மில் இணைந்து செய்யுங் காரியம் சிறக்க திருவருள் கூடுகின்றது. (எண்ணெய்-நாதம், திரி- விந்து, சுடர்- திருமகள் பிழம்பு-கலைமகள், தீ- சக்தி) ஆகும்.

மாலைப் பொழுதானதும் வீட்டில் உள்ள பெண் குத்துவிளக்கேற்றி இறை வழிபாடு செய்வாள். வீட்டில் உள்ளோர் யாவரும் பல நாட்கள் வெளியே பயணம் செல்ல வேண்டியிருந்தால் வீட்டிலே விளக்கேற்றுவதற்குச் சுற்றத்தவர் அயலவர் ஆகிய யாரேனும் ஒருவரை ஒழுங்கு செய்யவேண்டும்.

எல்லா சுபகாரியங்களுக்கும் முதலில் வைக்கப்படும் மங்கலப் பொருள் குத்துவிளக்காகும். நிறைகுடத்துக்கு இரு மருங்கிலும் இரு குத்துவிளக்குகளை வைப்''பார்கள்.

எந்தக் கிரியைகள் சடங்குகள் ஆரம்பமாவதற்கு முன்னரும் முதலில் இடம்பெறும் வழிபாடு குத்துவிளக்கிற்கு உரியதாகும். குத்துவிளக்கிற்கு சந்தனம் பூசி குங்குமப் பொட்டிட்டு அதன் நுனியில் பூ சாத்துதல் வேண்டும். பின்பு தகழியில் எண்ணெய் அல்லது நெய் விட்டு இரண்டு திரியினை இட்டு ஒரு திரியினைத் தீபமாக ஏற்றுதல் வேண்டும். வேண்டுமானால் எல்லாத் திரிகளையும் ஏற்றலாம். குத்துவிளக்கிற்கு பூசை ஆராதனைகள் இடம்பெற்றதன் பிற்பாடுதான் உரிய சுபகாரியம் நிகழ்த்தப்படும். சுபகாரியமோ வைபவமோ இடம்பெறுமிடத்து முதலில் இடம்பெறுவது "மங்கல விளக்கேற்றல்" ஆகும். இருளை அகற்றி ஒளியைத் தருவது விளக்கு. இருள் அறியாமையைக் குறிப்பது. எம்முடைய உள்ளத்தில் படிந்திருக்கும் அஞ்ஞானம் என்ற அறியாமை இருளை அகற்றி ஞானதீபத்தை ஏற்றுவது தான் குத்துவிளக்கு ஏற்றுவதன் தத்துவமாகும். பௌர்ணமித் தினத்தில் சுமங்கலிப் பெண்கள் திருவிளக்குப் பூசை செய்யும் வழக்கமுண்டு. இத்தினம் அம்பாளுக்குரிய விசேட தினமாகும். சுடர்களில் அம்பாள் சந்திரனுக்குரியவர். இதனால் அம்பாள் தண்மை ஒளியினைக் கொண்டவள்.

குத்துவிளக்கு உலோகத்தினால் ஆனது. எவர்சில்வர் விளக்கில் தீபம் ஏற்றக் கூடாது. எவர்சில்வர் இரும்பினால் ஆனது.

*நன்மை என்பது செயலில் காணும் அன்பு.*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இரும்பில் தீபம் ஏற்றினால் வீட்டில் தரித்திரம் ஏற்படும். வெள்ளி அல்லது பித்தளை விளக்குகளே தீபம் ஏற்றுவதற்கு உகந்தன. உலோகங்களின் விசேடத்துவம் யாதெனில் நாம் பாராயணம் செய்யும் மந்திரங்களை, வேண்டுதல்களை அவை உள்வாங்கும். இதனால் எமக்குக் கிடைக்கும் பூஜா பலனும் அதிகம் குத்துவிளக்கின் ஐந்து தீபங்களை ஏற்றி வழிபடுதல் மரபாகும். இது எமக்கு ஐவகை சக்திகளையும் அளிப்பதுடன் பஞ்ச பூதங்களிலிருந்து ஏற்படும் துன்பங்களையும் அகற்றுகின்றது. குத்துவிளக்கினைச் சுத்தமாகத் தேய்த்து மஞ்சள் நீரினால் கழுவித் துடைத்து, ஒரு தட்டில் வைத்தல் வேண்டும். பின்பு சந்தனம்பூசி, குங்குமப் பொட்டிட்டு நெய் ஊற்றி நுனியில் பூ சாத்தி அதன் அடிப்பாகத்திலும் பூவைச் சாத்துதல் வேண்டும். பின்பு தியானம் செய்து அம்பாளை ஆவாஹனம் (குத்துவிளக்கில் அம்பாளை எழுந்தருளச் செய்தல்) செய்து அம்பாளின் மந்திரங்களைச் சொல்லி குங்குமம், மலர்கள் ஆகியவற்றால் அர்ச்சித்தல் வேண்டும். வெற்றிலை, பழம், பாக்கு, பால் இவற்றுடன் பாயாசம் அல்லது சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியமாக நிவேதித்தல் வேண்டும். நைவேத்தியம் குத்துவிளக்கிற்கு சமர்ப்பித்தவுடன் மணிநாதத்துடன் 'நைவேத்தியம் சமர்ப்பயாமி' எனப் பூவும் நீரும் கொண்டு தெளித்தல் வேண்டும். திருவிளக்குப் பூசை செய்வதனால் மாங்கல்யப் பலன், புத்திர பாக்கியம், குடும்பத்தில் அமைதி லட்சுமி கடாட்சம் போன்ற அருட்செல்வங்கள் கிடைக்கும்.

நெய் ஊற்றி தீபம் ஏற்றினால் சுகமும், சந்தோஷமும் இல்லத்தில் நிறைந்திருக்கும். நல்லெண்ணெய் எனப்படும் எள் எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றிவந்தால் குடும்பத்தை ஆட்டிப்படைக்கும் எல்லாப்பீடைகளும் தொலைந்துபோகும். விளக்கெண்ணெய்யை ஊற்றித் தீபம் ஏற்றுபவர்களுக்கு- புகழ் அபிவிருத்தியாகும். கடலை எண்ணெயால் தீபம் ஏற்றினால் கடன்கள் அதிகமாகும். இலுப்பெண்ணையில் தீபம் ஏற்றினால் வீட்டில் செல்வம் பெருகும்.

வீட்டில் கிழக்குத் திசையில் குத்துவிளக்கில் தீபம் ஏற்றினால் துன்பம் அகலும், கிரகங்களின் சோதனை விலகும். மேற்குத் திசையில் தீபம் ஏற்றி வழிபாடு ஆற்றினால் கடன்தொல்லை, சனிபீடை, கிரகதோசம், பங்காளி பகை ஆகியவை நீங்கும். வடக்குத் திசையில் தீபம் ஏற்றினால் திருமணத் தடை, கல்வித் தடை ஆகியவை நீங்கி சர்வமங்கலம் உண்டாகும். தெற்குத் திசையினை நோக்கி தீபம் ஏற்றுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். இது யமனுக்குரிய திசையாகும்.

இல்லங்களில் ஏற்றும் தீபத்தை அடிக்கடி இடமாற்றம் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். இதனால் மகாலட்சுமி சஞ்சலமான நிலையினைப் பெறுவாள். வீட்டில் உள்ளவர்களின் செல்வங்களை ஏற்றத்தாழ்வுக்கு இடமாக்குவாள். வீட்டில் சுபகாரியங்கள் இடம் பெற்று முடிந்ததும் சுமங்கலிப்பெண் குத்துவிளக்கினை எடுத்து சாமி அறையினுள் வைப்பாள். அன்றைய தினம் தொடர்ந்து அந்தக் குத்துவிளக்கின் தீபம் அணையாது இருக்கும். திருமண வைபவத்தின் பிற்பாடு மணமகள் தனது வீட்டிற்கு வந்தவுடன் நேராக சுவாமி அறைக்குச் சென்று குத்துவிளக்கு ஏற்றுவது மரபாகும். பெண் என்பவள் குத்துவிளக்கில் ஏற்றப்படும் தீபத்தின் ஒளிக்கு இணையானவள். மங்கலகாரியங்கள் யாவற்றிலும் முதலில் கொண்டு செல்லப்படும் மங்கலப் பொருள் குத்துவிளக்காகும்.

குத்துவிளக்கின் தீபச்சுடர்- திருமகள். பெண் என்பவள் லட்சுமி கடாட்சம் உள்ளவளாகவும், தீபத்தின் பிழம்பு கலைமகள்- அறிவால் எக்காரியத்தையும் ஆற்றுபவளாகவும்,

*தேவையற்ற விவாதங்கள் செய்தல் தீமை தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ- சக்தி குடும்பத்தை வளமாக நடாத்தும் ஆற்றல் கொண்டவளாகவும் திகழவேண்டும் என்பதை இது குறிக்கும்.

குத்துவிளக்கின் தீபத்தினை கைகளினாலோ அன்றி வாயினால் ஊதியோ அணைப்பதைத் தவிர்த்தல் வேண்டும். தீபம் ஒளியினை பரப்பியமையால் அதற்கு கற்பூர ஆரத்தி அல்லது ஊதிபத்தியைக் காட்டி பூவினால் அணைத்தல் வேண்டும். எண்ணெய் இல்லாமல் தீபம் ஊடுபற்றி எரியாது பார்த்தல் அவசியமாகும்.

ஆலயங்களில் விசேட தினங்களில் வரிசையாகக் குத்துவிளக்கேற்றி அலங்கரிப்பர். இறை சந்நிதானத்தில் தன்னையே எரித்துக்கொண்டு ஒளிபரப்பும் எண்ணெய் விளக்கானது ஆயுள் உள்ளவரை ஆண்டவனுக்கு சேவை செய்யும் அருங்குணம் தேவை என்பதனை எமக்கு உணர்த்துகிறது.

திருவிளக்குப் பூசைக்குரிய பாடல்:

"செல்வத் திருமகளே! சீராள தேவியே!
செல்வக் கனியமுதே! சிங்கார வல்லியே!
செல்வந் தருவே! சிற்பரத்தாளே!
செல்வத் திருமணியே! செந்தா மரையே
செல்வத் திருமாங்கல்யம் தந்தருளும்
சீர்பெற்றவளே! பதினாறு செல்வத்தின்
அதிபதி யேபாக்ய லட்சுமித் தாயே!
சரணம் சரணம் சரணம்.

# அரனடியில் இருக்கின்ற அருள்கிடைக்கும்

இம்மையிலும் மறுமையிலும் பயனளிக்கும்
இறுதியிலே முத்தியையே அளிப்பதாலே
தம்மையேசிவ னடியானாக அர்ப்பணித்தால்
தாமடைவர் எந்நாளும் சிவலோகம்
உம்மையேபணி வன்புடையராய் நீமாற்றினால்
உய்யலாம்இன் பவன்புநிலை யதுவடைந்தால்
அம்பலத்தில் ஆடுகின்ற அரனவனின்
அடியின்கீ ழிருக்கின்ற அருள்கிடைக்கும்

-வ. யோகானந்தசிவம்-

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நற்சிந்தனை

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

இந்தப்பூமியில் பல்கோடி உயிரினங்கள் பன்நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றன. மனிதர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. பூமியைப் போன்று இன்னும் பல கோள்கள் அண்டவெளியில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை செல்லும் பாதைகளிலிருந்து இம்மியளவும் விலகிச் செல்வதில்லை. ஓர் ஒழுங்கில் அவை சென்றுகொண்டிருக்கின்றன. இந்த ஒழுங்கு அழகைத் தருகின்றது. வாழ்க்கையிலும் ஓர் ஒழுங்கு வேண்டும்; அப்பொழுது வாழ்க்கையில் அழகு மிளிரும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இக்கோள்கள் அனைத்தும் வேகம் மாறுபடாமல், திசை திரிபுபடாமல், பாதை தவறாமல், மிக்க ஒழுங்குடன் அண்டவெளியிலே சூரியனை வலம் வருகின்றனவே. இது ஆச்சரியமாக இல்லையா? இவை யாருடைய கட்டளைக்கு ஏற்ப இவ்வாறு நடந்து கொள்கின்றன? இதனையிட்டு நாம் சிந்திக்க வேண்டும்.

இப்புவியில் நேரந்தவறாமல் பொழுது புலர்கிறது; பகல் இரவு மாறி மாறி வருகின்றன, பருவகாலங்கள் உரிய முறையில் நிகழ்கின்றன, காற்று வீசுகின்றது, மழை பொழிகின்றது, பயிர்களும், செடி, கொடி மரங்களும் வளர்கின்றன, பயன் தருகின்றன. இந் நிகழ்வுகள் அனைத்தும் ஒழுங்காகவும், சீராகவும் நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் இயக்குபவர், நெறிப்படுத்துபவர் யார்?

இப் பூமி அழகு சொரூபமாக உள்ளது. பூத்துக் குலுங்கும் மலர்கள், இன்னிசை பாடும் புள்ளினங்கள், எழில் நிறைந்த வனங்கள், சோலைகள், நீர்நிலைகள், மலைகள், பல்வேறு உயிரினங்கள் என்பன அழகுக்கு அழகு செய்கின்றன. காடுபடு திரவியம், கடல்படு திரவியம், கனிப்பொருட்கள், என்று இன்னோரன்ன திரவியங்கள் மனிதர்கள் அனுபவிப்பதற்கென்றே படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அழகுகளையும், திரவியங்களையும், மற்றும் படைப்புக்களையும் சிருஷ்டித்தவர் யார்? இந்த அற்புதங்களுக்கெல்லாம் மூலகர்த்தா யார்?

ஆம், இவற்றிற்கெல்லாம் பொறுப்பாக, மனித ஆற்றல்களையும் விஞ்சிய பேராற்றல் ஒன்று இருக்கின்றது. மனித அறிவிற்கும் அப்பாற்பட்ட பேரறிவு ஒன்று இருக்கின்றது. இன்பங்களுக்கெல்லாம் மூலமான பேரழகு ஒன்று இருக்கின்றது. பேராற்றல், பேரறிவு, பேரழகு, பேரின்பம் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒன்றைத்தான் இறைவன் என்கிறோம். இந்த இறைவனே இவ்வுலகிலுள்ள அனைத்தையும் படைத்துள்ளான். உலக இயக்கத்திற்குக் காரணமாக உள்ளான். சகல உயிர்களையும் காத்து அருளி வருகின்றான்.

*கடமையில் இருந்து ஓய்வு எடுத்தலாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூமியில் நிகழுகின்ற ஒவ்வொரு நிகழ்வுகளையும் கண்டு, ஆராய்ந்து, தெளிந்து, நம்முன்னோர் இவற்றிற்கெல்லாம் இறைவனே காரணன் என்றனர். இறை நம்பிக்கை கொண்டனர். "அவனின்றி ஓரணுவும் அசையாது" என்று திடமாக நம்பினர். இந்த நம்பிக்கையில் தோன்றியதுதான் சமயம். சமயம் வாழ்க்கை நெறியாயினது. இந்த மேலான, ஒப்புயர்வற்ற பரம்பொருளைச் சிவம் என்று அழைத்தவர்கள் சைவர்கள் எனப் பட்டனர்.

எம்மைப் படைத்த இறைவனே எமது தந்தை. தந்தை மட்டுமல்ல தாயுமானவன். "அம்மையே, அப்பா" என்று மணிவாசகப் பெருமான் இறைவனை அழைக்கின்றார். இறைவனுக்கும் எமக்கும் உள்ள உறவு தந்தை- தனயன் என்ற நிலையில் உள்ளது. அப்படியாயின் நாம் அனைவரும் சகோதரர்கள் அல்லவா? இறைவனின் தந்தை நிலையும், மனிதர்களின் சகோதர உறவு முறையையும் செவ்வையாக உணர்ந்து கொள்வோமேயானால், நாம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும், ஒப்புரவு செய்ய வேண்டும், பண்பாக நடக்க வேண்டும் என்ற தெய்வீக நிலை எம்மிடையே ஏற்பட்டுவிடும். இந்த அற்புதமான, அழகுநிறைந்த, இனிமையான படைப்புக்களைத் தந்த இறைவனை நாளும்போற்றி துதிசெய்து நன்றி செலுத்த வேண்டும். இதனாலேயே "நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும்,' என்றும் அவன்தாள் நினை" என்கின்றது சைவநெறி. எந்தக் காரியத்தைச் செய்யும்போதும் கடவுளை நினைந்துகொண்டு செய்தால் அது நிச்சயம் கைகூடும்.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாக விளங்குகின்ற சிவபெருமான், பேரன்பு நிறைந்தவர்; பேராற்றலும், பேரழகும் வாய்ந்தவர்; எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவர். உயிர்களுக்கெல்லாம் உயிரானவர். தம்முடைய தொண்டர்களின் உள்ளத்துள் அடங்குகின்ற எளிவந்த தன்மையினர். அத்தகைய இறைவனை வணங்குகின்ற சைவமக்கள் தாமும் அன்புள்ளம் படைத்தவர்களாக விளங்கவேண்டும். அன்பே சிவம் ஆகும். எனவே நாம் அனைவரும் அன்பினைச் சொரிந்து, அன்பினைப் பெருக்கி, உயிர்களை ஓம்பி, ஒரே குலமாக, உண்மைச் சைவ மக்களாக வாழ்வோமாக.

## நிவேதனத்தை என்ன செய்வது?

**பணக்காரர்களில் சிலர் கோவில்களுக்குப்போய் ஆண்டவனுக்குச் சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்துவிட்டு, அதை அப்படியே யாருக்கும் கொடுக்காமல், வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வந்ததும், வேலைக்காரர்களையும் வெளியே அனுப்பிவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு, தாமே சாப்பிடுவார்கள். அதை ஜீரணிப்பதற்காக, மேலே ஒரு ஜிஞ்சர் பீரையும் குடித்துவிட்டு 'சிவனே' என்று திண்ணையில் வந்து உட்காருவார்கள்.**

**இவர் செய்த சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியத்தைச் சாமி சாப்பிடாது என்று எண்ணித்தான் இவர்கள் எல்லாம் நைவேத்தியம் செய்கிறார்கள்போல் இருக்கிறது. ஒருவன் சர்க்கரைப் பொங்கல் வைத்து சாமியை வழிபடுவானானால், தான் செய்த நிவேதனத்தை ஏழைகளுக்கு உருட்டிக் கொடுத்து, வேலைக்காரர்களுக்கும் கொடுத்து அதன்பிறகு, சாப்பிட்டால்தான், அது உண்மையான வழிபாடு.**

**-வாரியார் சுவாமிகள்-**

*காமம் ஒருவனைப் பிச்சைக்காரனாக்கிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிவனார் மனங்குளிர..."



திரு செ. பாலச்சந்திரன் அவர்கள்

எத்தனையோ அரிய மானிடப் பண்புகளை வளர்க்கவேண்டிய கல்விக்கூடங்கள் இன்று வெறுமனே ஏட்டுச் சுரக்காயை உருவாக்குகின்றன. தெய்வீக நோக்கைக் கல்வி நிலையங்கள் மாணவரிடையே வளர்த்தல் வேண்டும். மாணவர்கள் தெய்வீக விழுமியங்களைப் பெற்றுக்கொள்ளும்போது, அவர்களின் இயல்புகளுக்கு ஏற்றவாறு மனித மேம்பாட்டுக்கான விழுமியங்கள் வளர்ச்சியடையும். மனித மேம்பாட்டுக்கான விழுமியங்கள் எல்லாரிடமும் இருக்கின்றன. கல்வியின் இறுதி இலக்கு ஒழுக்கம். அறிவின் இறுதி இலக்கு அன்பு. இதனையே திருமூலர் அழகாகக் கூறிவைத்துள்ளார்; இவ்வாறு

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆருமறிகிலார்
அன்பே சிவமாவது ஆருமறிந்தபின்
அன்பே சிவமாய மா்ந்திருந்தாரே"

பட்டினத்தடிகள் சிறுபிள்ளைகளுடன் விளையாடியவாறு சிவலிங்கமானார் திருவொற்றியூரில். இது அன்பின் சின்னம். மணிவாசகப் பெருமான்,

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்...." எனப் பாடி ஏங்குவதையும் நோக்கலாம். கல்வி என்பது வெறுமனே புத்தகத்தில் உள்ள அறிவைத் தமக்குரியதாகப் பெற்றுக்கொள்வதன்று. நடைமுறைச் செயற்பாடுகளை இழந்து வெறும் புத்தக அறிவில் கவனம் செலுத்துவோமாயின் கல்விக்குரிய பெயரைக் கெடுத்து விடுவோம். இதனை இன்று நடைமுறையில் நாம் காணலாம். ஔவைப் பிராட்டியார் "காப்பது விரதம்" என்றார். விரதம் அனுட்டிப்பதை ஏன் எல்லா மதமும் ஏற்றுள்ளன? குறிப்பாகச் சைவ சமயத்தவர், மனிதன் தெய்வீக நிலைக்கு மேம்பட விரதம் அவசியம் என விளக்கியும், வாழ்ந்து காட்டியும் உள்ளனர்.

கற்பிப்பதற்கென அமைக்கப்பட்ட நிறுவனங்கள் இன்று பணத்துக்கும், பணக்குவிப்புக்கும் ஆதார நிலையங்களாகிவிட்டன. மனித நடத்தைகளிலும், மனிதத் தொடர்புகளிலும் அறவொழுக்கம், கொடை, நீதி, நேர்மை முதலியனவும் இங்கே தென்படவில்லை. இந்நிலையானது மானுட எதிர்காலத்துக்குப் பலவழிகளிலும் பயங்கரம் நிறைந்ததாக உள்ளது. இன்றைய வாழ்க்கை பயம், நம்பிக்கையின்மை, சந்தேகம் முதலிய புதிர்களாற் சூழ்ந்துள்ளன. "எதுவித ஓய்வோ, சாந்தியோ அற்ற சூழலில், தளத்தில் உழலும் தெள்ளுப்பூச்சி போன்ற நிலையில் மனிதன் உள்ளான்" என ஸ்ரீ சத்தியசாயி குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை நிவர்த்தி செய்ய அருளாளர்கள் கூறும் மார்க்கங்களை நாம் பின்பற்றினால் மட்டுமே உய்வு உண்டு.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு”

என்கிறார் திருவள்ளுவர். எமக்கு இறைவன் உய்வு பெற தனு, கரண, புவன போகங்களைத் தந்துள்ளான். அதற்கு நன்றியுபகாரமாக நாம் எமது உடலையும், மனத்தையும், மொழியையும் பயன்படுத்த வேண்டும். இதனை மணிவாசகப் பெருமான், “...... போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்....” எனச் சிவபுராணத்தில் கூறுவதைக் காணலாம். சிவத்தொண்டு, சிவவிரதம் செய்தால் மட்டுமே கழுவாய் கிட்டும். இல்லையேல் கவலையே முட்டும்.

மனம் ஒருவழிப்படும் போதே வழிபாடு சிறப்பாகும். மனம் பொறிவழி போகாது இருக்கக் கைக்கொள்வதே விரதம். எல்லா விரதங்களுள்ளும் நன்றியுடன் தொடர்பான விரதம், சிறப்பான சிவவிரதம் பிரதோஷ விரதம் ஆகும். ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்து 13ஆம் நாளும், பௌர்ணமியில் இருந்து 13ஆம் நாளும் திரயோதசி திதியாகும். அன்றுதான் பிரதோஷநாள். ஆக மாதத்திற்கு இரு பிரதோஷ நாட்கள் வருகின்றன.

பிரதோஷம் என்பதன் பொருள், மிக அதிகமான தீமை என்பதாகும். (ப்ர+தோஷம்) எனவே அந்த வேளையில் சிவனை நினைத்து வழிபாடு இயற்றினால் தீமை விலகும். நன்மை பெருகும். இதற்காகவே இவ்வேளையில் இறைவன் உலக நலன் கருதி ஆலகால விஷத்தைப் பருகினார். ஆகவே அந்த நேரத்தில் சிவபெருமானை வழிபடுவது உசிதம் என்று கூறப்படுகிறது. ஆரவார உலகில் அமைதி நிலவ, மனிதன் மன ஒருமையுடன் புனிதமாகக் கைக்கொள்ள வேண்டிய விரதமே பிரதோஷ விரதமாகும்.

சிவனை வழிபடுபவர்கள் எல்லாத் தேவர்களையும் தரிசித்த நற்பலனை அடைகின்றனர். தரித்திரம் தீரவும், நோய் விலகவும், கெட்ட நோய்களின் துயர்மடியவும், சிறந்தவேளை பிரதோஷ வேளையாகும். சிவ உபாசனையில் பிரதோஷகால பூஜைக் காலங்களே பிரகாசமான விளக்கு. பிரதோச காலத்தில் சிவபெருமானுடன் நந்தி தேவர்க்கும் சிறப்பான வழிபாடு நடைபெறும். இவர் சிவனுக்கு மிகவும் பிரியம் உடையவர். இவருக்கும் சிவனுக்கும் குறுக்கே போகக் கூடாது. இது பிரதோஷ காலத்தில் கண்டிப்பாகக் கடைப் பிடிக்க வேண்டிய ஒன்றாகும். சைவசித்தாந்தம் நந்தி தேவரைத் தூய ஆன்மா எனவும், எம்பெருமானை இடையறாது துதிக்கும் ஆத்மா இது எனவுங்கூறும். பிரதோசங்கள் ஐந்து வகைப்படும். நித்ய பிரதோஷம், பட்சப் பிரதோஷம், மாதப்பிரதோஷம், மகாப்பிரதோஷம் (சனிப் பிரதோஷம்), பிரளயப் பிரதோஷம் என்பவையாகும். இவற்றை முறைப்படி அனுட்டித்தால் சிவனார் மனங்குளிரும். இதுதவிர சிவராத்திரி விரதம், திருவாதிரை விரதம், சோமவார விரதம் என்பனவும் சிவபெருமானுக்குரிய விரதங்களாகும். மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், அவன் திருவடியை அடையவும் “...... போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி” என வாழ்த்தி அவன் திருவடியைப் பற்றுவோமாக.

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக
பற்றை விடற்கு.

(முற்றும்)

நட்பு உண்டாவதற்கு அன்பு மட்டும் போதாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பில் மலரும் பக்திநெறி

திரு நா. நல்லதம்பி அவர்கள்

ஒரு தாய் தனது பிள்ளைமேல் வைத்த அன்பின் காரணமாக அப்பிள்ளைக்குப் பால் ஊட்டுகிறாள்; பிள்ளை பாலுக்காக அழுவதற்கு முன்பே, தானாக நினைந்து ஊட்டுகிறாள்.

இதனை அனுபவத்தில் அறிந்துகொண்ட மாணிக்கவாசகர், இறைவனிடத்தில் அன்புகொண்டு பக்திநிலை பெற்றபோது, இறைவன் அந்தத் தாயினும் பார்க்கப் பரிவுகாட்டினார், உள்ளத்தில் ஞானஒளி ஏற்றிப் பேரானந்தத்தைத் தந்தார் என இறைவனைச் சிக்கெனப் பிடிக்கின்றார்.

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என வல்லமை பேசுகின்றார். ஆம். "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்றுதானே தெய்வப் புலவரும் கூறியிருக்கின்றார்!

அன்பின் வழியது உயிர்நிலை.

உலகில் தோன்றிய உயிர்கள் ஒன்றோடொன்று, ஒருவரோடொருவர் கொள்ளும் அன்புப் பிணைப்பினாலேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அதனாலேதான் உலகமும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

கணவன்- மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர், நண்பர் எனப் பல்வேறு நிலைகளில் அன்பு மலர்கின்றது.

கணவனுக்காக மனைவி ஏங்குவதை, மனைவிக்காக கணவன் கவலைப்படுவதை, பெற்றோரை இழந்து பிள்ளைகளும், பிள்ளைகளைத் தேடிப் பெற்றோரும் கண்ணீர் வடிப்பதை இன்னமும் கண்டு கொண்டிருக்கிறோமல்லவா! "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்..." என ஒரு கதைக்காகக் குரல் கொடுத்தவர்கள் இன்று நிதர்சனமாகப் பார்க்கின்றோமே! அன்பு முதிர்ந்து ஒரு பிரேமையாக பக்திநிலையாக மாறுகின்றது.

குறை என்பது மனதில்தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இந்த அன்பு மலர்ந்து, இந்த உலகத்தை உயிர்களைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள்செய்யும் அந்த எல்லாம் வல்ல இறைவன் மீதும் அன்பு செலுத்துகின்றோம்.

அந்த அன்பு முதிர்ச்சியடைந்து பக்திநிலையாக மாறுகின்றது. பக்திநிலை பெறுவது எளிதான ஒன்றல்ல. "எல்லாம் அவன் செயலே, என் செயலால் ஆவது ஒன்றும் இல்லை" என அந்தப் பரம்பொருளிலே பாரத்தைப் போட்டுவிட்டு, நமது நாளாந்த கருமங்களை நல்லறத்தின் நெறியில் நின்று ஆற்றவேண்டும். இதற்கு ஒரு குருவை ஆதாரமாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

இதற்காக, நாம் நமது தொழிலைவிட்டு துறவறஞ்செல்ல வேண்டியதில்லை. "செய்யுந் தொழிலே தெய்வம்" ஆகக்கொண்டு இல்லறத்தில் இருந்துகொண்டே தத்தம் கருமங்களைச் செய்து முத்திநிலை (பேரின்பம்) அடைந்த அடியார்கள் பற்றி பெரியபுராணம் கூறுகின்றமை நமது கவனத்துக்கு உரியது.

நிலைபெறுமாறு எண்ணுதியேல்" என நெஞ்சை உறுதியாக்கி "நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு...... ஆரூரா என்றென்று அலறாநின்று" இறை அருளைப் பெறவேண்டும். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்பது ஆன்றோர் வாக்கு.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு, தான் கடவுளிடம் வைக்கவில்லை என்கிறார் வாதவூரர். குதிரை வாங்கக் கொண்டு போன பணத்தைக் குரு சேவைக்குச் செலவழிக்கிறார் மணிவாசகர். ஆனால், தான் வேட்டையாடிப் பெற்ற இறைச்சியைச் சுவைபார்த்து படைத்து, வாயிலே நீர் மொண்டு அபிஷேகஞ் செய்து, ஊனமுற்ற கண்ணுக்குத் தன் கண்ணைப் பிடுங்கிச் சிகிச்சை செய்து எல்லாம் அவனுக்கே எனத்தன் செயலையும் உடலையும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்கிறார் கண்ணப்பர்.

கிருஷ்ண பரமாத்மாவிடம் அன்பு, மதிப்பு, நட்பு எல்லாம் பூண்டிருந்த அர்ச்சுனன், போர்க்களத்தில் போனவுடன், தனக்கு முன்னே எதிரிகளாக நிற்கும் பெரியோர் சகோதரர் எனப் பலரையும் பார்த்துவிட்டு, இவர்களோடு சண்டை செய்து கொல்ல வேண்டுமா எனப் பின்வாங்குகிறான். இத்தனைக்கும் பார்த்தசாரதியாகித் தன்னில் பக்திகொண்டவருக்குச் சேவகஞ் செய்துகொண்டிருக்கிறான் கிருஷ்ணன்! "நல்லதும் கெட்டதும் என்னுடையதாகட்டும்; என்மேல் பாரத்தைப் போட்டுப் போர் செய்வாயாக" என பகவத்கீதை மூலம் உபதேசம் செய்கிறார் பரந்தாமன்.

துச்சாதனன், பாஞ்சாலியின் ஆடை களைந்தபோது, சூதினால் தம்மைத் தாமே தோற்ற வீரர்கள் ஐவரும் உதவிக்கு வராத நிலையில், உடுக்கையிழந்தவளுக்கு உதவ வந்த இரு கைகளுமே பயனற்றுப்போக, இரு கைகளையும் நீட்டி இறைவனோடு ஐக்கியமானாள் பாஞ்சாலி. என்னே புதுமை! பாஞ்சாலியின் உடலைப் போர்த்திருந்த துகில் நீளத் தொடங்கியது.

கோவிந்தா! கோவிந்தா! எனப் பாஞ்சாலி அழுது வேண்டி நிற்க, துச்சாதனன் கைசோர்ந்து நிற்க, பாஞ்சாலியின் மானங்காத்து நின்றான், சோதி வடிவாகி வந்த பரந்தாமன்!

*பணத்தின் குவியலானது கவலைகளின் குவியல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதாடித் தோற்றாலும் முறை தவறாது பொறுமை காத்த பாண்டவர், பாஞ்சாலி சபதத்தை நிறைவேற்றிப் போரில் வென்று புகழ்பெற்றமை பரந்தாமனிடத்தில் அவர்கள் கொண்ட பக்தியினாலேதான் என்பதை அறிவோமாக.

ஒருமுறை கிருஷ்ணன் பசிக்கு ஏதாவது கொடு என்று பாஞ்சாலியிடம் போனான். அப்பொழுது அங்கு எல்லோரும் உணவருந்திவிட்டு ஓய்வாக இருந்தநேரம், கிருஷ்ணனோடு துர்வாச முனிவரும் அவரது சீடர்களும் வந்திருந்தார்கள். முனிவரும் சீடரும் கைகால் அலம்புவதற்கு நீர்க்கரைக்குப் போக, கிருஷ்ணரை அழைத்த பாஞ்சாலி, பானையில் ஒட்டியிருந்த ஒரு சோற்றுப் பருக்கையைக் கிருஷ்ணரிடங் கொடுத்தாள். மாயக் கிருஷ்ணன் அதை வாங்கி வாயில் போட்டு ஏப்பம் விட்டான்! கைகால் கழுவச் சென்றவர்களுக்கு அங்கேயே வயிறு நிரம்பியது போலாயிற்று! விருந்துக் கூடத்துக்கே வராமல் போய்விட்டார்கள்! இறைவனுக்குச் சேவை செய்ய அது மக்களுக்குப் போய்ச்சேரும்! மக்கள் சேவையே மகேசன் சேவை!

கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து அன்புகொண்டு வணங்கிவந்தால் பக்தி வளரும். பக்திநிலை கைவரப் பெற்றுவிட்டால் நம்பிக்கை என்ற ஏணி தேவையில்லை. கடவுள் இருக்கிறார்; அவர் நம்மைக் கைவிடார் என்ற எண்ணம் நிலைத்துவிடும்.

ஏழையான குசேலர், தனது பாடசாலை நண்பனான கண்ணனைச் சென்று பார்ப்பதற்காகத் துவாரகைக்குப் போகிறார். நாம் செய்வதுபோல ஏதாவது கையுறை கொண்டுபோகவேண்டும். அன்றைய உணவாகச் செய்த அவலில் ஒருபிடி எடுத்துத் தமது கந்தைத் துணியில் முடிந்துகொண்டு போனார். வாயிற்காவலன் இந்தக் கந்தைத்துணிக் கிழவனை உள்ளே போக அனுமதிக்கவில்லை! கண்ணனுக்குத் தெரியுந்தானே! ஒரு ஆளை அனுப்பி நண்பனை உள்ளே வரச்செய்தார். சுகம் விசாரிக்காமலே முடிச்சிலே என்ன இருக்கிறது என்று வாங்கி வாயில் போட்டான் கண்ணன். ஆகா! நன்றாயிருக்கிறது என்று உட்கொண்டான்.

போன களைப்பிலே குசேலர் உறங்கிவிட்டார். ருக்மணி பாமா சமேத கண்ணன் குசேலருடைய பாதம் பிடித்துச் சேவை செய்தனர். மறுநாள் குசேலர் வீடு திரும்பினார். கண்ணன் அவருக்கு எதுவும் கொடுத்துவிடவில்லை என்று பாமா ருக்மணி குறைப்பட்டனர். கண்ணன் ஒரு புன்னகை செய்தான். குசேலர் ஊர்போய் தன்குடிசை இருந்த இடத்தில் மாளிகை இருக்கக் கண்டார்.

பக்தி நிலையில் கால் நடையாகக் கதிர்காமம் செல்பவர்கள் திசைமாறாகமக் காட்டில் பாதை தெரியாமல் தடுமாறும்போது முருகன் அவர்களைக் கூட்டிவந்து கோயில் வாசலில் விட்டு மறைவதாகப் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

இறைவன் பக்தி வலையிற் படுவோன் அல்லவா! ஆகவே நாம் மூச்சு உள்ளவரை இறைவனிடம் பக்தி செய்து வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூவரும் ஒருவரே

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

"வேதக் காட்சிக்கும் உபநிடதத் துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன்"

சிவன் முழுமுதற் கடவுள். அவரால் தோற்றுவிக்கப்பட்டவன் முருகன். ஒருநாள் சிவனும் உமாதேவியும் கைலையில் இருக்கிறார்கள். அயலில் முருகன் கையில் வேல் வைத்துக்கொண்டு விளையாடுகிறான். தோளில் கடப்பமாலை, காலில் தண்டை, சிலம்பு, வீரக்கழல்களின் கிண்கிணிநாதம், எட்டுத்திக்கு, பதினான்கு லோகங்கட்கும் கேட்கிறது- அவனின் ஆடல்கண்டு அம்மையும் அப்பனும் வியக்கின்றனர்.

சிவன் சர்வேஸ்வரன். உமை சர்வசக்தி. எல்லாம் அறிந்தவர். உமாதேவிக்கு முருகனின் ஆற்றல்பற்றி அறியும் விருப்பம். சிவனிடமே கேட்க சிவன் பின்வருமாறு கூறுகிறார். "அம்மையே கேள்! நான் உருவமற்றவன், நீ அழிவில்லாத சிவசக்தி. படைத்தல், காத்தல், அழித்தல் இம்மூன்றும் அடங்கும் மாயாலீலைதான் திரோபவம் (மறைத்தல்) இவை நான்கினின்றும் அடியார்களைக் காப்பது அநுக்கிரம் (அருளல்) இவ்வைந்து தொழில்களையும் எப்பொழுதும் நடத்துபவனாக ஐந்து முகங்களைக் கொண்ட சதாசிவன் நான். நீ ஒன்றாக பலவாக இருப்பினும் ஒரு முகமுடைய ஈஸ்வரி. ஆகவே அவன் எங்கள் உருவம் ஒருங்கே அமையப் பெற்றவன். அதனாற்றான் அவனுக்கு ஆறுமுகங்கள். தாரகப் பிரமமாகிய முருகனின் மந்திரம் சடாட்சரம் (ச ர வ ண ப வ). அவன் பெருமை அளவற்றது. ஆதலால் அவன் எமது சக்தியே. அவனுக்கும் எமக்கும் பேதமில்லை என்பதை கந்தபுராணம் கூறுகிறது.

"நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி உற்ற தாரகப் பிரமமாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண்டு எழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற அன்றே"

"ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்”

உருவமற்ற அருட்பெருஞ் சோதியாய ஆண்டவனே ஆறுமுகங்கள், பன்னிரு தோள்கள், பதினெட்டுக் கண்கள் கொண்ட அருள் உருவத்தைக்கொண்டு உலகம் உய்ய வந்து உதித்தான் என்பதை பின்வரும் பாடலால் அறிவோம்.

“அருவமு முருவமாகி அநாதியாய் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய”

“பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பு” எனக் குறிப்பிட்டது என்னையே. ஏனெனில், ஒருமுறை படைத்தற்றொழிலைச் செய்யும் பிரம்மாவும், காத்தற்றொழிலைச் செய்யும் விஷ்ணுவும் தாம் தாம் பெரியவரென வாதிட்ட போது “யார் எனது அடியையும் முடியையும் காண்கிறாரோ அவரே பெரியவர்” என் ஓர் அசரீரி கேட்டது. பிரம்மா அன்னமாய் ஆகாயம் நோக்கிப் பறக்க திருமால் பன்றியாக பூமியைத் துளைத்துக்கொண்டு அதல பாதாளம் வரை போனார்கள். அன்னமாய்ப் பறந்த பிரம்மா விண்முகட்டைத் தொடவோ, திருமால் பாதாள எல்லையைக் காணவோ முடியாமல் பூமியை அடைந்தனர். அவ்வேளை சிவ பெருமான், “என் உருவம் காண்பீர்கள்” என ஜோதிப்பிழம்பாக விண்ணையும், மண்ணையும் தொட்டு நின்றபோது இருவரும் தம் கர்வம் விட்டு என்னைப் பணிந்தனர். இது இறைவன் எடுத்த விஸ்வரூபம்.

ஏன்? எனது அம்சமான முருகப்பெருமான்கூட தனது விஸ்வரூபத்தைக் காட்டிய சந்தர்ப்பமும் உண்டு. தேவர்களைக் கொடுமைப் படுத்திய சூரபன்மனை அழிக்க முருகன் வீரவாகு, தேவர்கள் சேனையுடன் செல்கிறார். இந்தச் சிறுவனா என்னை எதிர்த்து வருகிறான். சூரன் பலப்பல மாய வடிவங் கொள்கிறான். ஒவ்வொரு வடிவத்தையும் அழித்தபோதும் அழியாத சூரனுக்கு நல்லுணர்வு தர சூரனை நோக்கிச் சொல்கிறார். “என் கண்முன்னே நீ பல மாயவடிவங்கள் கொண்டாய். இனி நீ நமது வடிவங் காண்பாய்” எனக்கூறி தனது விஸ்வரூபத்தைக் காட்டுகிறார் முருகன். இறுதியும் முடிவுமில்லா இப்பெருவடிவம் காண்கிறான். “அண்டமும் புவனமும், அமரரும், பிறவும் தன்பால் காட்டிய வடிவம் கண்டு “மாலயன் தனக்கும் ஏனை வானவர் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தியின் அழகை வியக்கின்றான்; உற்று நோக்குகின்றான். மூர்த்தியின் திருவடி முதல் திருமுடிவரை திருமேனியின் எல்லையைக் காணமுடியவில்லை.

ஆகவே நானே முருகன். எனது ஆற்றலே அவனிடம் காண்பாய் என சிவன் கூற, இல்லை நானே முருகன் என்கிறார் திருமால். காத்தல் தொழிலை திருமால் மட்டும் செய்யவில்லை. சிவனும் திருமாலும் இருவேறு தோற்றங்களில் நின்றே காத்தற்றொழிலைச் செய்கின்றனர். சிவனுடைய மூர்த்தங்களுள் சோமாஸ்கந்த (சிவன்+ உமா+ ஸ்கந்தன்) வடிவமும் ஒன்று. இன்னோர் வடிவம் சங்கரநாராயணன். சிவன் உமாதேவியை இடப்பாகத்தில் வைத்திருக்கிறார். ஆனால் சிவன் தன் உடம்பில் பாதியைத் திருமாலுக்குத் தந்து சங்கரநாராயணனாக காட்சி (அரிஅத்தர்) தருகின்றார்.

காத்தல் தொழில் புரியும் திருமால்

செல்வம் இழந்தவன் [illegible]யாவான்.

கிருஸ்ணாவதாரத்தில் மூன்று இடங்களில் தன் திருப்பெருவடிவம் காட்டுகிறார். ஆயர் பாடியில் கண்ணனாக அவதரித்து நண்பர்களுடன் விளையாடும்போது மண்ணை அள்ளி உண்கிறான். தாய் யசோதை இதை அறிகிறாள். ஓடிச் சென்று கண்ணனை அதட்டுகிறாள். "அம்மா! நான் மண்ணை உண்ணவில்லை பாருங்கள் என வாயைத் திறக்கிறான். வாயினுள் அண்டசராசரங்கள், திக்குகள், அகில உலகம், மலைகள், ஆறுகள், கடல்கள், சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் தெரிகின்றன. இக்காட்சி கண்டு, "இவன் ஆயர் புத்திரன் அல்லன். அருந்தெய்வம் என உணர்கின்றனர். இஃது சிறுவயதில் காட்டிய விஸ்வரூபம். அடுத்தது

பாண்டவர்க்காக தூது சென்றபோது, துரியோதனன், கிருஷ்ணனைக் கொலை செய்ய எண்ணி நிலவறை செய்து பொறிப் பலகை ஆசனம் உண்டாக்கி அதன்மேல் அமரச் செய்கிறான். கிருஷ்ணன் அமர்ந்தது தான் மூங்கிலிலான ஆசனம் முறிகிறது. நிலவறையிற் சென்ற கிருஷ்ணன் சற்றே நெடிது உயர்கிறார். கீழே இருந்த மல்லர்கள், அரக்கர்கள், வீரர்கள் நெரிபட்டு நசுங்குகிறார்கள். திருவடி பாதாளம் வரையும், திருமுடி விண்முகடு வியாபிக்கிறது. துரியோதனாதியோர் திகைக்கின்றனர். இது துரியோதனனுக்கு காட்டிய விஸ்வரூபம். இன்னோர் விஸ்வரூபம் காண்போம்.

வாமனாவதாரத்தில் மாவலிச்சக்கரவர்த்தியிடம், "நான் தவம் செய்ய மூன்று அடி நிலம் தரவேண்டும்" எனக் கேட்கின்றார். மாவலி உடன்படுகின்றான். வாமனன் ஆகாயமளவு உயர்ந்து ஒரு அடியில் விண்ணுலகையும், ஒரு அடியால் பூவுலகையும் அளக்கின்றான். மூன்றாம் அடிக்கு நிலம் இல்லை. எனவே மாவலியின் தலையில் காலை வைத்துப் பாதாளத்தில் அழுத்தி அவன் செருக்கை அடக்குகின்றார். இது வாமனாவதாரத்தில் எடுத்த திருப்பெருவடிவம்.

இந்தவகையில் நோக்கும்போது எங்கும் நிறைந்த முழுமுதற் பொருளாகிய சிவபெருமான், அவரால் தோற்றுவிக்கப்பட்ட முருகப்பெருமான், சிவனின் உடம்பில் சரிபாதியாக நின்று இயங்கும் திருமால் மூவர்க்கும் பேதம் இல்லை. மூவரும் ஒருவரே. அவர் சர்வேஸ்வரன்.

"யாது ஒரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கு
மாது ஒரு பாகனார் வருவான் காண்"

## கயிலாயப் பெருமான்

வழக்காடு செய்து இறை தத்துவத்தை
விளக்கீடு செய்யும் ஒளிநாளில்
அளவிலாக் கருணை கொண்டு கயிலாயப்
பெருமான் காட்சியருள் பொழிய
நிழலென அமரர்க்கும் தேவர்க்கும் அசுரர்க்கும்
நினைவஞ்சலி செய்தருள்பெறும் இந்நாள்
இளமை குன்றாக் குமரன் அவதரித்தருள்
பாலிக்கும் கார்த்திகைத் தீபத்திருநாள்!

–இராம ஜெயபாலன்–

நன்றியுணர்வுதான் நெருங்கிய உறவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் இறைஇயலும்

திரு த. நாகராசா அவர்கள்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

என்பது வள்ளுவர் வாக்கு. அந்த வகையில் பார்க்கும்பொழுது அன்பினால் எதையும் சாதித்துவிடலாம் என்பதை எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டும். அன்பினால் லௌகீக இன்பங்களைப் பெறுவது மட்டுமன்றி இறைவன் திருவருளைக்கூட பெற்றுவிடலாம். உலகிலுள்ள கிறிஸ்தவம், இஸ்லாம், இந்துமதம், பௌத்தம் போன்ற மதங்கள் இறையியலைப் பெறுவதற்கு அன்பினை முக்கிய சாதனங்களாக வைத்துள்ளன. பௌத்தமதம் அன்பினை வலியுறுத்திக் கூறும் மதமாக உள்ளது. புத்தபெருமான் அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் இன்ப ஜோதி, அன்புதான் உலக மகா சக்தியென்ற போதனைகளை சிறப்பாக உலகிற்கு எடுத்துக்காட்டியவர். அதனால்த்தான் அவர் போதித்த பௌத்தமதம், இலங்கை, ஜப்பான், தென்கிழக்காசிய நாடுகளில் சிறப்புமிகு மதமாக போற்றப்பட்டு வருகின்றது. மகாவீரரால் தோற்றுவிக்கப்பட்ட சமணமதம் முழுக்க முழுக்க அன்புடன் கலந்த ஜீவகாருண்யத்தை பேணி வந்தது என்றாலும் உலக நிலையாமைக்கு முக்கிய இடம்கொடுத்து வந்த காரணத்தாலும், மக்களால் பின்பற்ற முடியாத துறவு நிலையைப் பேணிவந்த காரணத்தாலும், மக்கள் அதனைப் பின்பற்றமுடியாமல் விட்ட காரணத்தாலும் இம்மதம் காலப்போக்கில் தளர்ச்சி அடைந்துபோயிற்று.

எமது இந்துமதம் சிந்துவெளி நாகரிகத்திலிருந்து தோற்றம்பெற்றது. சைவம், வைஷ்ணவம், சாக்தம் என ஆரம்பகாலத்தில் தோற்றம்பெற்று காலப்போக்கில் சாக்தமதம், இவ்விரு மதமாகிய சைவம், வைஷ்ணவம் என்பவற்றுக்கிடையே கலந்து வட இந்தியாவையும், தென் இந்தியாவையும் தனக்கென உரித்தான இடமாகப் பெற்று தமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை வளர்த்து வளமுள்ள மதமாயிற்று. குறிப்பாக சைவமதம் கி.பி. 33ஆம் நூற்றாண்டிலும் 6ஆம் நூற்றாண்டிலும் ஆரம்பக் கோடிட்டிருந்தாலும் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இதன் ஆரம்ப வளர்ச்சியினை தமிழகத்தில் கண்டு கொள்ளலாம். அதன்பிறகு வரைவிலக்கணம் இட்டுவளர்ந்த மதங்கள்தான் சைவமும், வைஷ்ணவமுமாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 7ஆம் நூற்றாண்டில் அப்பரும், சம்பந்தரும் தமிழ்நாட்டில் தோன்றி இறை அன்பினை மக்களிடையே தோற்றுவித்தனர். சரியைத் தொண்டினையும், கிரியைத் தொண்டினையும் செய்து வந்த இருவரும் அன்பின் வடிவே நின்று தமிழ் நாட்டில் சைவத்தை வளர்த்தனர். உதாரணமாக சம்பந்தர் பாடிய பின்வரும் பாடலொன்று இதற்கு எடுத்துக் காட்டாகும்.

நல்ல நேரம் ஒருமுறை தான் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்நெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

இப்பாடலின்மூலமாக இறைவன்மீது கொண்ட அன்பினை சம்பந்தர் எடுத்துக்காட்டு கின்றார். இறைவனை வணங்கும்போது அன்புகொண்டு வணங்கவேண்டுமென்றும் அது மட்டுமன்றி உள்ளம் உருகி கண்ணீர்விட்டு வணங்கவேண்டுமென்பதை மேற்குறிப்பிட்ட பாடலின்மூலமாக எடுத்துக்காட்டுகின்றார். இதை அக்காலத்தில் வாழ்ந்த மன்னரும் மக்களும் இறைவன்மீது அன்பு கொண்டு தமது பக்திநெறியினை வெளிப்படுத்தினர். சம்பந்தர் அப்பர் என்பவர்களால், தொடங்கப் பட்ட அன்புநெறி அவர்கள் காலத்தில் மட்டு மன்றி இன்றுவரையும் மக்களிடையே நிலை பெற்றுக் காணப்படுகின்றது. பெரியபுராணம் சைவத் தமிழ் காப்பியம். இது சோழர் காலத்தில் சேக்கிழார் பெருமானால் எழுதப் பட்டது. இதுவரை சமண காப்பியமும், பௌத்த காப்பியமும் பெற்ற செல்வாக்கினை சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரியபுராணம் வெற்றி கண்டது.

குறிப்பாக, அப்பர் பெருமானின் கைலையாத்திரையை சேக்கிழார் தனது பெரியபுராணத்தில் கூறும்பொழுது கைலை யாத்திரையைக் காணச் சென்ற அப்பர் சிவ பெருமான் மீது கொண்ட அன்பினால் கைலைக் காட்சியைக் காண நடந்தும், தவழ்ந் தும், உருண்டும் சென்றாரென்றும், இறுதியில், உடல் தேய்ந்துவிட போகமுடியாமற் கிடந் தார். அப்பொழுது, முனிவர் வடிவில் வந்த இறைவன், "முனிவர்கள் கூடப்போகமுடியாத இடத்திற்கு மானிடராகிய நீர் போவது எங்ஙனம்!" என்றாரென்றும், அதைக் கேட்ட அப்பர், "ஆளும் நாயகன் இருக்கை கொண்டல்லால், மாழும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று கூறியதாக சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். இதன்மூலமாக சேக்கிழார் பெருமான் தன்கூற்றாகக் கூறாமல் அப்பர் கூற்றாக இறைவன் மீது வைத்த அன்பை அல்லது காதலை எடுத்துக் காட்டு கின்றார். எனவே அப்பருடைய பக்தியில் மட்டுமன்றி பக்தி வைராக்கியத்தினையும் சேக்கிழார் எடுத்துக் காட்டுகின்றார். வைகை ஆற்றங்கரையில் இறைவனின் திருக்கோலத் தைக் கண்டதும் அப்பர் ஆடினார், பாடினார், அழுதார் என்று சேக்கிழார் கூறுகின்றார். எனவே இறைவன்மீது கொண்ட அன்பினால் நிலையாமையாகிய உடலைக் கூடக்கவனி யாமல் இறைவனது காட்சியைக் காண வேண்டுமென்று ஆசைப்பட்டது அன்பினால் என்பதை மறுக்கமுடியாது. காதலால் ஆடினார், பாடினார் என்று மட்டுமே கூறாமல் அன்பு மேலீட்டினால் அழுதார் என்றும் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். எனவே அப்பரின் கைலைக் காட்சியின் மூலம் அன்பையும் இறைஇயலையும் சேக்கிழார் பெருமான் தொடர்புபடுத்திக் காட்டுகின்றார்.

பல்லவர் கால பக்திநெறிக்கு வித் திட்டவர்களில் மணிவாசகப் பெருமானும் குறிப்பிடத்தக்கவர். பாண்டிய மன்னனிடம் மந்திரியாக இருந்தவர். குதிரை வாங்கச் சென்று இறுதியில் திருப்பெருந்துறையில் குருவடிவாகவந்த சிவனிடம் ஞானம் பெற்ற துடன், தான்மேற்கொண்ட கடமையை செவ் வனே செய்யாது, இறுதியில் பாண்டிய மன்ன னால் பிரம்படிபட்டவர். இவை எல்லா வற்றிற்கும் சிவன்மீது கொண்ட அன்பே

*அச்சமுடையவர்களிடம் எது இருந்தாலும் பயன்படாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய காரணமானது. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் தேனினும் இனிதென்பர். அதுமட்டுமன்றித் "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகாரென்பர்". அந்த வகையில் மணிவாசகர் பாடிய திருவாசகம் அன்பு நெறியை வெளிப்படுத்திச் செல்கின்றது. திருவாசகத்தில் ஒரு இடத்தில் "நானும் பொய் நீயும் பொய் என் மெய்யும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்கிறார். எனவே அன்பின் காரணமாக ஏற்படும் "அழுதல்" என்பது பொதுவாக எல்லா நாயன்மார்களும் கையாழுமொருயுத்தியாகும். இதைக் கண்ணப்பர் வாழ்க்கை வரலாற்றில் கூட கண்டு தெளியலாம்.

இறைவன்மீது கொண்ட அன்பின் காரணமாக எந்த அடியார்களும் செய்யத் துணியாத செயலாகிய தனது கண்ணைக் கொடுக்கத் துணிந்தமை சிவன்மீது கொண்ட காதலால் அல்லது அன்பினால் என்று கூறலாம். எனவேதான் "கண்ணப்பர்" என்ற நாமத்தையும் பெற்றார். ஒரு கண்ணைக் கொடுத்த நிலையில் மறு கண்ணையும் கொடுப்பதற்காக கண்ணப்பர் முயன்ற வேளை இறைவன் தோன்றி "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோற்றலே நில்லு கண்ணப்ப" என்றுகூறி அவரது அன்பை வெளிப்படுத்தினார். இறுதியில் கண்ணப்பரை தன்னுடன் சேர்த்துக் கொண்டது மட்டுமன்றி திண்ணனார் என்ற பெயர் கொண்டவர்க்கு "கண்ணப்பர்" என்ற சிறப்பு நாமத்தையும் சூட்டினார். எனவே கண்ணப்பர் வாழ்க்கை வரலாற்றின்மூலமாக அன்பிற்கும் இறை இயலுக்குமுள்ள தொடர்பினைக் கண்டறியலாம். முன்பு செய்த தவத்தின் காரணமாக அன்பினை எடுத்துக்காட்ட ஆறேநாளில் ஞானம் பெற்று அருள் முத்தியடைந்தார். கண்ணப்பரும் ஏனைய நாயன்மார்களும் இறைவன்மீது அன்பு செலுத்திய போதிலும் கண்ணப்பரின் அன்பு இறைஇயலுக்கு ஏற்றதாகிவிட்டது.

அன்பு நெறிக்கு எடுத்துக்காட்டாக திருப்பல்லாண்டு பாடிய சேந்தனாரைக் குறிப்பிடலாம். ஒருபொழுது தில்லை நடராசப் பெருமானின் தேர்த்திருவிழாவின்போது தேர்ச்சில்லு புதையுண்டு தேரோடாது நின்றது. இதைக் கண்ட சேந்தனார் பல்லாண்டு பாடி தேரோடச் செய்தார். இதற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலொன்று உதாரணமாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

"சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே"

இப்பாடலின்மூலமாக சேந்தனாருக்கு இறைவன்பாலிருந்த அன்பினையும், இறைவன் சேந்தனார்மீதுகொண்ட கருணையினையும் எடுத்துக்காட்டுகின்றது. இவர் பாடியதும், தேரோடியது மட்டுமன்றி "இறைவன்பால் ஆரும் பெறாத அறிவு பெற்றேன்" என்றும் "பெற்றதார் பெறுவார் இவ்வுலகில்" என்றும் கூறுகிறார். எனவே அன்பிற்கும் இறைஇயலுக்குமுள்ள தொடர்பினை இதன்மூலமாகவும் அறிய முடிகின்றது.

(தொடரும்....

விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தயிர்க்காரியும் அவள் கனவும்

கோகுலபுரத்தில் வசித்துவந்த மக்கள், தங்கள் வீடுகளில் பசுக்களை வளர்த்து அவைகளின் மூலம் கிடைக்கும் பாலை தங்கள் கிராமத்தில் மட்டுமல்லாது, பக்கத்துக் கிராமங்களிலும் சென்று விற்று அதன்மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு நல்ல விதமாக வாழ்ந்து வந்தார்கள்.

கோகுலபுரத்தில் கோதை என்னும் பெயருடைய பெண் வசித்து வந்தாள். அவளுடைய தாய் தந்தையர் இருவருக்கும் வயது அதிகமான காரணத்தால் அவர்களால் வெளியில் சென்று எந்த ஒரு வேலையையும் செய்ய முடியாமல், வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்கள். கோதை தன் தாய் தந்தையரைக் காப்பாற்ற, தன் வீட்டில் வளர்த்து வந்த பசுக்களிடம் இருந்து கிடைக்கும் பாலைக் காய்ச்சி தயிராக்கி அதை விற்று தன் தாய் தந்தையரை காப்பாற்றி வந்தாள்.

கோதை தன் சிறு வயது முதலே குடும்பப் பாரத்தைச் சுமந்து வருவதால், அவள் மனதில் நிறைய நிறைவேற்ற முடியாத ஆசைகளை வளர்த்துக்கொண்டாள். அவளுடன் ஒன்றாகப் பழகிய பல பெண்கள் காலாகாலத்தில் திருமணமாகி தன் கணவன் வீடுகளுக்குச் சென்று விட்டதை பார்க்கும் போது கோதை தன் மனதில், "தனக்கும் திருமணம் ஆக வில்லையே" என்று ஏங்குவாள். அவள் குடும்ப சூழ்நிலை அவளுடைய வளமான வாழ்க்கைக்கு தடை விதித்துக் கொண்டிருந்தது.



ஒரு நாள் கோதை தன் வீட்டில் இருந்து தயிர்க் கூடையை தலையில் சுமந்து கொண்டு பக்கத்துக் கிராமத்துக்குச் சென்று கொண்டிருந்தாள். அவள் நடந்து சென்றுகொண்டிருந்த பாதையின் இரண்டு பக்கமும் பச்சைப் பசேலென்று நெல்வயல்கள் குளிர்ந்த காற்றை அள்ளிவீசிக் கொண்டிருந்தன. அவள் நடந்து செல்லும்போது அந்தக் குளிர் காற்று கோதையின் மனதுக்கு மிகவும்

யாரிடத்தில் தயவு அதிகம் இருக்கிறதோ, அவரிடத்தில் கடவுள் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமாக இருந்தது. கோதையும் அந்தக் குளிர்காற்றின் தன்மையினால் தன்னை மறந்து அரைத் தூக்கத்தில் நடந்து சென்று கொண்டிருந்தாள். அப்படி நடந்து சென்று கொண்டிருந்தவளுக்கு அவளுடைய மனதில் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய எண்ணங்கள் அலைமோத ஆரம்பித்தது.

அவளுக்குத் தன்னைப்பற்றி உயர்வான எண்ணங்கள் தலைதூக்க ஆரம்பித்தது. அவள் தன் தலையில் இருந்த தயிர்க்கூடையை மறந்து கனவில் மிதக்க ஆரம்பித்தாள். முதலில் அவள், தன் தயிர்க் கூடையில் உள்ள தயிரை விற்றால் நிறையப் பணம் கிடைக்கும் என்றும், பணம் கிடைத்த உடன் அந்தப் பணத்தைக் கொண்டு, நிறைய நகைகளை வாங்கி அணிந்துகொண்டு பெரிய பணக்காரப் பெண்ணாக ஊரில் நடமாட வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டாள். பிறகு மீதி உள்ள பணத்தில், உயர்ந்த பட்டாடைகளை வாங்கி உடுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணினாள். பட்டாடைகளையும், நிறைய நகைகளையும் அணிந்து செல்லும்போது, அவளைப் பார்க்கும் வாலிபர்கள் அவளிடம் வந்து அவளை மணந்து கொள்ள ஆசைப்பட்டுக் கேட்கும்போது, அவள் சற்றும் அவர்களை மதிக்காமல் தலையை அசைத்து முடியாது என்று கூறவேண்டும் என்ற எண்ணத்தில், தன் தலையில் தயிர்க்கூடை இருப்பதையும் மறந்து தலையை அசைக்கவும், அவள் தலையில் இருந்த தயிர்க்கூடை கீழே விழுந்து அவ்வளவு தயிரும் கீழே கொட்டிவிட்டது. தயிர் கீழே கொட்டிய பிறகுதான் கோதை தன் கனவில் இருந்து மீண்டு தன் தவறை உணர்ந்தாள்.

தனக்குள்ள தகுதியை மறந்து, இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துக்கொண்டு செயற்பட்டதால் கோதை இருந்ததையும் இழந்து வருத்தப்பட்டாள்.

---

## சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை- 22

பல்லவி

**பொன்னனை வாழ்வுதனை பூதலத் தருள்வாய்**
**சென்னிமேற் கரங்குவித்துச் சேவிக்கும் எந்தனுக்கே**

அநுபல்லவி

**நன்னலந் தருந்தீர்த்த நதியினில் நீராடி**
**குன்றெறிந்த வேலா! குமரா! என்றழு மெனக்கு**

சரணம்

**உன்தனை நவியெள்ளி உரைத்திடு பிரமன்தன்**
**சென்னியைக் கிள்ளிடவே செந்தூர்த் தலம் சென்றே**
**அன்னசந் நிதிவாரி அநுதினமும் மூழ்கி**
**பொன்னொளிர் கோபுரமாய்ப் பொலிந்திட அருளியவா!**
**தன்னுற வதுஓடி உன்னுற வதுநாடி**
**பன்மட முறைவோர்க்கும் சந்நிதி வருவோர்க்கும்**
**அன்னம தீந்துவக்கும் அன்னதானக் கந்தா!**
**இன்னமும் தாமதமேன் இரட்சிப்பாய் சண்முகனே!**

-இராசையா குகதாசன்-

(பொன்னனை)

மற்றவனை ஏமாற்றியவனை மற்றவன் ஏமாற்றுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| சதாசிவம் நினைவாக நிமலன் அம்பிகா | | கரவெட்டி | 2000. 00 |
| வ. மகிலன் | | பருத்தித்துறை | 2000. 00 |
| சி. சுகிர்தலிங்கம் | | பருத்தித்துறை | 1000. 00 |
| செ. கனகரெத்தினம் | | கொக்குவில் | 5000. 00 |
| பா. சுரேஷ்குமார் | மகரம்பக்குளம் | வவுனியா | 5000. 00 |
| S. வினோதினி ஆசிரியர் | சாவகச்சேரி இந்துக்கல்லூரி | | 5000. 00 |
| வரலக்சுமி செல்வராசா | | தெல்லிப்பழை | 1000. 00 |
| சந்திரமோகன் அபிராம் | | கரவெட்டி | 6000. 00 |
| குமாரசாமி பாக்கியம் | யூனியன் ஒழுங்கை | கரவெட்டி | 5000. 00 |
| செல்வி நேசமலர் ரீச்சர் | | உடுப்பிட்டி (கனடா) 300 டொலர் | |
| ந. ராகுலன் | | சுவிஸ் | 1000. 00 |
| வே. இராமநாதன்மூலம் பற்றிக் ஹரிகன் | | அமெரிக்கா | 60000. 00 |
| க. பொன்னையா | ஆஸ்பத்திரி வீதி | அச்சுவேலி | 1000. 00 |
| திருமதி நாச்சியார் செல்வநாயகம் | | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ஜனார்த்தன் ரியான் | | ஜேர்மனி | 5000. 00 |
| குணசீலன் சர்மினி | ஊரெழு கிழக்கு | சுண்ணாகம் | 20000. 00 |
| கல்பனா நிர்மலராஜன் | | லண்டன் 30Kg அரிசி | 5000. 00 |
| வரலக்சுமி வரதராஜன் | யாமாவளவு | தெல்லிப்பழை | 1000. 00 |
| அருணகிரிநாதன் சிவநடராஜா | வட்டுவடக்கு | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| அ. தவக்குமார் | | லண்டன் | 2000. 00 |
| இமானுவல் பல்தஷார் | | கனடா | 11000. 00 |
| நாகையா சிவசிதம்பரலிங்கம் (இளை. அதிபர்) | | குப்பிளான் | 5000. 00 |
| செ. சூரியகுமார் | | இன்பர்சிட்டி | 5000. 00 |
| சி. நவரத்தினம் | | சக்கலாவத்தை | 5000. 00 |
| லதுனன் | | கனடா | 2000. 00 |
| குமாரசாமி குடும்பம் | | பத்தமேனி | 2000. 00 |
| துரைசாமி ஐயர் | | மாவிட்டபுரம் | 5000. 00 |
| சி. நகுலன் | | கனடா | 5000. 00 |
| க. மயில்வாகனம் | பாரதிவீதி | மட்டக்களப்பு | 10000. 00 |
| சோதி நாராயணசிவம் | காட்டுப்புலம் | தொண்டைமானாறு | 5000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி | சாளம்பை | கரணவாய் | 1000. 00 |

பெருமனம் உள்ளவருக்கு உலகமே குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| க. ரகுநாதன் | | வல்வெட்டி | 5000. 00 |
| வ. சதீஸ்குமார் | கண்ணன் ரெக்ஸ் | திருநெல்வேலி | 10000. 00 |
| நீரஜா சத்தியசீலன் | மக்கள் வங்கி | யாழ்ப்பாணம் | 2500. 00 |
| ஆகாஷ் ஜீவகாந்தன் | | கனடா | 5000. 00 |
| மகாலிங்கம் வைரமுத்து | | குப்பிளான் | 4000. 00 |
| R. சுகந்தினி | | திக்கம் | 1000. 00 |
| செல்வி பிருந்தா குமாரலிங்கம் | | நோர்வே | 10000. 00 |
| சின்னத்துரை சோதிமுத்து | | கரவெட்டி | 1000. 00 |
| க. யோகேந்திரநாதன் | தும்பளை | பருத்தித்துறை | 1000. 00 |
| K. உமாசங்கர் | | பருத்தித்துறை | 1000. 00 |
| K. விஷ்ணுமோகன் | | உரும்பராய் | 5000. 00 |
| கந்தையா சிற்றம்பலம் நினைவாக மாணிக்கவாசகர்மூலம் | | அச்சுவேலி | 10000. 00 |
| ச. ஆகாஷ் | | | 11000. 00 |
| கனகரட்ணம் ரவிச்சந்திரன் | | ஜேர்மனி | 12000. 00 |
| சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன் | | லண்டன் (துன்னாலை) | 5000. 00 |
| கு. சிவசுப்பிரமணியம் | | சண்டிலிப்பாய் | 10000. 00 |
| பா. செல்வராணி | | துன்னாலை வடக்கு | 500. 00 |
| R. ராமச்சந்திரன் | | வெள்ளவத்தை | 5000. 00 |
| கனகராசா குடும்பம் | தாவடி தெற்கு | கொக்குவில் | 7000. 00 |
| சகாதேவன் சண்முகநாதன் | | சிறுப்பிட்டி மேற்கு | 3000. 00 |
| ஜெயயாழினி பரணீதரன் | | நவிண்டில் | 10000. 00 |
| ராகினி நினைவாக க. சரஸ்வதி கொற்றாவத்தை | | வல்வை | 2000. 00 |
| M. தர்ஷினி | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சி. வல்லிபுரம் | | தும்பளை | 1000. 00 |
| க. இலட்சுமி | | வவுனியா | 5000. 00 |
| சிவரூபி செல்வராஜ் | | இடைக்காடு | 1000. 00 |
| சிவா சிவனேஸ்வரி | | இடைக்காடு | 1000. 00 |
| செ. பாலச்சந்திரன்மூலம் N. செல்வரெட்ணம் | | லண்டன் | 10000. 00 |
| ஜெயக்குமார் மூலம் குகதாசன் | | நெல்லியடி | 5000. 00 |
| க. சந்திரசேகரம் | | கனடா | 3000. 00 |
| சுப்பிரமணியம் நவரட்ணம் (காந்தி) | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| கு. விஜிந்தன் | | சித்தங்கேணி | 1000. 00 |
| சு. அனுசன் | | சித்தங்கேணி | 500. 00 |
| ஓர் அன்பர் | ILFORD | லண்டன் | 5000. 00 |
| கலைவாணி | | இடைக்காடு (கனடா) | 6000. 00 |
| தங்கராசா சரஸ்வதி | | கனடா | 10000. 00 |
| சபாபதிப்பிள்ளை அஞ்சலதிபர் | | அவுஸ்திரேலியா | 6000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

6. திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியாஎன வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே.

## பதவுரை

பணி யா என- 'எனக்கு நீ இடும் கட்டளைகள் எவையோ?' என்று வினாவி, வள்ளி பதம் ப்ணியும்- வள்ளியம்மையின் பாதத்தை வணங்குகின்ற, தணியா- குறைவு இல்லாத, அதிமோக- மிகுந்த காதல் கொண்டுள்ள, தயாபரனே- மிகுந்த கருணைக் கடவுளே!, திணி ஆன- மனோசிலைமீது- மிகவும் கடினமான மனமாகிய கல்லின்மீது, உன தாள்- உமது திருவடியாகிய, அணிஆர் அரவிந்தம் அது அரும்புமதோ- அழகுநிறைந்த தாமரை மலருமோ?

## பொழிப்புரை

எனக்கு வேலை என்ன என்று கேட்டு, வள்ளியம்மையின் திருவடியை வணங்குகின்ற, குறைதல் இல்லாத மிகுந்த அன்பையுடைய கருணைக் கடவுளே! கடினமான என் மனமாகிய கல்லின்மீது, உமது பாதமாகிய அழகு நிறைந்த தாமரை மலர் மலருமோ?

## விரிவுரை

***திணியான மனோ சிலை:-***

மனம் இறைவனை நினைத்து உருகுதல் வேண்டும். அங்ஙனம் உருகாது கெட்டியான கல்லைப் போல இருக்கின்றது.

மனம் சிலை என்ற சொற்கள் மனோசிலை என்று வந்தது.

***உனதாள் அணியார் அரவிந்தம் அரும்புமதோ:-***

அணி ஆர்; அணி அழகு; ஆர் நிறைதல்:-

மனம் கல்லைப்போல் கடினமாக இருப்பதால் அது உருகுவதில்லை.

அம் மனம் இறைவனை நினைந்து உருகி மென்மையடையுமானால் மென்மையான மனத்தில் முருகன் பாத தாமரை மலரும்.

தாமரைக்குப் "பங்கஜம்" என்று பேருண்டு. பங்கம்- சேறு; ஜம்- தோன்றுவது. சேற்றில் தோன்றுவதால் தாமரை பங்கஜம் எனப்பட்டது. சேற்றில் மலரும் தாமரை கல்லின்மீது மலராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனதாள் என்ற சொல்லில் உன என்றதன் ஈற்றிலுள்ள அகரம் அசைநிலை.

இறைவனை நினைந்து நினைந்து உருகும் அடியாருடைய உள்ளத்தில் இறைவன் புகுந்து உறைவான் என்கிறார், அப்பரடிகள்.

“நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்”

“அரும்புமதோ!” ஈற்றிலுள்ள ஓகாரம் எதிர்மறை.

பணியா என வள்ளி பதம் பணியும்

பணியா என- “நான் உனக்குச் செய்யும் ஏவல் என்ன?” என்று வள்ளியிடம் வடிவேற் பெருமான் வினாவி அவரை ஆட்கொள்ளும் பெருங் கருணையினால் வணங்கினார்.

“நீ செய்ய வந்த வேலை என்ன?” என்று கேட்டு அருளினார் எனவும் பொருள்படும்.

வள்ளியம்மை முருகனுடைய அருளுக்காக அரும்பெரும் தவஞ் செய்தவர். ஆதலினால் அவரை இரந்தும் பணிந்தும் ஆட்கொண்டருளினார்.

“தெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந்து.... நின்றவன்”

-குமரகுருபரர்-

அன்பு செய்வார்க்கு இறைவன் ஏவல் புரிவான்; இது அவனுடைய அளப்பருங் கருணை. சுந்தரருக்கு இறைவன் இரவில் தூது சென்ற அருட் செயலை உன்னுக.

“நின் ஆர்வலர் தொழுதகை அமைதியின்
அமர்ந்தோயும் நீயே! அவரவர் ஏவலாளனும் நீயே”

-பரிபாடல் 4-70-72

“கூம்பித் தொழுவார் தம் குற்றேவலைக்
குறிக் கொண்டிருக்கும் குழகா போற்றி”

-அப்பர் 6-5-4

“வனசரி பதயுக கஞ்சம் வணங்கும்
பாக்ய கதம்பன்”

-திருவகுப்பு (18)

இறைவன் வள்ளியைப் பணிந்தது அளவற்ற கருணையினால் நிகழ்ந்தது என்பதைக் குறிக்கும் பொருட்டு ‘தயாபரனே’ என்றார்.

## கருத்துரை

வள்ளி மணவாளா! உன் பாதமலர் என் மனத்தில் மலர அருள் செய்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

# திருவிளையாடல்



-ஆறுமுகநாவலர்-

படலம்-55

## சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்

கடைச்சங்கப் புலவர் நாற்பத்தெண்மரும் வெவ்வேறு தமிழ்ப் பாடல்கள் செய்து, செருக்குற்று, தங் களைத் தாங்களே பெரிதென மதித்து, தங் களுக்குள் மாறுபட்டு நின்றனர். இறுதியில், சோமசுந்தரக்கடவுள் சந்நிதியையடைந்து, "அடியேம்கள் தொடுத்த இப்பாடல்களுள்ளே நன்றுந் தீதுந் தூக்கி, வேறுபாடு காட்டி, அடியேங்களின் ஐயத்தைத் தீர்த்தருளும்" என விண்ணப்பஞ் செய்தார்கள்.

சிவபெருமான் மூல லிங்கத்தினின் றும் ஒரு புலவராய்த் தோன்றி வந்து, "புல வீர்காள்! இந் நகரத்திலே தனபதி எனப் பெயர்கொண்ட ஒரு வணிகன் இருக்கிறான்; அவன் மனைவி குணசாலினி; அவர்கள் செய்த பெருந் தவத்தினாலே ஒரு புத்திரன் அவதரித்திருக்கிறான்; அவன் பெயர் உருத் திரசருமன்; அவன் ஐந்து பிராயமுடைய ஊமை; அவனை நீங்கள் அழைத்துச் சென்று உங்கள் பாடல்களைச் சொல்லுங்கள் அவன் புத்திக்கிசைந்த பாடல் எதுவோ, அதுவே யாவராலும் நன்கு மதிக்கப்படும் பாடலாகும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். புலவர்கள், "எம்பெருமானே! ஊமையான அவன் நல்லது கெட்டது அறிந்து எமக்குத் தெரிவிப்பது எப்படி?" என்றார்கள். அதற்குச் சிவபெருமான், "அவ்வூமைப்பிள்ளை தனக்கிசையச் சொல் லாழமும் பொருளாழமும் கண்டானாயின், கண்ணீர் வார- மெய் சிலிர்ப்ப- தலை யசைத்து மகிழ்ச்சி கூறுவன். அப்பொழுது உங்கள் கலகமெல்லாம் நீங்கிவிடும்" என்று அருளிச் செய்துவிட்டு மறைந்தருளினார்.

அதன்படியே புலவர்கள் எல்லாரும் உருத்திரசருமனை அழைத்துவந்து சங்கப் பலகையில் இருத்தி, தாம் அவன் முன்பாக கீழிருந்து, தங்கள் தங்கள் பாடலைச் சொன் னார்கள். உருத்திரகுமாரன் அவைகளைக் கேட்டு, சிலவற்றின் சொல்லாழத்தை மகிழ்ந்து தலையசைத்தும் - சிலவற்றை இகழ்ந்தும், சிலவற்றின் பொருளாழத்தை மகிழ்ந்தும்- சிலவற்றை இகழ்ந்து வெறுப்புக் காட்டியும் கொண்டான். சிலரது பாடலின் சொல்லாழத் தையும் பொருளாழத்தையும் ஒருங்கே புகழ்ந் தான். நக்கீரர், கபிலர், பரணர் ஆகியோரின் பாடல்களைக் கேட்டபோது திருமேனி பூரித்து- கண்ணீர் வார- மெய்சிலிர்த்து- சிரமசைத்து பெரு மகிழ்ச்சியை வெளிக்காட்டினான். அத் துடன் சங்கத்தார் கலகம் ஒழிந்தது. அம்மூவர் செய்யுளும் பாடற்றிலகமாகச் சிறந்தோங்கின.

இறைவனை அறிந்து உணர்வதே உண்மையான கல்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலம்-56

# இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

சம்பக பாண்டியன் சிவபதமடைந்த பின்பு வழிவழியாக பதினைவர் பிறந்து வளர்ந்து அரசு செய்தார்கள். அவர்களுள்ளே, குசேல பாண்டியன் இலக்கண இலக்கிய நூல்களெல்லாங் கரைகண்டோனாதலால் சங்கப்பலகை அவனுக்கு ஏற இடங்கொடுத்தது. அவனது கல்விச் சிறப்புப்பற்றிக் கேள்வியுற்ற கபிலரின் நண்பனான இடைக்காடர் தமிழ்ச் செய்யுள் செய்துகொண்டு வந்து, அவனைக் கண்டு வாசித்தார். சொற்சுவை- பொருட்சுவை அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கவல்ல நல்லறிவு கொண்ட பாண்டியன் பொறாமையினாலே முடியசைத்து முக மலர்ச்சி எதுவும் காட்டாமல் யாதொன்றும் பேசாது வாளாவிருந்தான். இடைக்காடர், தன் மானம் பிடர்பிடித்துத் தள்ள திருக்கோயில் புகுந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கி நின்றார். திருவாலவாயுடைய நாயகரே! தமிழறியும் பெருமானே! குசேல பாண்டியன் கல்விகேள்விகளிற் சிறந்தோனெனக் கேள்வியுற்று, செய்யுள் செய்துகொண்டு வந்தேன். அவன் முடியசைக்காது அஃறிணைப் பொருள் போல அமர்ந்திருந்து என்னை அவமதித்தான். அவன் அவமதித்தது என்னையல்ல! சொல் வடிவாகிய உமாதேவியாரையுஞ் சொற் பொருள் வடிவாகிய உம்மையுமல்லவா இகழ்ந்தான். எனக்கென்ன?" என்று கூறிவிட்டு மிகுந்த கோபத்துடன் வடதிசை நோக்கி நடந்தார். அதனைச் திருச்செவிமடுத்த சிவபெருமான் இடைக்காடருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்வு உண்டாகும் பொருட்டு, இலிங்க வடிவத்தினை மறைத்து உமாதேவியாரோடும் எழுந்து, புறம் போந்து, தமது திருக்கோயிலுக்கு நேர் வடக்கே, வைகாயாற்றுக்குத் தெற்கே ஓராலயங்கண்டு அங்கெழுந்தருளினார். சங்கப் புலவர்களும் எழுந்து, சிவபெருமான் போன வழியே போய் அங்கிருந்தார்கள்.

அன்றிரவு புலர வரும் வைகறையிலே, திருப்பள்ளியெழுச்சிக் காலத்திலே சேவிக்க வந்த அடியார்கள் சிவலிங்கத் திருமேனியைக் காணாது, "இது என்ன அதிசயமோ" எனச் சந்தேகித்து, பயத்துடன் ஓடிச் சென்று பாண்டியனிடம் விபரம் கூறினார்கள். இதனைக் கேட்ட பாண்டியன் அதிர்ச்சியடைந்து- சிங்காசனத்தினின்றும் கீழே விழுந்து- அறிவு மயங்கி- பின்னர் ஒருவாறு தெளிவடைந்து, "எம்பெருமானே! அடியேன் யாது பிழை செய்தேன்? எங்கே போனீர்? எங்கே போனீர்?" என்று கூறித் தளர்ச்சியடைந்தான். அப்பொழுது சிலர் வந்து, "மகாராசாவே! ஓரதிசயம் கண்டோம்! வைகையாற்றுக்குத் தென் கரையிலே சங்கப் புலவர்களோடும் மீனாட்சியம்மையோடும் வந்து இறைவன் எழுந்தருளியுள்ளார்" என்றனர். அவ்வார்த்தையினைக் கேட்ட பாண்டியன் விரைந்து போய் சிவலிங்கப் பெருமானைக் கண்டு வணங்கிக் கண்ணீர் சொரிந்து பேரானந்தக் கடலில் மூழ்கி நின்றான். "எம்பெருமானே! நகரம் பொலிவுழிய உலகமாதாவோடும் இங்கு வந்து எழுந்தருளியிருக்கும் காரணம் யாது? தருமம் தவறியதோ? யார் தவறு செய்தார்? யான் அறியேன்? என விண்ணப்பஞ் செய்து துதித்தான்.

அப்பொழுது, சோமசுந்தரக் கடவுள் ஓரசரீரி வாக்கினாலே பின்வருமாறு திருவாய் மலர்ந்தார். "பாண்டியனே! உன் துதிகேட்டு மகிழ்ந்தோம். சித்தர்கள்- முனிவர்கள்- தேவர்கள் என அனைவரும் ஸ்தாபித்த லிங்கங்களெல்லாம் ஓருழிக் காலத்தில் இல்லாது

*சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிந்தன. இப்போது நாம் வந்திருக்கும் லிங்கம் நம் தோழனாகிய குபேரன் பூசித்த லிங்கம். இத் தெய்வத்தானம் இன்று முதல் "உத்தரவாலவாய்" என வழங்கப்படுக. நாம் கடம்ப வனத்தைவிட்டு ஒருபொழுதும் நீங்குவோமல்லோம். நீயும் தீங்குடையை இல்லை. இடைக்காடன் செய்து வந்த பாடலை இகழ்ந்ததைப் பொறுக்கமுடியாமலே யாம் இங்கு வந்தோம்" என்று அந்த அசரீரி வாக்குக் கேட்டது. பாண்டியன் அதுகேட்டு, "எம்பெருமானே! சிறியேன் செய்த தவறினை மன்னிக்க வேண்டும்" எனக்கூறி வணங்க, சோமசுந்தரக்கடவுள், மீனாட்சியம்மையோடு மீண்டும் தம் திருக்கோயில் புகுந்தருளினார்.

திருக்கோயில் சென்று, விடை கொண்டு திரும்பிய பாண்டியன், இடைக் காடரை சங்கப் புலவர்களோடும் அழைத்துக் கொண்டு போய்த் தனது மாளிகையினுள்ளே புகுந்தான். வாழை தோரணங்களினால் அலங் கரிக்கப்பட்ட மண்டபத்தில் இடைக்காடரை புலவர்கள் சூழப் பொன்னாசனத்தின் மீதி ருத்தி, தான் சிங்காசனத்தின் மீதிருக்க, மங் கல வாத்தியங்கள் ஒலிப்ப, இடைக்காடருக் கும் சங்கப் புலவர்களுக்கும் இரத்தினாபரண மும்- பட்டுந் திரவியமும்- விளைநிலமும்- இன்னும் பலவுங் கொடுத்து உபசரித்தான். அத்துடன் இடைக்காடருக்குத் தான் செய்த குற்றத்தினைப் பொருத்தருளும்படியும் பிரார்த் தித்தான். அதற்குப் புலவர்கள், "மகாராசாவே! உங்கள் சொல்லும் செயலும் எங்கள் கோபத்தைத் தணித்துவிட்டது. சோமசுந்தரக் கடவுளின் திருவருள் இன்னமும் கூடுதலாக உனக்குக் கிடைத்து அளவில்லாத பேரும் புகழும் பாக்கியமும் பெற்று வாழ்வாயாக" என வாழ்த்தினர்.

குசேல பாண்டியன், தான் செய்த பெரும் தவத்தினாலே கிடைத்த ஆண் மகவுக்கு "அரிமர்த்தன பாண்டியன்" என நாமகரணஞ் செய்து, பலகாலம் வாழ்ந் திருந்து, அவனிடம் அரசுரிமையை ஒப்படைத்துவிட்டு இறைவன் திருவடியைச் சென்றடைந்தான்.

## சஷ்டி கவச பாராயணம்

**கந்த சஷ்டி கவசம் போன்ற பாராயண நூல்கள் பிறவிப்பிணிக்கு மருந்தாக அமைபவை. நோயாளியைப் பார்த்து "நீ ஆசாரத்துடன் தான் மருந்து உண்ண வேண்டும்'' என்று சொல்ல முடியாது. நோயாளிகள் குளிக்க முடியாமல் இருப்பார்கள். படுக்கையில் படுத்தபடியே பாராயணம் செய்யலாம். அட்சர சுத்தமாகவும், ஆசாரத்துடனும் சொல்வது நல்லதுதான். இயலாதவர்கள் தம் ஆற்றலுக்கு ஏற்ற முறையில் பாராயணம் செய்யலாம். குறிப்பிட்ட நேரத்தில் தான் பாராயணம் செய்யவேண்டும் என்ற சட்டங்கள் இல்லை. நம் வேலைகளைச் செய்யும்போதே பாராயணம் செய்யலாம். காந்தியடிகள் ராட்டையில் நூல் நூற்றுக்கொண்டே ராமநாம ஜெபம் செய்தார். கந்த சஷ்டிக் கவசத்தை ஒருமுறை படித்தாலே போதும். மிகுந்த நோய்வாய்ப்பட்டவர்கள் படுக்கையில் இருந்தவாறே ஆறுமுறை அல்லது முப்பத்தாறு முறை பாராயணம் செய்யலாம்.**

**-வாரியார் சுவாமிகள்-**

*எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கந்தனே கலியுகத் தெய்வம்



திரு கே.வி. குணசேகரம் அவர்கள்

சிவனுக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், சத்தியோதாரம் என்ற ஐந்து முகங்களே உண்டு. ஆனால் கந்தபுராணத்தில் முருகனாக அவதரித்த சிவனுக்குக் கச்சியப்பர் ஆறுமுகச் சிவன் என்கிறார். ஐந்து முகங்களையுடைய சிவன் கந்தபுராணத்தில் ஆறுமுகங்களுடன் முருகனாகத் தோன்றுகிறார் என்று கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகிறார்.

கந்தனுக்கு ஆறுமுகமுண்டென்றும் அவ் ஆறுமுகங்களுக்குத் தனித்தனியான குணங்கள் உண்டென்றும் அருணகிரிநாதர் கூறுகிறார்.

"ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே"

கச்சியப்பரும் அருணகிரிநாதரும் முருக பக்தர்கள். அதனால் கச்சியப்பர் கந்தபுராணத்தில் சொல்லிய முருகனது பெருமையை அருணகிரிநாதர் திருப்புகழில் சொல்கிறார். சொற்கள் மாறுபட்டாலும் சொல்லப்பட்ட பொருளில் மாறுபாடில்லை.

அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடந்த இறுதியான கொடுமை மிக்கபோர் கந்தபுராணம் கூறும் போர். அதன்பின் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நடைபெறவில்லை. உலகில் இருந்து மக்களையும் தேவர்களையும் வருத்திய அசுரரது குடியைப் பூண்டோடு அழித்தவன் முருகன். அதன்பின் அசுரர்களால் மீளமுடியவில்லை என்று கூறும் கச்சியப்பர் சிவனின் ஐம்பத்து நான்கு சிவ வடிவங்களையும் முருகவடிவாக்கிக் கந்தபுராணத்தில் கூறுகிறார்.

முருகனின் ஆறு திருமுகங்களைப் பற்றி நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் மிகவும் விரிவாகக் கூறுகிறார்.

மாயிருண் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒரு முகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே - ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

இரண்டு நிமிடமாயினும் கடவுளை நினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் வேள்விஓர்க் கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளங்குமே; ஒருமுகம்
செறு நர்த் தேய்த்து செல் சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒருமுகம்
குறவர்மட மகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே; ஆங்கம்
மூவிரு முகனும் முறை நவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பிகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு"

உலகில் மிகுந்துள்ள துன்ப இருளைப் போக்குவது ஆறுதிருமுகங்களிலுமிருந்து வீசும் தெய்வீக ஒளியே. அத்தகைய ஒளியை உடைய முருகனின் திருமுகங்களில் ஒன்று, நூல்களாலும் ஆசிரியர்களாலும் விளக்கமுடியாதவற்றை விளக்குவது. புலவர்கள் முருகனிடம் முறையிட்டுப் பொருளை விளங்கிய வரலாற்றைப் புராணங்கள் கூறுகின்றன. அந்த முகம் சந்திரனது ஒளியைப்போலப் பிரகாசமாகவும், குளிர்மை மிகுந்ததாகவும், அறிவைத் தரக் கூடியதாகவும் இருக்கும். இந்த முகம்தான் தட்சணாமூர்த்திக்குரிய குருவடிவமுகம். தைப் பூசத் திருநாள் முருகனுக்குரியது. அத்தினத்தில் ஏடு தொடக்குவது வழக்கம். குருவாக இருந்து சிவனுக்குபதேசித்த முருகனைக் குருவாகக் கொண்டு முருக தலத்தில் அன்று சைவ மக்கள் ஏடு தொடக்குவார்கள்.

அடியவர்கள் மன்முருகி வேண்டுதல் செயயும்போது மனம் குளிர்ந்து அடியார்களுக்கு வேண்டிய வரங்களை அளிப்பது ஒருமுகம்.

விதிமுறை வழுவாது அந்தணர்கள் செய்யும் யாகங்களைக் காப்பது ஒரு முகம்.

கொடும்போர் செய்வோரை அழித்து, கொடிய போர்கள் வராது காத்து, நீதியை நிலைநாட்டுவது ஒரு முகம்.

குறமடமகளான வள்ளியோடு சேர்ந்து அடியவர்களுக்கு வேண்டிய குடும்ப இன்பங்களை அள்ளித் தருவது ஒரு முகம்.

உலகில் உள்ள அனைத்தையும் ஓர் உருவில் வழங்குவதற்காகச் சிவன் எடுத்த அவதாரமே முருக அவதாரம். அவ் அவதாரம் அனைத்துத் துன்பங்களையும் போக்குமென்பதால் மக்கள் அவனைக் கலியுகவரதன் என்கின்றனர்.

சிவன் தனது பக்தனான மார்க்கண்டேயரின் நலனுக்காகச் யமனைத் தனது காலால் உதைத்தார். சிவன் யமனைக் காலால் உதைத்த வடிவம் காலாந்தகர் வடிவம். இவ்வடிவம் பற்றியும் அதன் தன்மை பற்றியும் கந்தபுராணம் விரிவாகக் கூறுகிறது. அத்துடன் இவ் வடிவத்துக்குரியவன் முருகனாக உருவெடுத்த சிவன் என்றும் கூறுகிறது.

இது தவிர வீரபத்திர உருத்திரன் என்றொரு வடிவம் பற்றியும் கந்தபுராணம் கூறுகிறது. தக்கனது யாகத்தை அழிக்கச் சிவபெருமானது நெற்றிக்கண்ணில் இருந்து முருகனைப் போலத் தோன்றியவர் வீரபத்திரர். இதைப் புராணங்கள் சரபேஸ்வரர் வடிவம் என்று குறிப்பிடக் கச்சியப்பர் அதை முருகன் மீது ஏற்றி வீரபத்திர உருத்திர வடிவம் என்கிறார். புராணங்கள் இதை சரபேஸ்வர வடிவம் என்று கூறுகின்றன.

உண்ணும்போது மௌனமாயிருக்கப் பழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் விதந்து கூறும் வடிவம் பிட்சாடனர் வடிவம். இவ்வடிவத்தைப் பற்றிய குறிப்புக்கள் கந்தபுராணத்தில் உள்ளன. சிவன்தான் முருகன் என்பதைச் சொன்ன கச்சியப்பர் சிவனின் ஒவ்வொரு வடிவத்தைப் பற்றியும் கூறி அதற்குப் பெருமை சேர்ப்பதாக நினைத்து முருகனின் வரலாற்றைக் கூறுவது ஒரு புதிய இலக்கிய வழியாகும்.

சலந்தாரி வடிவமென்பது சிவன் முதிய வடிவத்தில் கமண்டலமேந்தி முனிவராகச் சென்று சலந்திரன் என்பவனை அழித்தார். இவ்வடிவத்தை எடுத்தே முருகன் வள்ளியை மணம் புரிந்தார். அதனால் இவ்வடிவம் கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

சங்கரநாராயண வடிவமென்பது சிவன் வலதுபாகம் சிவனாகவும் இடது பாகம் நாராயணனாகவும் எடுத்த வடிவம். பகவத் கீதையில் மகாவிஷ்ணுதான் முருகன் எனக் கூறுகிறார். அதைவிட அரியும் அரனும் ஒன்றென்று புராணங்கள் கூறுகின்றன. அரியான நாராயணன் முருகனென பகவத்கீதையில் சொல்லப்படுவதால் சங்கர நாராயண உருவில் நாராயணனின் உருவம் முருகனது உருவமாகிறது எனக் கச்சியப்பர் நினைத்திருக்கிறார்.

இவற்றைவிட ஏனைய சிவவடிவங்களைப் பற்றியும், அதன் சிறப்புப் பற்றியும் கச்சியப்பர் கந்தபுராணத்தில் தேவையேற்படும் போதெல்லாம் சொல்கிறார். சிவ மைந்தனான கந்தனின் புகழைப்பாட முனைந்த கச்சியப்பர் ஓரிரு இடங்களில் முருகனின் தந்தையான சிவனைப் பற்றிச் சொன்னாற் போதும் என்று எண்ணாது சிவனது அருட்செயல்கள் அனைத்தையும், சிவனது வடிவங்கள் அனைத்தையும் அவற்றின் பெருமைகளையும் மிகவும் விரிவாகக் கூறுகிறார். இது ஏன் என்ற கேள்வி கந்தபுராணத்தைப் படிப்போரின் மனதில் எழும். சிவன்தான் கந்தன் என்று முதலில் கூறிய கச்சியப்பர் சிவனின் அருட்செயல்களும் வடிவங்களும் முருகனுக்குப் பொருந்தும் என்று கூறி, அவை பொருந்தும் இடங்களையும் அதற்கான வடிவங்களையும், கதைகளையும் கூறுகிறார். கந்தனின் புகழைப் பாட வேண்டிய கந்தபுராணம், சிவனின் புகழையும் மெச்சிப் பாடுகிறது. (முற்றும்)

## கம்பர் தவறு செய்தாரா?

பரதன் கங்கைக்கரையில் வைத்து கோசலையைக் குகனுக்கு அறிமுகப்படுத்தும் காட்சியைக் கூறவந்த கம்பன், “சுற்றத்தார், தேவரோடும் தொழ நின்ற கோசலை” என்று குறிப்பிடுகிறான்.

“இது சொற்குற்றம் ஆகாதா!” என்று நீங்கள் நினைக்கலாம். ஏனென்றால் உயர்ந்த பொருளை முதலில் சொல்வது மரபு. உதாரணமாக தாயும் சேயும்; ஆசிரியரும் மாணவரும்; அரசரும் அமைச்சரும் என்ற வகையில் உயர்ந்த பொருளையே முன்னே சொல்வது இலக்கண மரபு. ஆனால் இங்கு கம்பன், “சுற்றத்தார், தேவர்” என்று சுற்றத்தாரை முதன்மைப்படுத்துவது பிழையாகாது. ஏனெனில் பாசமும் நேசமும் மிக்க தன்னலமற்ற சுற்றத்தார் ராமன் வீடு திரும்ப வேண்டும் என்ற ஒரே நினைவோடு காட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

ஆனால் தேவர்களோ ராவணவதம் நிகழ்ந்து தங்கள் துன்பம் தீரவேண்டுமானால், ராமன் அவசியம் காட்டுக்குச் சென்றாக வேண்டும் என்ற எண்ணத்தோடு ராமனைத் தொழுது நிற்கிறார்கள். அது சுயநலமிக்க தொழுகை. சுற்றத்தார் தொழுகையோ ராமனுக்கு வனத்தில் என்ன நேருமோ என்ற துயரமிக்க அழுகை. எனவேதான் கம்பர் உயர்ந்த பொருளை முதலில் குறிப்பிடும் மரபிலிருந்து சிறிதும் வழுவாமல் இந்த இடத்தில் சுற்றத்தாரை முதன்மைப்படுத்தினார்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இலவச வைத்திய சேவைப்பணியில் Dr. சி. சிவயோக குரு அவர்கள் நோயாளி ஒருவரைப் பரிசோதிப்பதையும், மருந்தறையில் மருந்துகளை வழங்கும் மருந்தாளர்களையும் படத்தில் காணலாம்.






ஊழ் நல்லவருக்கு வழி காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரம வைத்தியசேவைக் கட்டிடத்தில் கைதடி அரசினர் சித்த ஆயுர்வேத மருத்துவர் Dr திருமதி சயிலஜா சிவராஜா அவர்கள் நோயாளி ஒருவரை பரிசோதிப்பதையும், மருந்து வகைகள் வழங்ப்படுவதையும் காணலாம்.



கொடுத்துக் கெட்டவர் எவரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட இந்திய மாநிலத்தில் நம் முன்னோர்களுக்குரிய பிதிர்க் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிறந்த இடமாக விளங்கும் கயாவில் அன்பர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் காட்சி



அன்பையும் வாசனையையும் மறைக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



30.07.2011 சனிக்கிழமையன்று ஆடிஅமாவாசைத் தினத்தில் காசி யாத்திரையின்போது ஆச்சிரம சுவாமி அவர்களும் தம் குழுவினரும் காசி கங்கைக் கரையில் தமது கடமைகளை நிறைவேற்றும் காட்சி.

இவ்வருடம் இடம்பெற்ற வட இந்திய யாத்திரையின்பொழுது ஸ்ரீபத்ரிநாத் ஆலயத்தின் முன்



யாத்திரையில் ஈடுபட்ட அன்பர்களும் சுவாமிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாடல் பகரும் பக்திப் பிரார்த்தனை - 3

(தொடர்ச்சி...

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

பரிபாடல் எட்டாம் பாடல் செவ்வேள்மீது பாடப்பட்டது. "மண்மிசை யவிழ்துழாய்.." எனத் தொடங்கும் அப்பாடல் நூற்றிமுப்பது வரிகளால் ஆனது. அது கடவுள் வாழ்த்து. அக்கடவுள் வாழ்த்து ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு. மருத்துவன் நல்லச்சுதனார் இசை. பண்ணுப் பாலை யாழ்.

"உயிர்களுக்குத் தலைவனே! குன்றம் பிளந்த சுடர்வேற் படைக் கரத்து செவ்வேள் பெருமானே!!"

"நினது பரங்குன்றம், மலர் துழாய் மாலையும், வழங்குவதற்குரிய செல்வத்தினையும், கருடக் கொடித் திருமாலும், இடபாருடரான சிவபெருமானும், மலர் மேலயனும், பிரம தேவரிடத்துத் தோன்றி உலகிருள் அகற்றும் பன்னிரு சூரியரும், அச்சுவினி தேவர் இருவரும் வசுக்கள் எண்மரும் பதினொரு உருத்திரரும் திசை காவலர் எண்மரும் ஆகிய இவரெல்லாம் அவரல்லாத அமரரும் அவுணர்களுமாகிய ஏனையோரும் வேதத்தை உணர்ந்த சிறந்த தவவொழுக்கமுடைய தெய்வ முனிவர்களும் பெருமானைக் காணும்பொருட்டு மண்ணுலகில் வந்து தங்குவதற்கு இடமாக நின்றது. அதனால் இமய மலைக்கு நிகரானது- இத்திருப்பரங்குன்றம்.

"மண்மிசை யவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புண்மிசைக் கொடியோனும் புங்கவ மூர்வோனும்
மலர்மிசை முதல்வனு மற்றவ னிடைத்தோன்றி
உலகிரு ளகற்றிய பதின்மரு மிவரும்
மருந்துரை யிருவருந் திருந்துநூ லெண்மரும்
ஆதிரை முதல்வனிற் கிளந்த
நாதர்பன் னொருவரு நன்றிசை காப்போரும்
யாவரும் பிறரு மமரரு மவுணரும்
மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றா கின்றுநின் காரண மாகப்
பரங்குன் றிமயக் குன்ற நிகர்க்கும்...

(பரிபாடல் 8ஆம் பாடல் வரிகள்- 1-11)

"பெருமானே! நினது திருப்பரங்குன்றில் நிறைந்த அருவிநீர் தங்கும் நிரல்பட்ட சுனை, அந்த இமய மலையிலுள்ள ஏனைய சுனைகளைக் காட்டினும் சிறப்பெய்தி நின்னை ஈனுதற்கு இடமான நிரை இதழ்த் தாமரையின் மின்னல் போல் விளங்கும் இதழ்தொகுதி

*நண்பர்களே கிட்டிய உறவினர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உதிராத தெய்வத் தன்மை வாய்ந்தது. என்றும் வற்றாமல் ஒரே தன்மைத்தாய் இருக்கும் சரவண தடாகத்திற்குச் சமானமாகும்.

"பெருமானே! நினது வாகனமாகிய யானையின் பிளிற்றொலி முழக்கம் முகிலின் இடியொலி ஒக்கும். யானையின் முழக்கம் கேட்ட நின் கோழிச் சேவல் வெருவிக் குன்றம் அதிரக் கூவா நிற்கும்! கோழியின் கூக்குரல் கேட்குந் தோறும் மிக்க மதத்தையுடைய நின் யானையும் பிளிறா நிற்கும் திருப்பரங்குன்ற முழையின் எழுகின்ற எதிரொலி அவ்வொலிகளுக்கு மறுதலையாகா நின்றது.

"பெருமானே! நினது திருப்பரங்குன்றத்திலிருந்து மதுரைக்குச் செல்லும் வழி, ஏழு துளைக் குழலிடத்தும் ஐந்து துளைக் குழலிடத்தும் யாழினிடத்தும் பிறந்த இசையைப் போன்றது- நிறத்தால் ஒத்த தம்மினத்தை விரும்பும் தும்பியும் வண்டும் மிஞிறும் இசைபாடா நிற்றல்.

"சுனைகள் நீட்பூக்களைப் பூத்து நிற்கும். முல்லை முதலிய கொடிகளில் மலர்கள் நறுமண முடையவாக மலர்ந்து நிற்பன. கொன்றை மரங்கள் கொடி போன்று நீண்ட பூங்கொத்துக்களை மலர்ந்து நிற்பன. மலர்ந்த காந்தட்பூ இடம் எங்கும் மணம் கமழ்ந்து நிற்கும்.

"இவைகளே அன்றி நன்றாக மலர்ந்த ஏனைய பல பூக்களும் தேன் பிழிற்ற மணம் நாறி நிற்கும். அந்த நறுமணங்களை அளாவித் தென்றற் காற்றும் தவழும் தலைமையினை உடைத்து.

"ஏழ்புழை ஐம்புழை யாழிசைகேழ்த் தன்னவினம்
வீழ்தும்பி வண்டொடு மிஞிறார்ப்பச் சுனைமலர்
கொன்றை கொடியிண ரூழ்ப்பக் கோடிமலர்
மன்றல் மலர மலர்க்காந்தள் வாய்நாற
நன்றவிழ் பன்மலர் நால நறைபனிப்பத்
தென்ற லசைவருஉ செம்மற்றே யம்மநின்
குன்றத்தார் கூடல் வரவு...

(பரிபாடல் 8 வரிகள்- 22-28)

"மதுரையில் மணம் பொருந்திய மணிநிறமுடைய முரச முழக்கம் எழுந்தது. அந்த மண முரசம் காற்றால் ஏறுண்ட புடைபெயர்ச்சிக்கடல் போன்றது. காற்றால் மயங்கும் அக்கடல் நீரைப் பருகும் முகிலின் முழக்கமும் போன்றது. இந்திரனுடைய இடியேறு முழக்கம் பெரும் இடிமுழக்கம் போன்றது.

"முழங்குந் தோறும் முழங்குந் தோறும் நின்னுடைய திருப்பரங்குன்றம் முழக்கிய முழக்கம் அம் முழக்கத்திற்கு மாறு மாறாக முழங்கா நிற்கும்.

"காற்றாலே மோதப்படும் உயரிய சிகரங்களையுடைய பரங்குன்றத்தில் பெய்த மழைநீர் பெருகுதலாலே பொழில்கள் தழைத்தன. குளிர்ந்த கொம்பர்கள் கொண்ட பூம் பொழில்கள் பூக்கள் பறிக்கக் குறையாது நிறைந்து மலரா நிற்கும். குளிர்ந்த குளங்கள் நீரால் நிறையும்.

"மருத நிலத்தில் மணல் செறிந்திருக்கும், மிகுந்த மலர் நிறைந்த திருப்பரங் குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையுள்ள பெரு வழியில் சிறந்த இறையன்புடையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரங்குன்றமர்தலுமுடைய முருகவேளுக்கு விழாச் செய்வர். நிறத்தாலும் மணத்தாலும் ஒன்றற்கொன்று வேறுபாடுடைய பல்வேறு சாந்துகளும் பெருமையுடைய புகைப்பொருள்களும் இயங்கும் காற்றால் அணையாத விளக்கிற்கு வேண்டுவனவும் மணங் கமழ் மலர்களும் இசை எடுக்கும் முழவும் மணியும் கயிறும் மயிலும் கோடரியும் பிணிமுகம் என்னும் யானை ஊர்தியும் ஆகிய இவற்றையும் இன்னோரன்ன முருகவேளுக்கு உவந்த ஏனையவற்றையும் ஏந்திக்கொண்டு அரிய திருப்பரங்குன்றினை அடைந்து முருகப்பெருமானுடைய திருவடிகளைச் சேவிப்பர்.

"கனவில் யாம் எம் காதலரைக் கைதொட்டது பொய்யாகாமல் நனவில் எய்துமாறு நினக்குரிய செறிந்த நீருடைய வையையாறு புதுநீரை அணிவதாக என்று வரம் வேண்டுவோரும், எம் வயிறு கருப்பம் எய்துக எய்தின் இன்ன பொருளை நினக்குத் தருவோம் எனக் கடன் நேர்பவரும், எங்கணவர் சென்றுள்ள வினைகள் ஈடேறுவதற்குரிய பொருள் நிரம்ப வாய்ப்பதாக என்று முருகப்பெருமான் திருச்செவியில் சேரக்கூறி வழிபடுவோரும், போர் மேற் சென்றுள்ள தலைவர் வெற்றிவீடு திரும்புக என்று அருச்சனை செய்வோரும் ஆகி, முருகப்பெருமானை வாழ்த்திப் பாடுவோர் பாட்டும், அரங்கில் ஆடுவோர் ஆட்டமும் முகில்தவழ் அம்மலையில் எழும் எதிரொலியும் கெடாத ஆரவாரம் அகலாத் திருப்பரங் குன்றம்.

அன்பகலா அடியார் ஒன்றுகூடி, நஞ்சார்ந்த சிவபெருமானுக்கு உமாதேவியார் ஈன்ற கடம்பன் விரும்பி இடங்கொள்ளும் செவ்வேட் பெருமானுடைய காவலுடைய திருக்கோயிலை இன்றுபோல் என்றென்றும் வழிபடும்படி மண்ணுலகத்து மன்னுயிர் வருந்த மழை வறப்பினும் நெறிப்படுத்தி ஒழுகும் அருவி இடையறாது ஒழுகும் பெருஞ் செல்வம் நினக்கு என்று நிலைபெறுவதாக.

"உடம்புணர் காதலரு மல்லாருங் கூடிக்
கடம்பமர் செல்வன் கடிநகர் பேண
மறுமிடற் றண்ணற்கு மாசிலோ டந்த
நெறிநீ் அருவி யசும்புறு செல்வ
மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா
தண்பரங் குன்ற நினக்கு...

(பரிபாடல் 8 வரிகள் 125-130)

(வளரும்...

## ஐப்பசி மற்றும் கார்த்திகைமாத குருபூசை தினங்கள்

| | |
|---|---|
| **09.11.2011** | **ஐப்பசி 23 புதன்கிழமை** |
| | **திருமூலர் குருபூசை** |
| **20.11.2011** | **கார்த்திகை 04 ஞாயிற்றுக்கிழமை** |
| | **மெய்ப்பொருள் நாயனார் குருபூசை** |
| **30.11.2011** | **கார்த்திகை 14 புதன்கிழமை** |
| | **இராமநாதர் குருபூசை** |

*நம்பிக்கையே நண்பனைக் காட்டும் கண்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையமும் சமயியும்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

சைவம் ஓர் சமைய அமைப்பு. அப்பர் பெருமான் சமையம் என்றே அதைப் பாவித்துள்ளார். சமையமே லாறுமாகி-

4.7.5. சமைத்தல், அடுதல், பாகம் பண்ணுதல் அட்டல் போல்வன ஒருபொருட் கிழவிகள். அடுமிடம் பாகசாலை, மடைப்பள்ளி அடுக்களை, அடுப்படி, சமையற் கட்டு- சமைக்கும் தொழில் மேற்கொள்ளும் தானம். அடிசில் உணவு. அடி சிற்கினியாளைப் புலவர்கள் விதந்து பாடினர். சமையம் மருவி. சமயமானது பக்குவ உணவு சாப்பாடு. சா என்றால் மரணம்; பாடு என்றால் பக்கம். சாவின் பக்கம் கொண்டு போவது சாப்பாடு. பக்குவம் செய்யப்பட்ட உணவு உடலுக்கும் உயிருக்கும் உவந்தது. உயிரை உடலிலே நிலைநிறுத்த உணவு முக்கியம். இப்பாணியிலே மனித குலத்தைப் பக்குவமான பாதையில் வழிநடத்துவது சைவ சமையம். சிவமே இதன்மூலம். இ்.தே ஆதி மூலம். கஜேந்திரன் அழைத்தது ஆதிமூலத்தையே. வள்ளுவனார் வாய்விண்டது ஆதிமூலத்தையே ஆதிமூலட்டானம் தில்லைச் சிதம்பரம். மூலத்தானம், மூலக்கருவறை ஆலயத்தின் முதல் அமைப்பு. எனவே சுமார் ஐயாயிர ஆண்டாகப் பாடல் பெற்றது சைவ அமைப்பே. அ்.தே சைவசமயம் யாரேனும் ஓர் மகான் இந்துமதம் என்று பக்குவ ஏடுகளிற் பாடி வைத்துளரா? யாழ்ப்பாணத்திலே இந்து எனும் பதம் புகுந்து நூறு, நூற்றுப்பத்து ஆண்டுகளுக்கு முன்னரே HINDU ORGAN. உதாரணம் இதைத் தமிழில் இந்து சாதனம் என்று கையாண்டனர். அடுத்த பாவனை HINDU COLLEGE (இந்துக் கல்லூரி) சைவ பரிபாலன சபை. சைவ வித்தியா விருத்திச் சங்கங்கள் தோன்றி சைவப் பிரகாச வித்தியாசாலைகளை, சைவ மகாஜன பாடசாலைகளை உருவாக்கின. விவே கானந்தர் யாழ்ப்பாணஞ் சென்றபோது- அவரே உங்கள் சமையம் சைவம் எனக் கூறியுள்ளார். ஒரு உயரிய வாழ்க்கை நெறிதான் சைவசமயம். அ்.து சிவத்தோடு தொடர்புடையது சைவ சித்தாந்தம் அதன் தத்துவ சாதனம். மேலை நாட்டாரே அதைப் போற்றிப்புகழ்ந்துள்ளனர். எனவே சைவநெறி வாழ்பவர்கள் சைவ சமயிகள்.

சமையமும் சமயியும் பிரிக்கமுடியாதன. அவ்வண்ணமே தமிழ் மொழியும். உயிரும் உயிர்ப்புமாய் இயங்குவன தமிழும் சைவமும். இருகண்கள் அவை. இப்போ புதுமொழி காண் போரும் உள். கோப்பியைக் குளம்பியென்று சொல்வதும் ஒரு பாணி. சைவநெறியும் அதை அநுட்டிக்கும் சமயிகளும் பற்றிச் சிந்திப்பது நம் கடமையும், உரிமையுமாம். சைவசித்தாந்திகள் வாழ்ந்து வழிகாட்டிய பூமி ஈழம். யாழ்ப்பாணம் திருவிளங்கம் சிவஞான போதத்துக்குச் செவ்விய உரை கண்டவர் கொக்குவில் சபாரத்ன முதலியார் ஆங்கிலத்திலே சைவசித்தாந்தங்கட்கு விளக்கம் தந்தவர். நாவலரில் இருந்து இலக்கணச் சுவாமிவரை ஞானப்பிரகாசரில் இருந்து பண்டிதமணி வரை பலர் சைவசித்தாந்தம் பேணினர். இறுதி விற்பனர் கந்தையாப் பண்டிதர் காலத்தின் தேவைக்கிசைய பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களையும் இலகு நடையில் மக்கள் முன்வைக்க வேண்டும். வெளிநாடுகளிற் குடியேறிய தமிழராயுள்ள சைவ சமயிகளின் இளஞ் சந்ததியினர்க்கு

துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே நாட்டமுமில்லை. அதை அறிமுகம் செய்வாருமில்லை. குறிப்பாக நடுவயதுள்ள பிள்ளைகள் இருட்டுலகிலே வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வியலும், கற்கை நெறிகளும் கூடிப்பழகும் சமயம் கிறீத்தவமாய் இருப்பதால் அவர்கள் கிறீத்தவமயமாய், அப்பாரம்பரியங் களால் ஈர்க்கப்பட்டு வாழ்கின்றனர். இவர்களின் நாளாந்தக் கடமைகளில் அவர்கள் ஈடுபடு வதில்லை. மாதிரிக்குச் சொன்னால் காலை வணக்கமும், வழிபாடும், விபூதியணிவதும், சுவாமியறையிற் சிலமணித்துளிகளேனும் இறைவணக்கம் செய்யும் பாரம்பரியம் குறை கிறது. ஆலயம் போவது குறைவு. சனவரி முதலாந்தேதிதான் நம் வருடப்பிறப்பு என நினைக்கின்றனர். எனவே நம் தமிழ்ச் சமுதாயத் தின் சமைய நெறியும், வாழ்க்கையும் நிலை பெற ஆவன செய்யப்படவேண்டும். இன்றைய வாழ்நிலையிற் சமயமும் முக்கிய அம்சம் என்ற உணர்வு அவர்கள் உள்ளத்திலே படர வேண்டுமன்றோ. இன்றைய திரைப்படங்களும், நாடகங்களும் வன்முறைக் கலாசாரம் பக்கம் இளசுகளையும் முதுசுகளையும் ஈர்த்துச் செல் வதை அவதானிக்கமுடிகிறது. சமயஞான மின்மை ஒருகுருட்டு வாழ்வென்பதைப் பெற்றோர் உணர்ந்து அவர் சிறுபராயத்தில் இருந்தே வழி நடத்த வேண்டும். யாழ்ப்பாணத்திற் சிறப்பாகவும் ஈழவளநாட்டிற் பொதுவாகவும், பொது உடை மைக் கொள்கை அவ்வளவு மக்களை வழி நடத்தவில்லை. ஆனால் தூரதேயங்களில் நாஸ்திகத்தின் ஊடுருவல் இருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே அதிலே எச்சரிக்கையாய் இருத்தல் இன்றைய தேவை யாகும். மழைவிட்டும் தூவானம் போகாத நிலை யிற் கிறீத்தவ தாக்கங்கள் எம்மத்தியில் ஊடுருவியுள்ளன. குடும்பநலநாளாய் அவை பாணமிப்பது யதார்த்தம். வெளிநாடுகளில் வாழைப்பழத்தில் ஊசியேறுவது போல சில அமைப்புக்கள் நம் மக்களை ஊடுருவியுள்ளன. எமக்கு எந்தச் சமையக் காழ்ப்பும் இல்லை. நம் தற்காப்புகட்காக இவை பற்றிச் சிந்திப் பதற்கும் பேதுமில்லை.

ஒரு காலகட்டத்தில் றஜனி சுவாமிகள், குருமகராஜ் பின் சென்றனர். பின்னர் சாயிபாபா, அம்மா பகவான், பிரமகுமாரி சமாசம், பங்காரு அடிகளார் செல்வாக்கு சைவமக்கள் மத்தியிற் பரவியது. இப்போ நல்ல சிந்தனையாளரான சற்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களைப் பின் பற்றுபவர்கள் இருக்கிறார்கள். சில தலை முறைக்கு முன் ஜூட்டு கிருஸ்ணமூர்த்தியின் சிந்தனைகளைப் பலர் பற்றினர். இந்த வரிசை யிலே ஆஞ்சநேயர் வணக்கமும் மக்களால் விரும்பப்பட்டது. ஈழத்தமிழர்கள் புதிதாய் ஒன்றுவந்தால் அதைப் பின்பற்றும் மனப்பாங்கு உடையவர்கள். இப்படியான பல அமைப்புக் களின் தாக்கங்கள் சைவத்தை நலினப்படுத் தியமை உண்மை நமக்கென்றோர் சமைய அமைப்பின்மையும் இதற்குக் காரணமாகும். எனவே சைவப் பெருங்குடியினர் சைவசமயப் பற்றுளராய் வாழ்ந்து ஆத்ம விடுதலை பெறுவார்களாக.

## காசியின் ரகசியம்

காசியில் இறந்தால் முக்தி என்று சொல்லப்படுகின்றது. அதன் பொருள் என்ன? கொலையும் களவும் செய்துவிட்டு, காசியில் போய்த் தூக்குப்போட்டுக் கொண்டால் முக்தி வருமா?

காசி என்பது புருவ மத்தி, புருவ மத்தியில் நாட்டம் வை. இடகலை, பிங்கலை, சுழுமுனை என்ற திரிவேணி சங்கமம் அங்கே உள்ளது. அந்த இடத்தில்த்தான் நான் என்ற எண்ணம் சாகவேண்டும். அதுவே முக்தி.

*எவரையும் மனம் நோகப் பேசாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சைவநாற் செல்வன் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம் – காரைநகர்

(தொடர்ச்சி...

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்

**பதவுரை:**

மெய்க் காட்டிட்டு- படைத்திரளின் உண்மையைக் காட்டியருளி, வேண்டு உருக் கொண்டு- தான் விரும்பியதோர் உருவினை மேற்கொண்டு தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்- தகுதியுடையோன் ஒருவனாகத் தோன்றிய தன்மையும்.

முற்காலத்து அரசுபுரிந்த பாண்டிய மன்னன் ஒருவனுக்குச் சுந்தர சாமந்தன் என்னும் படைத்தலைவன் ஒருவன் இருந்தான். அவன் சிவபெருமானிடத்தும் அவன் அடியாரிடத்தும் பேரன்புடையனாய் ஒழுகிவரு நாளில் சேதிபர்கோன் என்னும் கிராதர் கோமான் பெரும்படையோடு தன்னுடன் பொருதற்கு வர எண்ணியிருப்பதை ஒற்றர் மூலம் அறிந்த பாண்டியன் தன் படைத் தலைவனை அழைத்து அதனை அறிவித்து, "நீ பொன்னறையைத் திறந்து வேண்டும் திரவியங்களை எடுத்துப் படைதிரட்டு" என்றான். படைத்தலைவனும் பொருள்பலவும் எடுத்துக் கொண்டு திருக்கோயிலை அடைந்து அங்கயற்கண்ணி பங்கனை அங்கையாற் றொழுது இப்பொருள் உன்னடியவர்க்கே பயன்படல் வேண்டும் என்று இறைஞ்சி அப்பொருள் கொண்டு சிவனடியார்க்கு நாடொறும் அமுது செய்வித்து மன்னவன் பொருள் முழுவதையும் ஆறு திங்களில் அழித்தான். அரசனும் ஆறு திங்கள் சென்றதும் தன் படைத் தலைவனை அழைத்து, "படைகள் எவ்வளவு தொகுத்தனை" என்று வினாவ, அவனும் 'அடியவர்க் கெளிய சுந்தரனுண்டு; அவன் அடியேன் கருத்தினை முடிப்பான். வேண்டிய பொழுது படையுமுண்டு' என்று உரைப்ப மன்னவனும் அதிசயித்து, "சேனைத் தலைவ! நாளைக் காலையில் நின்படையினை மெய்க்காட்டிடுக; உருப்படக் காண்போம்" என்று கூறி விடுத்தான். சாமந்தனும், திருக்கோயிலையடைந்து சொக்கனை வணங்கி, "பாண்டியன் பொருளெல்லாம் உன் அடியார்க்கு இறைத்தேன். அவன் நாளைப் படையினை மெய்க்காட்டிடுக எனப் போந்தேன். படை காட்டுமாறு எவ்வாறு? அதனை அருள்செய்க" என வேண்டுதலும் அப்பொழுது, "நீ வருந்தாத மனத்தோடும் செல்; குறைவற வேண்டும் படையொடு கொற்றவன் காண யாம் வருவேம்" என ஒரு அசரீரி வாக்குத் தோன்றிற்று. அவனும் மனந்தேறி மறுநாட் காலையில் மன்னவன் வாயிலை அடையும்போது இறையருளால் எம்மருங்கும் பல்லியங் கறங்கப் பெரும்படைச் சாத்துவர, அதனைக் கண்டு வேந்தன் பெரும் பயத்தினோடும் ஈதென்சொல் என்று படைத்

*குறைவாகப் பேசி நிறைய வாசித்தறி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனை வினாவினான், அவனும் அடி வணங்கி இது நம்படை; அஞ்சற்க என அப் படையினை நிறுத்தி அவற்றின் மெய்ம்மை யைக் காட்டினான். அப்போது அரசன், பரிமேற் கொண்டு உலாவுகின்ற படைத்தலைவன் யார் சொல் என வினாவி அவனைத் தன் படைத் தலைவனால் அருகழைத்துத் துகில் அளித்து அவன் பரியுகைக்கு மாறெல்லாம் கண்டு அதிசயித்து நிற்கையில், அரசன்முன் ஒற்றன் ஒருவன் போந்து, "படையான் மிக்க சேதிபர் கோமானைக் காட்டின்கண் ஒரு சிங்கம் கொன்றுவிட்டது" என்றனன். அதுகேட்ட வேந்தன் திருவருளை வாழ்த்தித் தன் படைத் தலைவனை நோக்கிக் கொடும் பகைபோனது. இப்படைஞரை வருத்தவேண்டியதில்லை. தத்தம் இடத்துப் போகச் சாற்றுதி என, அப்பெரும்படையும் படைத் தலைவனும் இறைப்பொழுதில் மறைந்திட பாண்டியனும் சாமந்தனும் இறைவன் திருவருளை வியந்து வாழ்த்தினர் என நம்பி திருவிளையாடற் புராணம் கூறும்.

மெய்க்காட்டிட்டு- உண்மையைக் காட்டி, "எண்ணாப் பெரும்படை மெய்க்காட் டிட்டு" (நம்பி திருவிளை. பயங்கரமாலை 39) என வருதலுங் காண்க. தக்கான் என்றது வந்த படைகளின் நடுவே அழகு பொங்கப் பரிமேற் கொண்டு படைத்தலைவனாக நின்ற இறைவனை உணர்த்தியது.

ஓரி ஊரின் உகந்து இனிது அருளி- ஓரி என்னும் ஊரின் கண் அடியவள் ஒருத்தியை ஆட்கொள்ள விரும்பி அவளுக்கு மகிழ்ச்சி மிகும்படி இனிதாக அருள்செய்து, பார் இரும் பாலகன் ஆன பரிசும்- இந் நிலவுலகத்திற் பிறவாயாக்கைப் பெருமை யையுடைய பாலகன் ஆகிய தன்மையும்.

முன்னொரு காலத்திலே பாண்டி நாட்டிலுள்ள சிறந்த கிராமம் ஒன்றில் மறையோன் ஒருவன் இருந்தான். அவன்தான் அரிதிற் பெற்ற கன்னிகையைப் பிரமசாரியாய் வரும் மறையோன் ஒருவனுக்குக் கொடுப்பம் என நிச்சயத்திருக்கையிற் பிச்சைபெற வந்த வைணவப் பிரமசாரி ஒருவனுக்குத் தன் கன்னிகையை மணஞ்செய்து கொடுத்து அவனொடு அவனூருக்குப் போக விடுத்தான். அவன் அவளொடு தன் ஊருக்குச் சென்று தன் வீட்டிற் புகும்பொழுது அவனுடைய தாய் சைவப் பார்ப்பன மகளை அவன் மணஞ் செய்து வந்தமையை அறிந்து கடுந்துய ருற்று அவளைத் தன் வீட்டின் ஒதுக்கிடத்தே வைத்துக் கொடுமையாய் நடத்தி வந்தாள். அவளை மணந்தோனும் அவள் பால் மனம் வையாமல் இருப்ப, ஈசனிடத்தே மனம் வைத்த அப்பெண் அவ் இல்லின்கண் அளவிறந்த வைணவர்கள் புசித்தல் கண்டு, இங்கு ஒரு தவமுனிவர் நணுகாரோ என்று எண்ணியிருந்தாள். முன் செய்த நல்வினை யால் அவள் மாமன் மாமி முதலானோர் பிறிதோர் இல்லத்திற்குப் போக மதுரை சொக்கநாதர் விருத்தர் உருக்கொண்டு அப் பெண் தனியே இருந்த அவ்வீட்டிற்குச் சென்று நமக்கு அமுதுபடை என்றுகூற அவளும் அவரை வணங்கித் தன் மாமி கதவடைத்துப் போயினள்; அமுதுபடி புறத்தேயில்லை என உரைத்தாள். அவரும் நீ செல்லுங்கால் கத வம் திறக்கும் எனக்கூற அவளும் அவ்வாறே சென்றபோது கதவந் திறப்ப உட்புகுந்து உணவுக்கு வேண்டும் பொருட்களை எடுத்து அடிசில் அமைத்துப் படைக்க அம்முதி யோரும் வயிறார உண்டு அழகுமிக்க பதி னாறாட்டைப் பராயத்தராய் விளங்கினார். அது கண்டு அவள் அதிசயித்து நிற்பப் பிறிதோரில் லத்திற்குச் சென்றிருந்த மாமி அம் மனை வாயிலில் வந்து இங்கு வந்தவர் யாவரோ வென்று வினாவ அவள் ஒரு மாற்றமும் கூறாது நின்றாள். அப்பொழுது இறைவர் பாலனுருக்கொண்டு தொட்டிலிற் கிடந்தனர்.

*ஒருவன் தன்னைத்தானே காக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கண்ட மாமி "இப்பாலன் யாவ னென" வினாவ, இங்கு வந்தாள் ஒருத்தி இதனைத் தொட்டிலிற் கிடத்தி "இப்பால கனைப் பாது காத்துக்கொள் எனக் கூறிக் கணவனொடும் போயினாள்" என்றாள். அது கேட்ட மாமி பிறர் தரும் பாலகனை நீயோ காப்பாய் என்று கூறி அப்பாலகனோடும் புறத்தே தள்ளிக் கதவடைத்தாள். இறை வனும் பாலகனுருவம் நீங்கித் தாமாந் தன் மையை யுணரத்தக்க உண்மை வடிவினைக் கொண்டு அம் மாதுக்கு உமையம்மையின் சாருபத்தைக் கொடுத்துச் சக்தி மண்டலத்தை அடையுமாறு செய்து தாம் மறைந்தருளினர் என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும். இப்புராணத் தில், மறையோன் வாழ்ந்தவூர் கூறப்பட்டில தாயினும் 'ஓரியூரின்' என அடிகள் கூறுதலின் இவ் வரலாறு அவ் வூரில் நிகழ்ந்ததாகக் கொள் ளப்படும்.

உகந்து- விரும்பி. பார்- நிலவுலகம். "துப்புறு பரவை யேழுஞ் சூழ்ந்த பார்" (கம்ப உருக்காட்டு 33) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

(தொடரும்....



# "பேராசையினில் உழலாதே"

அவசரப்பட்டுக் காரியம் எதையும்
செய்யாதே,
அவரவர் தத்தம் கடமையை மறக்க
வையாதே,
தவநெறியென்று கடமையை விட்டு
ஓடாதே,
தாற்பரியமான இல்லற மகிமையைத்
தூற்றாதே,
பலவினைக ளோங்கும் பேராசையினில்
உழலாதே,
பள்ளிக்கூடம் செல்லாமல் வீட்டில்
நிற்காதே,
அவமாகும் பொழுதைத் தவமாக்கப்பின்
நிற்காதே,
ஆற்றங்கரையி லமர்ந்த முருகனை
மறக்காதே!

-கே.எஸ். சிவஞானராஜா-

பேச்சை விட சிந்தனை ஆழமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஓ வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

முருகன் வேண்டுவார் வேண்டுவதை வாரி வாரி வழங்கும் தெய்வம். சிவபெருமானே இளையோனாக வந்து முருகனாகத் திகழ்கின் றார். ஒருமுறை நெஞ்சில் "முருகா" என்று நினைத்தால் அவன் இரு பாதங்களும் தோன் றக் காட்சி கொடுத்து ஆட்கொண்டருளுவான். முருகன் நக்கீரருக்கு அருள் புரிந்த திருவிளை யாடலைப் பார்ப்போம்.

நக்கீரர் குளக்கரை ஒன்றிலே, அரச மரத்தடியிலே அமர்ந்து சிவபூசை செய்கிறார். அந்த அரச மரத்தின் இலை தரையில் விழுந் தால் பறவையாக உயிர்பெறும். நீரில் விழுந் தால் மீனாகிவிடும். எதிர்பாராத விதமாக ஓர் இலைபாதி நீரிலும், பாதி தரையிலும் விழு கிறது. தரையில் விழுந்தது பறவையாகவும், நீரில் விழுந்தது மீனாகவும் மாறி ஒன்றை யொன்று இழுக்க ஆரம்பிக்கின்றன. இந்த அதிசயத்தைப் பார்க்கிறார் நக்கீரர். சிவபூசை தவறுகிறது. கற்கிமுகி என்ற பூதம் சிவபூசை யில் தவறியவர்களைப் பிடித்துக் குகையில் அடைத்துச் சிறை வைக்கிறது. தொளாயிரத் துத் தொண்ணூற்றொன்பது பேரைச் சிறை வைத்து விட்டது. ஆயிரம்பேர் சேர்ந்தவுடன் அவர்களை உண்ணுவதாக இருந்தது. நக்கீரர் சிவபூசையில் தவறியதும் பூதம் தோன்றி அவரையும் சிறையில் தள்ளிவிடுகிறது. ஆயிரம் பேர் அகப்பட்ட ஆனந்தத்தில் அவர் களை உண்பதற்குமுன் நீராடச் செல்கிறது பூதம். இருந்தவர்களெல்லாரும் நக்கீரரை நிந்திக்கிறார்கள். திருமுருகன் அருள்பெருகி ஓடும் திருப்பரங்குன்றத்திலா இந்த அக்கிரமம். வள்ளிக்கு வாய்த்த வடிவேலனை வழிப் படுத்திப் பாடுகிறார். திருமுருகாற்றுப்படை எழுகிறது. முருகன் மயில்மீது காட்சி தரு கிறான். பூதம் அழிந்துபடுகிறது. ஆயிரம் அடியார்களும் அல்லல் நீங்கி வெளியேறு கிறார்கள்.

"நெஞ்சே, நீ திருப்பரங்குன்றிலே கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பன் னிருகைப் பெருமானாகிய முருகன் திருவடி களைக் கரங்குவித்து வணங்கி, கண்குளிரத் தரிசித்து, நிறைந்த ஆர்வங்கொண்டு எல்லா அழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற திருமுரு காற்றுப்படையைப் பூசையாக எண்ணிக் கொண்டு பாராயணஞ் செய்வாயாக! திருமுரு காற்றுப்படையை உள்ளம் கனிந்து ஒருமை கொண்ட சிந்தையுடன் பாடிப்பரவுபவர்களின் பாழான துன்பங்கள் அனைத்தும் மறைந்து விடும். நக்கீரரின் பெருநோக்கு, உலகம் இன்பம் நிறைந்துவாழ வேண்டும்; எங்கும் எக்களிப்புத் திகழவேண்டும்; வளம் பெருக வேண்டும்; வாழ்வு மலர வேண்டும்; அன்பும், பண்பும் பொலிய வேண்டும். இவற்றைக் கருத் தில் கொண்டே நூலினைத் தொடங்கும் போது, "உலகம் உவப்ப" என்ற மங்கல வாழ்த்தோடு தொடங்குகிறார். உலகத்தை நல்ல நெறியில் வாழவைக்க வேண்டும் என்ற பெருங் கருணையினாலேயே திருமுருகன்

பெண்ணுக்குச் சீதனம் குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குந் திருக்கோயில் கொண்டிருக்கின்றான் என்பதை நக்கீரர் விளங்க வைக்கிறார். முருகன் திருத்தலங்களுட் சிறந்த ஆறுபடை வீடுகளைப் பற்றியும், அங்கு எழுந்தருளி நின்று அடியார்களுக்கு அருள்புரியும் சிறப்பை யும் கூறுவது "திருமுருகாற்றுப்படை". பக்தி ரசம் ததும்பும் இப்பாமாலை இளமையும், அழகும் என்றும் நிறைந்து விளங்கும் முருகன் பால் வீடு பெறுவதற்குச் சமைந்தானோர் இர வலனை வீடு பெற்றான் ஒருவன் அக்கடவு ளிடத்தே ஆற்றுப்படுத்தி அதற்குரிய வழி வகைகளை விளக்கிக் கூறுகின்றது. முருகன் அருளை நாடிவருவோர்க்கு வழிப்படுத்தும் சிறந்தநூல். இந்நூல் பிறவிப் பிணிபோக்கும் பேரமிழ்தம்.

ஆறுமுகப் பெருமான் பரங்குன்றில் பன்னிருகைக் கோமானாக, செந்தில் முதல் வனாக, பழனிமலை முருகனாக, சுவாமிநாத னாக, குன்றுதோறும் குடியிருக்கும் குமரனாக, பழமுதிர்சோலை மலைக் கிழவனாக எழுந் தருளி அருள்மழை பொழிகின்றான். கந்தன் மீது மிகுந்த பற்றுக்கொண்ட, சிறந்த அருட் கவிஞராகிய நக்கீரரை ஆட்கொண்டு நாமெல் லாம் உய்யும்பொருட்டு அவர்மூலமாக அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை அறங்களையும் தெளிவுபடுத்தி பல பாடல் களையும், முருகனை நோக்கி "நீ புறப்பட் டிருக்கிறாய். நல்ல செயல்!. அவன் இன்ன இன்ன இடங்களிலே எழுந்தருளியிருக்கிறான். அப்பெருமானைச் சென்று சேர்ந்து வழிபட்டால் அவன் பெறல் அரும் பரிசு தருவான்" என்று பெரும்பெயர் முருகனின் பெரும் புகழை எல் லாம் திருமுருகாற்றுப்படையிலே பாடவைத்து எமக்கு வழிகாட்டியுள்ளார். எம்பெருமான் அருட்கருணை தான் என்னே!

நக்கீரர் திருவாய் மலர்ந்தருளிய திரு முருகாற்றுப்படையை ஒருவன் தினந்தோறும் பாராயணம் செய்து வந்தால், பெருமை பொருந்திய முருகப் பெருமான் எழுந்தருளி வந்து, மனக்கவலை தீர்த்தருளி நினைத்த எல்லாவற்றையும் வழங்கி அருள்வான்.

அன்புத் தெய்வம் முருகன். அவனை ஏத்துகின்ற பாடல்கள் எத்தனை எத்தனை. எங்கு கிடைத்தாலும் அவற்றையெல்லாம் போற்றிப் பாடிப் பாடி அடையும் ஆனந்தத் துக்கு உவமை ஏது?

திருப்போரூர் முருகனின் திருவரு ளைப் பார்ப்போம்.

இருநூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் சிதம்பர சுவாமிகள். அவ ருடைய குருநாதர் குமாரதேவர். ஒருநாள் மயில் ஒன்று வந்து தன் வடிவத்தைச் சிற கால் மறைத்து ஆடியது. சிதம்பரசுவாமி களுக்கு ஒன்றுமே புரியவில்லை. தமது ஆசிரியராகிய குமாரதேவரிடம் சென்று வின வினார். அவர் "நீ மதுரைக்குச் சென்று அங் கயற் கண்ணம்மையை வழிபட்டால் அவள் சொல்லுவாள்" என்று வழிகாட்டினார். மது ரைக்குச் சென்று நாற்பத்தைந்து தினங்கள் அம்மையை இடைவிடாது தொழுதார். அக் காலத்தில் அவர் பாடியது மீனாட்சிகலி வெண்பா. அம்மையார் ஒருநாள் வெளிவந்து, "இவ்வூருக்கு வடபால் போரூர் என்னும் ஆறுமுகன் திருப்பதி ஒன்று உண்டு. அது முன்பு ஆறுதரம் விளங்கி இருந்து இப்போது மறைந்திருக்கிறது. அ.்.து ஏழாவது தடவை யாக உன்னால் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதற்காகவே முருகன் மயில் வடிவமாக வந்து வடிவத்தை மறைத்து ஆடி னான். அவன் நினக்கு ஆசிரியனாவான்" எனக் கூறி மறைந்தார்.

சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் சென்றபோது ஆறுமுகன் கோயில் பழு தடைந்து பல்வகைச் செடிகளாலும், பனை மரங்களாலும் மூடப்பெற்றுக் காடாய்க் கிடந் தது. பனைமரத்தடியில் எழுந்தருளியிருக்கும்

*காலம் தவறினால் எல்லாம் தவறாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகக் கடவுளின் திருவுருவத்தைக் கண்டு மனம் உடைந்து நெஞ்சம் நெக்குருகினார். ஒருநாள் குமாரதேவரைப்போல் ஒருவர் எழுந்தருளினார். சிதம்பர அடிகள் அவரை வணங்கி இவ்விடத்தில் திருக்கோயில் முதலில் எவ்வாறு இருந்தது என வினாவினார். "திருக்கோயிலைப் பார்ப்பாயாக" என்றார் வந்தவர். திருமதில், கோபுரம், கொடித்தூண், மாடவீதி, மடாலயம், நன்னீர்ப்பொய்கை முதலியன சிற்பநூல்பட விளங்கத் திருக்கோயில் காட்சியளித்தது. குமாரதேவராக வந்தவர் கோயிலுட் புகுந்து மறைந்தார். பழையபடி எல்லாம் பனங்காடாக விளங்குவதைக் கண்டு தன்னைப் பணிகொள்ள வந்தது "முருகப்பெருமான் திருவுருவே" என்று வியந்து ஆனந்தப் பரவசமாயினர். அவர் அங்கே இறைபணி புரியும் போது கூன், குருடு, செவிடு, நொண்டி, குட்டம், சுரம், பெருவயிறு முதலிய பல நோயாளர்கள் வந்து நோய் தீர வேண்டினார்கள். அவர்களது நோய்கள் எல்லாம் மறைந்தன. எல்லோரும் காணிக்கை செலுத்தத் தொடங்கினார்கள். காணிக்கைப் பொருட்களையும், பிற பொருட்களையும் கொண்டு சுவாமிகள் திருப்பணியை சிறப்பாக நிறைவேற்றினார். உற்சவங்கள் நடக்க ஏற்பாடுகள் செய்தார். அரசர்கள், செல்வந்தர்கள் செய்து முடிக்க வேண்டிய திருப்பணியை ஓர் ஏழைத் துறவி இனிது நிறைவேற்றினாரென்றால் அது முருகன் திருவிளையாடலன்றோ! முருகன் திருவருளே!

சூரன் முதலிய அசுரர்களை போரில் கொன்றொழிக்க சமர்புரிந்த இடம் திருப்போரூர். அதனால் திருப்போரூரைச் சமராபுரி என அழைக்கிறார்கள்.

"கன்றழைக்கும் முன்னே கருதிவரும் ஆப்போல்
நின்றழைக்கும் நாயேற்கு நேர்தோன்றி- ஒன்றினிற்கும்
அஞ்சாதே வாவென்றழைப்பாய் தென் போரூரா
எஞ்சாத பேரருளா லின்று"

திருப்போரூர் முருகன்மேல் அவர் பாடியது திருப்போரூர்ச் சந்நிதிமுறை. எழுநூற்று இருபத்தாறு பாடல்களைக் கொண்டது. பிள்ளைத்தமிழ், அலங்காரம், தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி ஆகிய பாடல்களால் முருகனைப் பாடிப்பரவியிருக்கின்றார். எப்பெருமான் அடியார்கள் வாழ்வில் நடத்திய திருவிளையாடல்கள் எத்தனை அற்புதம்!

வேலனே! சரணம், பசுமயில் ஏறும்
வித்தகா! சரணம் மாது உமையின்
பாலனே! சரணம் குக்குடத்துவச
பகவனே! சரணம், வெவ் அசுரர்
காலனே! சரணம், புவியினில் நாய்க்குங்
கடையனாகிய எனை ஆள்வி
சாலனே! சரணம், மேன்மை சேர் போரிச்
சண்முகா! விண்முகமணியே!

(சிதம்பர சுவாமிகள்)

(தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு இயற்கையோடு இயைந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள்

**Dr S. குமுதினி அவர்கள்**

வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பிக்க இருக்கும் குழந்தைகள், சிறிது தூரம் பயணித்த இளைஞர்கள் என தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எதிர்காலப் பரம்பரையை இயற்கையோடொட்டிய நமது கலாசார, பண்பாடுகளிற்கமைய வாழ வழிகாட்டி, ஆரோக்கிய சமூகத்தை எதிர்காலத்தில் கட்டி எழுப்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"கீழே விழுந்தவனை மாடு மிதித்தாற்போல" பல்வேறுபட்ட சவால்களிற்கிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய சமூகத்தின் பெரும் சவாலாக புதுப்புது நோய்கள் உருவெடுத்துள்ளன. உண்மையில் இதற்குக் காரணம் என்ன? ஆராய்ந்தால் தவறான உணவுப் பழக்கங்களும், தவறான வாழ்க்கை முறைகளும்தான் காரணம் என்பது தெளிவாகும். ஆம்! மருந்துகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் வாழ்க்கை முறைக்கோ, உணவுப் பழக்க வழக்கத்திற்கோ முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

உண்மையில் "ஆரோக்கியம் (Health)" என்பது தனிமனிதனது அடிப்படை உரிமை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உணவுக்காக, உடைக்காக, உறையுளிற்காக, வேறு எவற்றிற்கெல்லாமோ குரல் கொடுக்கும், போரிடும் சமூகத்தினர் ஆரோக்கியத்தினை பேணுவதற்காக எத்தனைபேர் குரல்கொடுக்கின்றனர்? முயற்சிக்கின்றனர்?

வைத்தியர்களும் வைத்தியசாலைகளும் ஏன் உருவாக்கப்பட்டன? நோய் தீர்த்தல், நோய்த்தடுப்பு, நோய்கள் பற்றிய விழிப்புணர்வினை பொதுமக்களிற்கு ஏற்படுத்துவதற்காக, அதாவது நோயாளிக்காக. "நோயாளி" (patient) எவ்வாறு உருவாகின்றான் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நோயாளி இல்லை எனில் வைத்தியர்களிற்கும் வைத்தியசாலைகளிற்கும் தேவை இருக்காது என்பதும் அப்போது உங்களிற்குப் புரியும்.

வார்த்தைகளிற்காக நான் குறிப்பிடவில்லை. ஆறு அறிவு மனிதனிற்கு உண்டு எனக் கூறிக்கொள்ளும் நம்மில் எத்தனை பேர் ஆறாவது அறிவைப் பயன்படுத்துகிறோம்? பொதுமக்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் உள்ளார்ந்த கௌரவத்துடனும், மதிப்புடனும், பெருமதியுடனும் அனுபவிக்கவேண்டிய முக்கிய அடிப்படை உரிமைதான் ஆரோக்கியம் / சுகாதாரம் என்பதை நன்கு புரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் அனைவரிற்கும் ஆரோக்கியமான வாழ்வை வாழ்வதற்கு விருப்பம் இருக்கின்றதல்லவா? மனித ஆரோக்கியம் என்பது உடல் உள காரணிகளுடன் சமூக, ஆன்மீக காரணிகளில்த்தான் முக்கியமாகத் தங்கி இருக்கின்றது. எனவே இயந்திரமயமான சூழ்நிலை, ஓய்வற்ற தொடர்ச்சியான வேலை, முரண்பாடான சமுதாயத் தொடர்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றிலிருந்து விலகி தியானம் (Meditation), யோகாசனம் (Yogasan), வாழும் கலைப்பயிற்சி (Art of living), வன்முறையற்ற தொடர்பான கலை (Non voilent communication) போன்றவற்றை சில நிமிடங்களில் ஆரம்பித்து மணித்தியாலங்கள் வரை பயிற்சிப் பதன்மூலம் மன அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கும் தப்பிப் பிழைப்பதற்கும் பழக்கப் படுத்திக்கொள்வதுடன் நல்லுறவை மேம்படுத்தவும் முடியும். மருந்து, புதிய தொழில் நுட்ப வளர்ச்சிகள்மூலம் ஆரோக்கிய வாழ்வு கிடைக்கும் என்ற "போதை" நிலையிலிருந்து விடுபட்டு இயற்கையான வாழ்வின் சூட்சுமத்தை உணர்ந்து "இயல்புநிலைக்கு" மீள்வதுடன் அதன்மூலம் நல் ஆரோக்கியத்தை முன்னெடுக்க முடியும். இதற்கான வழிமுறைகள் சில.

*. காலை எழுந்தவுடன் 2/3 குவளை கொதித்து ஆறிய நீரை அருந்துங்கள்

* கோப்பி, தேநீர் அருந்துவதைத் தவிருங்கள்.

*. தினம் 30 நிமிடம் யோகப் பயிற்சிகளை (யோகா= தியானம்+ ஆசனங்கள்) (Yoga meditation asanas) பயிற்றுவிப்பாளரின் / மருத்துவரின் ஆலோசனைப்படி செய்யுங்கள். அல்லது 30-60 நிமிட நேரம் சுறுசுறுப்புடன் நடவுங்கள்.

*. தினமும் குறைந்தது 3L கொதித்து ஆறிய நீர் அருந்துங்கள்.

*. இயற்கை உணவு வகைகளை (பழங்கள், பச்சைக் காய்கறிகள், முளைக்க வைத்த பயறுவகை) நன்கு கழுவி உண்ணப் பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள்.

*. உணவை அவசரமாக சாப்பிடாமல் ஆறுதலாக உண்பதோடு முடிந்தவரை குடும்பத்தினர் அனைவரும் நேரம் ஒதுக்கி ஒன்றாக உண்ணுங்கள்.

*. ஒவ்வொரு நாளும் ஒரேவித உணவு வகைகளை உண்ணாது தினசரி அவசியமான போஷாக்கை பரிபூரணமாகக் கொண்ட உணவுவகைகளை பல விதங்களில் செய்து உண்ணுங்கள். போஷாக்கு உணவுபற்றி பொது சுகாதார மாது, சுகாதார வைத்தியர்கள், வைத்தியசாலை வைத்தியர்கள், போஷணையாளர்கள் (Dietatician) இடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

*. எண்ணெயில் செய்த உணவுகளை தவிர்த்து வேகவைத்த உணவுகளையே உண்ணுங்கள்.

*. உணவுடன் தேவையான அளவு உயிர்ச் சத்துக்களும், கனியுப்புக்களும் உள்ளெடுக்கப்படுவதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

*. செயற்கை உணவு வகைகள், பானங்கள் (Carbonated drinks), தகரத்திலடைக்கப்பட்ட சமைத்த உணவுகள், மதுபானம் பாவித்தல் என்பவற்றை தவிருங்கள். அல்லது மதுபானத்தை சிறிதளவில் வைத்திய ஆலோசனையின்படி பாவியுங்கள்.

*. உணவு உண்பதற்கு சற்று நேரத்திற்கு முன் தயாரித்து பயன்படுத்துங்கள்

*. இரவில் தூங்கச் செல்வதற்கு முன் 10 நிமிடங்கள் தியானம் செய்வதுடன் இனிய நாளொன்றை எமக்காக தந்த இறைவனிற்கு நன்றி செலுத்துங்கள்.

இரவு உணவிற்கும், தூங்குவதற்கும் குறைந்தது இரண்டு மணிநேரம் இடைவெளி எடுத்துக்கொள்ளுங்கள்.

"ஆரோக்கியம் தான் அனைத்துமாகும்"

"Health is Every thing"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலம் வேண்டும்

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்

உங்களுக்கு ஆசை இல்லை என்றால், இந்தக் கட்டுரையின் அடுத்த வரிக்குப் பார்வையை எடுத்துப்போக முடியாது. அவ்வளவு ஏன்... நிற்க முடியாது. நடக்க முடியாது. சாப்பிட முடியாது.

"ஆசையினால் சாப்பிடுகிறேன் என்று யார் சொன்னது? பசிக்காகத்தான் சாப்பிடுகிறேன்" என்று நீங்கள் விதண்டாவாதம் செய்யலாம்.

நல்ல பசியான நேரத்தில் உறவினர் வீட்டுக்குப் போயிருக்கிறீர்கள். இலைபோட்டு ருசிமிக்க சாப்பாட்டைப் பரிமாறுகிறார்கள். நீங்கள் முதற் கவளத்தை வாயருகில் கொண்டு போகும்போது, உங்களை அசிங்கமாக என்னென்னவோ ஏசுகிறார்கள். அடுத்த கவளம் உள்ளே இறங்குமா? பசி தீரவில்லை ஆனால் சாப்பிடவும் முடியவில்லை. ஏன்? சாப்பிடும் ஆசையே போய்விட்டது. ஆசையினால் செய்யாமல் அவசியத்திற்காக எதைச் செய்தாலும், அது முழுமையான சந்தோசத்தைக் கொண்டு வராது.



உங்கள் அடிப்படை இயல்பே மகிழ்ச்சியாக இருப்பதுதான். நீங்களாக வரவழைத்துக் கொண்ட துன்பங்களால் தான், அது காணாமற் போகிறது.

சந்தோசமாக இருக்க வேண்டுமானால், முதலில் நீங்கள் சுயநலத்தோடு இருக்க வேண்டும். சுயநலத்தில்கூடக் கஞ்சத்தனம் வேண்டாம். முழு சுயநலவாதியாக இருங்கள்.

ஒருமுறை சங்கரன் பிள்ளையின் மகனுக்குக் கடுமையான காய்ச்சல். டாக்டர் வந்தார். "இது தொற்றுநோய்க் கிருமியால் வந்திருக்கும் காய்ச்சல். ஏற்கனவே, இதை இவ்வளவு பேருக்கு உங்கள் மகன் பரப்பிவிட்டானோ? இனி உடம்பு, சரியாகும்வரை பள்ளிக்குப் போகவேண்டாம்? என்று எச்சரித்தார். சிகிச்சை சில நாட்களுக்குத் தொடர்ந்தது. மகனுக்கு ஒருவழியாகக் காய்ச்சல் குறைந்தது, குணமாகி விட்டான்.

டாக்டர் 'பில்லை' நீட்டினார். தொகையைப் பார்த்து சங்கரன் பிள்ளை சண்டைக்குப் போய்விட்டார். டாக்டர் விளக்கம் கொடுத்தார். "ஒன்பது முறை உங்கள் வீட்டுக்கு வந்து ஊசி போட்டிருக்கிறேன். அதுவும் விலையுயர்ந்த மருந்து!"

*தனிமையில் கடவுளைத் தியானம் செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரன் பிள்ளை கொதித்தார். "விளையாடுகிறீர்களா? என் மகன் ஊரெல்லாம் காய்ச்சலைப் பரப்பியதால் தானே உங்கள் பிஸ்னஸ் படுஜோராகப் போய்க்கொண்டிருக்கிறது. என்னிடம் எப்படிப் பணம் கேட்பீர்கள்? நியாயமாக நீங்கள் அல்லவா எனக்குப் பணம் தரவேண்டும்?"

"இப்படித்தான் எது கிடைத்தாலும், அதனால் ஆதாயம் உண்டா, அதை வைத்துக்கொண்டு எப்படியாவது உலகத்துப் பணத்தையெல்லாம் சுருட்டித் தன் பொக்கெட்டில் போட்டுக்கொள்ள முடியுமா?" என்று பேராசை கொண்டு பலர் அலைகிறார்கள்.

அப்பேர்ப்பட்ட சுயநலத்தை நான் சொல்லவில்லை. நான் சொல்லும் சுயநலம் இன்னும் பெரிது.

இந்தச் சட்டை என்னுடையது, இந்த வீடு என்னுடையது என்ற குறுகிய சுயநலத்தை விடுங்கள். இந்த ஊர் என்னுடையது, இந்த நாடு என்னுடையது, இந்த உலகம் என்னுடையது என்று எல்லாவற்றையும் உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் டெய்லராக இருங்கள். ஓட்டோ ஓட்டுபவராக இருங்கள், ஆப்ரேசன் செய்யும் டாக்டராக இருங்கள், காய்கறி விற்பவராக இருங்கள், கொம்பியூட்டர் தயாரிப்பவராக இருங்கள். இந்த உலகமே உங்களுடையதென்று மனதார ஏற்றுக்கொண்டுவிட்டால், அதில் உள்ளவர்கள் உங்களைச் சேர்ந்தவர்களாகிவிடுவார்கள். அதன்பின் அவர்களுக்காக நீங்கள் எதைச் செய்தாலும் எப்படிச் செய்வீர்கள்? உங்களுக்கே செய்துகொள்வதாக நினைத்து, மிகுந்த ஈடுபாட்டுடன், முழு அர்ப்பணிப்புடன் செய்வீர்களல்லவா? அப்படி அன்போடு, ஆசையோடு செய்யும்போது அதன் தரம் எப்படி இருக்கும்? உச்சத்தில் இருக்கும். அப்புறம் உங்களுக்குக் கிடைக்கவேண்டிய பலனை நீங்கள் வேண்டாம் என்று மறுத்தாலும் அது தானாக வந்து உங்கள் காலடியில் கொட்டும். உண்டா, இல்லையா?



எப்போதுமே நூறு சதவீத ஈடுபாட்டுடன், சந்தோசத்துடன் செயலாற்றுங்கள். பலன்தான் சந்தோசம் என்று நினைக்காமல், செய்வதையே பிரியத்துடன் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். முதல் முறை வெற்றி கிடைக்கவில்லையானால், உங்களுக்குப் பிரியமானதைச் செய்ய இன்னொரு வாய்ப்புக் கிடைத்ததாக நினைத்துக் கொள்ளுங்கள்.

மறுபடியும் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள். ஒவ்வொரு முறையும் சந்தோசம் தான் கிடைக்கும். வலி தெரியாது. வேதனை இருக்காது.

யோசியுங்கள்.... உங்கள் திறமை முழுவீச்சில் எப்போது வெளிப்படுகிறது? நீங்கள் சந்தோசமாக இருக்கும் போதா? படபடப்பிலும், துக்கத்திலும் இருக்கும்போதா? ஆசையோடு, சந்தோசமாக ஒரு வேலையைச் செய்யும்போது, வெற்றி கிடைக்காமல் போவதற்கு வாய்ப்பே இல்லை.

செருக்கு செல்வத்தைச் சிதறடிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் மட்டும் சந்தோசமாக இருந்தால் போதாது. நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களால் மற்றவர்களுக்கும் சந்தோசம் இருக்கவேண்டும். சுற்றி இருப்பவர்கள் உங்களைச் சந்தோசத்தோடு ஏற்கவேண்டும்.

காட்டில் ஒரு சிங்கம் கால்களை வீசி வீசிக் கர்வத்தோடு நடந்தது. அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்த முயற் குட்டியைச் சட்டென்று பிடித்தது.

"ஏய், இந்தக் காட்டில் யார் ராஜா? என்று கேட்டது. முயற்குட்டி பற்களெல்லாம் கிடுகிடுக்க, "சந்தேகமென்ன? நீங்கள்தான்!" என்றது.

சிங்கம் முயலை விட்டுவிட்டு, அடுத்ததாக ஒரு நரியைத் தாவிப்பிடித்தது. அதே கேள்வியைக் கேட்டது.

நரி நடுக்கத்துடன், "தலைவா.... உனக்கேன் இந்தச் சந்தேகம்" உன்னைத் தவிர, வேறு யார் இங்கே ராஜாவாக இருக்க முடியும்?" என்றது.

அப்புறம் வழியில் எதிர்ப்பட்ட மிருகங்களெல்லாம் பணிவாக மண்டியிட்டுச் சிங்கத்திடம், "நீங்கள்தான் ராஜா" என்று அச்சத்தில் அலறின. சிங்கத்துக்குப் பெருமை பிடிபடவில்லை. இன்னும் கொஞ்சத் தூரம் போனது.

அங்கே ஒரு யானை, சிங்கத்தைப் பொருட்படுத்தாமல் அது பாட்டுக்கு மரத்திலிருந்து இலைகளைப் பறித்துக்கொண்டிருந்தது.

சிங்கம் அதன் எதிரில் போய் நின்று, "ஏய் முட்டாளே, யார் இந்தக் காட்டுக்கு ராஜா?" என்று கர்ஜித்தது. யானை திரும்பியது. தும்பிக்கையால் சிங்கத்தைச் சுருட்டித் தூக்கியது. ஓங்கித் தரையில் அடித்தது. சிங்கத்தின் முதுகெலும்பே முறிந்து போயிற்று. "ஏம்பா, இப்ப நான் என்னப்பா கேட்டுபுட்டேன்? வாய் வார்த்தையாகச் சொல்லப்படாதா?" என்று வலியில் முனகியபடி கேட்டது சிங்கம். "இனிமேல் இந்த விஷயத்தில் உனக்குக் குழப்பமே வரக்கூடாது, பார்!" என்றது, யானை.

சுற்றியிருப்பவர்கள் உங்களை மகிழ்ச்சியுடன் ஏற்காவிட்டால் சிங்கத்திற்குக் கிடைத்த அனுபவம் தான் உங்களுக்கும் கிடைக்கும்.

இப்படி வேறு யாராவது உங்களுக்குக் கற்பிப்பதற்கு முன் உங்கள் வாழ்க்கையை நீங்களே இனிதாக அமைத்துக்கொள்ளுங்கள்.

எதைச் செய்தாலும் முழு ஆசையோடு செய்யுங்கள்.

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட உற்சவ தினங்கள்

**புரட்டாதி, ஐப்பசி**

| | | | |
|---|---|---|---|
| 28.09.2011 | புரட்டாதி 11 | புதன்கிழமை | நவராத்திரி விரதாரம்பம் |
| 05.10.2011 | புரட்டாதி 18 | புதன்கிழமை | சரஸ்வதிபூஜை |
| 06.10.2011 | புரட்டாதி 19 | வியாழக்கிழமை | விஜயதசமி |
| 15.10.2011 | புரட்டாதி 28 | சனிக்கிழமை | கார்த்திகை விரததினம், பகல் விசேட உற்சவம் |
| 26.10.2011 | ஐப்பசி 09 | புதன்கிழமை | தீபாவளி தினம் |
| 27.10.2011 | ஐப்பசி 10 | வியாழக்கிழமை | கந்தசஷ்டி விரதாரம்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவர் படையொன்றை உருவாக்கிய பெருமை பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கே உரியதாகும்

**திரு சண்முகதாஸ் அவர்கள்**

யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய மாணவர் படையொன்றை உருவாக்கிய பெருமை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு உண்டு. இலக்கியம் கற்பிப்பதில் அவர் தனி முத்திரை பதித்தவர். அவரைப்போன்று கற்பிக்கக்கூடிய அவர் வழிவந்த பரம்பரையினர் இன்று அருகிவருவது கவலை அளிப்பதாக உள்ளது. இவ்வாறு கூறியுள்ளார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை இல்லத்தில் நடைபெற்ற நவபாரதம் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பண்டிதை பொன். பாக்கியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில், யாழ்ப்பாணத்து தமிழ் அறிஞர்களின் இலக்கிய முயற்சி ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பட்டியல் போட்டுக் காட்டக் கூடியதாகவுள்ளது. இதில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு காத்திரமான இடம் உண்டு.




பண்டிதமணியின் கற்பித்தல் முறையில் கவரப்பட்ட மாணவர்கள் ஏராளம். அவர் தனக்கென ஒரு தனித்துவமான படிப்பித்தல் முறையைக் கையாண்டதால் மாணவர்களிடம் பெரும் மதிப்பைப் பெற்றார். அவரைப்போல கற்பிக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் பலர் சிறந்த ஆசிரியர்களாக உருவாகியுள்ளனர்.

மன்னவன் கந்தப்பு என்ற மூதறிஞர் பண்டிதமணியைப் பற்றி பல நல்ல கதைகள் கூறுவார். ஈழத்து இலக்கிய வரலாற்றை அறிந்து கொள்ள பண்டிதமணி சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.

தமிழ் மக்கள் அவருக்கு என்ன சிறப்புக் கொடுக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இலங்கைப் பல்கலைக்கழகம் அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

இலங்கை அரசு பண்டிதமணிக்கு முத்திரை வெளியிட்டுக் கௌரவித்துள்ளமை பாராட்டுக்குரியது.

திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் முப்பது வருடங்கள் தமிழ், சமய விரிவுரையாளராகக் கடமையாற்றிய பண்டிதமணி அன்றைய காலகட்டத்தில்

உடல் உள்ளவரைக்கும் கடல் கொள்ளாத கவலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ், சமயக் கட்டு ரைகளை எழுதிக் குவித்துள்ளார். இவை தவிர அவரால் எழுதப்பட்ட முன்னுரைகள், அணிந்துரைகள் ஏராளம். இவை யாவும் நூலுருப்பெற வேண்டுமென்பதே பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினரின் வேணவா வாகும். அவற்றுட் பல நூலுருப் பெற்றிருக் கின்றன. மிகுதியையும் வெகுவிரைவில் நூலுருவாக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய "நவபாரதம்" நூலினை பிரசித்த நொத்தாரிசு ச. தங்கமாமயிலோன் வெளியிட்டு வைக்க தனங்களப்பு விதானையார் பொ. நமசிவாயம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ், பேராசிரியர் எஸ். சிவ லிங்கராஜா உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

*-நன்றி: தினக்குரல்*

# பகவத் கீதைத் துளிகள்

**எப்பொழுதெல்லாம் உலகத்தில் தர்மம் தாழ்ந்து**
**அதர்மம் ஓங்குகின்றதோ அப்போதெல்லாம் நான்**
**என்னைத் தோற்றுவிக்கின்றேன்.**
**நல்லவர்களைக் காப்பதற்காகவும் தீயன செய்வோரை**
**அழிப்பதற்காகவும் தர்மத்தை நிலை**
**நிறுத்துவதற்காகவும் நான் யுகந்தோறும்**
**அவதரிக்கின்றேன்.**
**எந்த பக்தர்கள் என்னை எவ்விதம் வழிபடுகிறார்களோ**
**நானும் அவர்களுக்கு அவ்விதத்தில் அருள் புரிகிறேன்**
**ஏனெனில் எல்லா மனிதர்களும் பல்வேறு விதங்களிலும்**
**என் வழியையே பின்பற்றுகிறார்கள்.**
**நான் எல்லா உயிரினங்களின் உள்ளத்திலும்**
**ஆத்மாவாக இருக்கின்றேன்; மேலும்**
**உயிரினங்களுக்கெல்லாம் ஆதியாகவும் நடுவாகவும்**
**முடிவாகவும் நானே இருக்கின்றேன்**

நேர்மை அருமையான பண்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி ஆச்சிரம மண்டபத்தில் 29.08.2011 திங்கட்கிழமை தொடக்கம் 10.09.2011 சனிக்கிழமை வரையான விசேட நிகழ்வுகள்

**29.08.2011** திங்கட்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
விடயம் : "பஜனை"
வழங்குபவர்கள் : வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள்

**30.08.2011** செவ்வாய்க்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
சொற்பொழிவு : "சைவ வாழ்வியல்"
வழங்குபவர் : மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் அவர்கள்
(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி யாழ்ப்பாணம்)

**31.08.2011** புதன்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
சொற்பொழிவு : "சண்தம்பிக்கு முந்தை என்குமக்பி"
வழங்குபவர் : சைவப்புலவர் சி. நவரத்தினம் அவர்கள்
(ஆசிரிய ஆலோசகர்)

**01.09.2011** வியாழக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
சொற்பொழிவு : "மகோற்சவ தத்துவம்"
வழங்குபவர் : சைவப்புலவர் கு. சுமுகலிங்கம் அவர்கள்

**02.09.2011** வெள்ளிக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
சொற்பொழிவு : "செஞ்சொற் புனைமாலை"
வழங்குபவர் : விரிவுரையாளர் ச. லலீசன் அவர்கள்
(ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்)

**03.09.2011** சனிக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
சொற்பொழிவு : "வல்லபிரான்"
வழங்குபவர் : அதிபர் ஆறு. சிவநாதன் அவர்கள்
(வல்வை சிவகுரு வித்தியாசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04.09.2011** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
**சொற்பொழிவு** :"துணை"
**வழங்குபவர்** :ஆசிரியர் க. கைலநாதன் அவர்கள்
(யா/ அராலி இந்துக் கல்லூரி)

**05.09.2011** திங்கட்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
**சொற்பொழிவு** :"செல்லும் பொருளும் செல்லாப் பொருளும்"
**வழங்குபவர்** :திரு இரா. கேதீசன் அவர்கள்

**06.09.2011** செவ்வாய்க்கிழமை (பூங்காவனம்)
முற்பகல் **10.00** மணியளவில்
**சொற்பொழிவு** :"முருக வழிபாட்டின் தொன்மை"
**வழங்குபவர்** :சைவப்புலவர் க. நித்தியதசசீதரன் அவர்கள்

**07.09.2011** புதன்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
**சொற்பொழிவு** :"காவிக்கமல கழலுடன் சேர்த்தருள்வாய்"
**வழங்குபவர்** :சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் அவர்கள்
(ஆசிரிய ஆலோசகர்)

**08.09.2011** வியாழக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
**சொற்பொழிவு** :"வாழ்வாங்கு வாழ்வோன்"
**வழங்குபவர்** :திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள்
(இளை. ஆசிரியர்)

**09.09.2011** வெள்ளிக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
**சொற்பொழிவு** :"வேல் எடுத்த வேள்"
**வழங்குபவர்** :ஆசிரியர் இரா செல்வவடிவேல் அவர்கள்

**10.09.2011** சனிக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில்
**சொற்பொழிவு** :"சந்நிதியான் அருட்கடாட்சம்"
**வழங்குபவர்** :சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

**11.09.2011** ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா
**12.09.2011** திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் கூறும் சிவாகமம்

செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை அவர்கள்

சைவத்திருமுறை வரிசையில் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றிருப்பது திருமூலநாயனார் செய்த திருமந்திரம் என்னும் ஞானநூலாகும். இதற்கு திருமந்திர மாலை, சுந்தரனாகமம் முதலிய பெயர்கள் வழங்குகின்றன.

தமிழ்நாடும் சைவசமயமும் உய்யுமாறு திருமந்திரம் செய்த திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். அட்ட சித்தி கைவரப்பெற்ற சித்தர். இவர் பெருமையைச் சுந்தரமூர்த்தி நாயனார், சேக்கிழார் சுவாமிகள் முதலானோர் பாடியுள்ளார்கள்.

திருமூலர் வடக்கிலிருந்து சிவாலயங்களை வணங்கிக்கொண்டு தெற்குநோக்கி வந்தவழியில் சாத்தனூர் என்னும் ஊரில் மாடுமேய்த்து வந்த மூலன் என்பான் திடீரென இறந்ததையும், மாடுகள் கண்கலங்கி நின்ற பரிதாபத்தையும் கண்டு இரங்கித் தாமறிந்த பரகாயப்பிரவேசம் என்னும் கூடுவிட்டுக் கூடு பாயும் சித்தியால் மூலனுடம்பில் தம் உயிரைப் புகுத்தி மூலன் என எழுந்தார். இதனால் இவரை திருமூலர் எனவே வழங்கினார்கள். இவரின் பழைய பெயர் வழக்கொழிந்து போயிற்று. மாடுகளின் துயர்தீர்த்த பின் திருமூலர் தமது பழைய உடலிற் புகுவதற்கு முற்பட்டபோது, அதனைக் காணாது, இதுவும் திருவருள்போலும் எனக்கருதி மூலனுட்லோடு, திருமூலராய்த் திருவாவடுதுறை சென்று அரசமரத்தடியில் அமர்ந்தார். முன்னர் சிவபெருமான் மகேந்திர மலையிற் சொன்ன ஆகமத்தைத் தமிழிலே தாம் சொல்ல விரும்பி, 3000 பாடல்களைக் கொண்ட திருமந்திரம் என்னும் நூலைச் செய்தார். தாம் வடக்கிலுள்ள கைலையிலிருந்து வந்துள்ளமை "வளப்பில் கைலை வழியில் வந்தேனே" எனப்பாடுவார்.

திருமந்திரம் தமிழிலுள்ள ஒப்பற்ற சாத்திர நூலாயிருப்பதோடு இலக்கியமாயும் முக்திக்கு வழிகாட்டும் பெருஞானக் களஞ்சியமாகவும் உள்ளது. திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம் திருமந்திரமே சிவமாய் என்றும், திருமந்திரம் பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தெப்பம் என்றும் போற்றுவர். இதனை திருமூலரும் பயன்கூறும் பகுதியில் மிகவும் அழகாகப் பாடுவர்.

"மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்  
ஞாலம் அறியவே நந்தி அருளது  
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்  
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே"

திருமந்திரத்தில் பாயிரமும் ஒன்பது தந்திரங்களும் உள்ளன. தந்திரம் என்பது இந்நூலைப் பொறுத்தவரையில் நூலின் உட்பிரிவு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து ஆகமம் என்ற பெயரை ஆராயும்போது, பொதுவான விளக்கங்களும், சிறப்பான விளக்கங்களும் கூறப்படுவதைக் காணலாம். இப்பெயர் உணர்த்தும் பல்வேறு பொருள்களுள் தோற்றம், வருகை, சாஸ்திரம், சாத்திரஞானம், ஆப்தவாக்கியம் என்பன குறிப்பிடத்தக்கன. இறைவன் மூலமாகக் கொண்ட தெய்வீக ஞானநூல் என்றும், "தேவோக்தமான சமய சாஸ்திரங்கள்" என்றும் பொருள் விளக்கம் தரப்படுகின்றது. ஆகமம் என்பது தொன்றுதொட்டு வரும் அறிவு ஆகும். ஆ,க,ம என்ற மூன்றெழுத்துக்களும் முறையே ஆ என்பது பாசமெனவும், க என்பது பசு எனவும், ம என்பது பதி எனவும் பொருள்படும். மேலும் ஆ என்பது சிவஞானம், க என்பது மோட்சசாதனம், ம என்பது மலநாசம் எனவும் பொருள்படும். ஆகவே ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுக்கும் என்ற சிறப்பான விளக்கம் உணரற்பாலது.

சைவத்தின் கருவூலமாக சிவாகமங்கள் திகழ்கின்றன. எனவே இவை "முதல்வன் வாக்கு" எனச் சுட்டப்படுகின்றன. ஆகமம் என்ற பெயர் பொதுவாகச் சமயநெறிகளின் பிரமாண நூல்களைக் குறிக்கும். சைவ சமயத்திற்குரியனவே சிவாகமங்கள். சிவ சம்பந்தமுடைய காரணம் பற்றி அவை இப்பெயரைப் பெறுகின்றன. இச்சிவாகமங்கள் 28 ஆகும். ஒருசில மட்டுமே எமக்குக் கிடைத்துள்ளன. இப்பொழுது எமக்குக் கிடைத்துள்ள ஆகமங்களுள் காரணமும் காமிகமும் முக்கியமானவை. சிவாகமங்கள் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகசிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புலம், ஆக்நேயம், வீரம் இரெளவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோக்ஜதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என 28 ஆகமங்களாகும். திருமூலர் திருமந்திரத்தில் ஆகமச் சிறப்புப்பற்றி கூறவந்த இடத்து,

"அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடிருபத்து மூன்றுள ஆகமம்"

என்ற பாடலில் சிவபெருமான் 28 ஆகமங்களை அருளிச் செய்தனன் என்று கூறும் கருத்து கவனிக்கத்தக்கது.

இவ்வாகமங்களுள் முதற்பத்தும் விஞ்ஞானாகலருட் பரமசிவன் அநுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய அணுசதாசிவர் பதின்மருக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் சிவபேதம் எனவும், ஏனைய 18 ஆகமங்களும் அநாதிருத்ரர் முதலிய 18 உருத்திரர்களுக்கு அருளிச் செய்யப்பட்டமையால் உருத்திரபேதம் எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு மூலாகமங்களைக் கேட்டவர்கள் பிரணவராதி 66பேர் எனவும் வழங்கப்படுகின்றது. திருமந்திரத்தில் திருமூலர் இதனைக் கூறுவது கவனிக்கத்தக்கது.

இவ்வகையில் சிவாகமம் தொன்றுதொட்டு ஆன்மாக்களிடத்தே சிவப்பண்பு நிறைவதற்கும் வழிகோலும் நூலாக விளங்கி வந்துள்ளதெனக் கூறுவது பொருத்தமுடையதாகும். இறைவன் மெய்யடியார் தம்பொய்யில் திருவுள்ளத்திலேயே அருளுருவாய் நின்று உபதேசித்தருளுகின்றார் என்பதும் உணரத்தக்கதாகும். குருவையே இறைவனாக வழிபடும் பாரம்பரியமான பின்வரும் சுலோகம் வடமொழியிலுள்ளது.

"குருர் பிரம்மா குருர் விஸ்ணு குருர்தேவோ மகேஸ்வரா
குரு சாஷாத் பரம்பிம்ம தஸ்மை ஸ்ரீகுருவே நம"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவையே பிரம்மாவாகவும், விஸ்ணுவாகவும், மகேஸ்வரராகவும் பரப்பிரம்மமாகவும் கொண்டு குரு வணக்கம் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்ட சுலோகம் வலியுறுத்துகின்றது. திருமூலரும் திருமந்திரத்தில் முதல் தந்திரமாகிய உபதேசத்தில் "தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் தெளிவு குருவுருவச் சிந்தித்தல் தானே" என வருவது நோக்கத்தக்கதாகும். சிவாகம மரபில் குரு தத்துவம் முக்கிய இடம்பெறுவதை உணரலாம்.

ஆகமங்களில் இடம்பெறும் மந்திர அவதாரப்படலம் மந்திரத்தின் பெருமை கூற, தந்திர அவதாரப்படலம் தந்திரங்களின் பெருமை கூறும் ஆகமங்களிற் பயிலப்படும் மந்திரம், தந்திரம் ஆகிய இரு பெயர்களையும் தமது நூலின் தலைப்பெயராகவும் கூறும் பொருளுக்குரிய இயலைக் குறிக்கும் பெயராகவும் திருமூலர் கையாளுகின்றார். ஆகம மரபில் நின்றே திருமூலர் திருமந்திரத்தைப் பாடியுள்ளமைக்கு இவை சான்றாக அமையலாம். திருமந்திரத்திலே ஆகமச் சிறப்புப் பற்றியும் வேதச் சிறப்புப் பற்றியும் இரு பகுதிகள் கூறப்படுகின்றன. திருமந்திரத்திலே முறையே காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலாத்திரம், சுப்ரபேதம், மகுடாகமம் ஆகிய ஒன்பது ஆகமப் பொருளைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். ஆகமப் பொருளைத் தமிழில் தருமளவிற்கு அவரது காலத்தில் ஆகம மரபும் அவை தொடர்பான கருத்துக்களும் நடைமுறையில் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட கோயில் வழிபாடு பற்றியும் கோயில் அமைப்பு பற்றியும் திருமூலர் குறிப்பிடுகின்றார். கோயிற் பூசைகள் முறையாக நிறைவேறாதுவிடின் வரும் கெடுதல்கள் பற்றித் திருக்கோயிலழிவு என்ற பகுதியிற் கூறுகின்றார். கோயிலில் பூசை தப்பினால் வரும் விளைவுகள் பற்றியும் கூறுகின்றார். கோயில் அமைப்புப் பற்றித் திருமூலரின் கருத்துக்கள் தெளிவாக உள்ளன. தூலலிங்கம், சூக்குமலிங்கம், பத்திரலிங்கம் ஆகியவற்றையும் குறிப்பிடப்படுகின்றது. திருமூலர் தரும் இக்கருத்துக்களின் அடிப்படையிற் சில விடயங்கள் தெளிவாகின்றன. கோயில்கள் ஆகம மரபில் நடைபெற வேண்டுமென்பதும் கோயிலில் கடமைபுரியும் சிவாசாரியார் அல்லது பூசகர் ஆகமத்தில் ஆழ்ந்த அறிவுடையோராயிருத்தல் வேண்டுமென்பதும் வற்புறுத்தப்பட்டுள்ளன.

ஆகம மரபைத் திருமூலர் பின்பற்றிய முறையையும் நாம் ஓரளவு அறியமுடிகின்றது. சிவாகமப் பொருளையே "தந்திரம்" என்ற தலைப்பில் அமையும் பிரிவுகளில் விரித்துரைக்கின்றது. "திருமந்திரம்" என்ற பெயரும் "தந்திரம்" என்ற பெயரும் ஆகமத்தோடு இந்நூல் கொண்டு விளங்கும் உட்தொடர்பைக் காட்டுவன.

திருமந்திரம் ஆகமப்பொருளை விரித்துரைப்பதாகக் கொண்டு, ஒவ்வொரு தந்திரமும் ஒவ்வொரு ஆகமத்தின் கருத்தினை விளக்குவது எனத்தனித்தனி ஆகமத் தலைப்புக்களையும் கொடுத்துள்ளனர். அவை வருமாறு. முதல் தந்திரம்- காரணாகமம், 2ஆம் தந்திரம்- காமிக ஆகமம், மூன்றாம் தந்திரம்- வீராகமம், 4ஆம் தந்திரம்- சிந்தாகமம், 5ஆம் தந்திரம்- வாதுளாகமம், 6ஆம் தந்திரம்- வியாமளாகமம், 7ஆம் தந்திரம்- காலோத்தராகமம், 8ஆம் தந்திரம்- சுப்பிராகமம், 9ஆம் தந்திரம்- மகுடாகமம், பாயிரம் நீங்கலாக திருமந்திரத்தில் காணப்படுவன இவ் ஒன்பது தலைப்புக்களுமே "சிந்தை செய்தாகமம் செப்பவுற்றேனே" என்றும் ஒன்பது ஆகமங்களும் சிறப்புடையன என்றும் பாயிரமும் கூறும்.

திருமந்திர அமைப்புப்பற்றி நோக்கினால் முதலில் அமைவது பாயிரப்பகுதியாகும்.

*நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்புசெலுத்தமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு, குருபாரம்பரியம், திருமூலர் வரலாறு, அவையடக்கம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு, திரு மூர்த்திகளின் சேட்டகன் இட்டமுறை என்ப வற்றைக் கொண்டு விளங்குகின்றது.

திருமந்திர பாயிரத்தில் ஆகமச் சிறப்பு என ஒரு பகுதியையும் குறிப்பிட்டுள் ளமை நோக்கத்தக்கதாகும். ஆகமங்களை அருளியவன் இறைவன்.

"அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்று உள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்தறு வரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே"

நீலமேனி வாலிழைபாகத்தனாகிய சிவபெருமான் இருபத்தெட்டுத் தமிழ்ச்சிவாகமங்களை யும் அருளிச் செய்தார். குறையாத திருவடியுணர்வு கைவந்த மேலோராகிய விஞ்ஞகர் என்னும் நல்லார் இருபத்தெண்மரும் அவற்றைக் கேட்டுணர்ந்தனர். இருபத்தெட்டு ஆகமங்களையும் சிவபெருமான் தனக்குரிய ஒப்பில்லாத திருமுகங்கள் ஐந்தினுள் உச்சித் திருமுகத்தால் உணரத்தருளினார். அவற்றின் கண் கூறப்படுவதே அரும்பொருள் என்க. அரும்பொருள்- முப்பொருளுண்மை.

இருபத்தெட்டு ஆகமங்களும் அவை கேட்ட 66 பெயரும், கேட்ட முறையும் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| காமிகம் | -பிரணவர் | -திலகர் | -ஹரர் |
| யோகஜம் | -சுதா | -பஸ்மர் | -விடி |
| சிந்தியம் | -சுதீப்தர் | -கோபதி | -அம்பிகை |
| காரணம் | -காரணர் | -சர்வருத்ரர் | -பிரஜாபதி |
| அஜிதம் | -சுசிவர் | -சிவர் | -அச்சுதர் |
| தீப்தம் | -ஈசர் | -ஈசானர் | -ஹரதாசனர் |
| சூட்சுமம் | -சூட்சுமர் | -வைஸ்சிரவணர் | -பிரபஞ்சனர் |
| சகஸ்ரம் | -காலர் | -பீமர் | -தருமர் |
| அம்சுமான் | -அம்புசம்யமர் | -அர்க்கர் | -ரவி |
| சுப்பிரபேதம் | -தசேசர் | -விக்னேசர் | -சசி |
| விஜயம் | -அனுதிருத்ரர் | -பரமேசுவரர் | |
| நிஸ்லாசம் | -தசாரணர் | -சைவசர் | |
| சுவாயம்புவம் | -நிதனேசர் | -பிரமர் | |
| வீரம் | -தேஜஸ் | -பிரஜாபதி | |
| ரௌரம் | -பிரம்மேசர் | -நந்திகேசர் | |
| மகுடம் | -சிவர் | -மகாதேவர் | |
| விமலம் | -சர்வாத்மகர் | -வீரபத்திரர் | |
| சந்திரஞானம் | -அனந்தர் | -கிருஹஸ்பதி | |
| பிம்பம் | -பிரசாந்தர் | -ததீசி | |
| புரோக்கீதம் | -சூலி | -கலசர் | |
| லளிதம் | -லயர் | -ஆலயர் | |
| சித்தம் | -பிந்து | -கண்டேசுரம் | |

மொழி என்பது மனிதனின் எண்ணத்தின் ஆடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சந்தானம் | -சிவநிஷ்டர் | -வாயு |
| சர்லோக்தம் | -சோமதேவர் | -நிருசிம்மர் |
| பாரமேசுரம் | -ஸ்ரீதேவி | -உதனஸ் |
| கிரணம் | -தேவவிபவர் | -சம்வர்த்தகர் |
| வாதுளம் | -சிவா | -மகாகாளர் |

ஆகமத்தின் வழிபற்றிக் கூறும்போது பின்வருமாறு கூறுவார்.

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண்கோடி நூறாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்.
எண்ணிநின்று அப்பொருள் ஏத்துவன் நானே".

(தொடரும்...

# பாராட்டு வாழ்த்துப் பாமாலை

விரும்பியநாம் படிக்க வெகுவிளக்கமான கட்டுரைகள்
வியத்தகு செய்திகளுடன் நயத்தகு கவிதைகள்
கரும்புச்சாறு கலந்த தேன் போன்று தித்திக்கும்
கருத்துக் கலசமென மிளிரும் கவின்மிகு ஆக்கங்கள்
பெரும்புகழீட்டிய நல்லருந்தமிழ் அறிஞர்களால்
பேருவகை அளித்துவரும் "ஞானச்சுடர்" விளக்கே
அரும்பெரும் பெட்டகமாய் அவனிதனில் நீ ஒளிர
ஆசையுடன் வாழ்த்துகிறோம் வாழ்க பல்லாண்டே!

சிந்தனையைத் தூண்டிடும் சிறப்புமிகு கட்டுரைகள்
சீர்திருத்தஞ் செய்திடும் பல பேர் பெற்ற ஆக்கங்கள்
எந்தனை மகிழ்விக்கும் எழில்மிகு நற்கவிதைகள்
ஏற்றமுடன் வெளிவரும் ஆற்றல்மிகு அருங்கதைகள்
உந்தனை அலங்கரிக்க உன்னதமாய் உளமினிக்க
ஊக்கமுடன் நாம் படிக்கும் "ஞானச்சுடர்" புத்தகமே
வந்தனை செய்தோம் உனை நீ வளமுடன் வாழ்கவென
வாழ்த்துகின்றோம் நீயும் வாழ்க பல்லாண்டே!

-இராசையா ஸ்ரீதரன்-

பணம் பேசத் தொடங்கும்போது உண்மை ஊமையாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய நிறுவனங்களுடைய பணிகள் கிராமந்தோறும் விஸ்தரிக்கப்பட வேண்டும்

-தமிழ்நாடு முனைவர் சா. சரவணபவன் ஞானச்சுடருக்குச் செவ்வி-

**செவ்வி கண்டவர்: மதியெம்மான் சேய் அவர்கள்**

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் கடந்த 05ஆம் 06ஆம் 07ஆம் திகதிகளில் யாழ். நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் அகில இலங்கைச் சைவமாநாடு நடத்தப்பட்டது. இம் மாநாட்டில் பெருந் தலைவர் என்ற பொறுப்பை ஏற்றுச் சிறப்புரையாற்றுவதற்காகத் தமிழ்நாடு நல்லூரில் இருந்து முனைவர் சா.சரவணன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.



சென்னைப் பல்கலைக்கழக ஸைவ சித்தாந்தத்துறையில் 14 ஆண்டுகள் முழுநேர வருகைப் பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் சா.சரவணன், தற்போது சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மிசன் விவேகானந்தக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். நாற்பத்திரண்டே வயதான (திருமணமாகாத) பிரம்மச்சாரி. சென்னைப் புல்கலைக் கழகத்தின் சைவசித்தாந்தத் துறையின் முதலாவது 'சைவசித்தாந்தக் கலாநிதி' (Ph.D) என்ற பட்டத்தைப் பெற்ற பெருமைக்குரியவர். தமிழ், சைவசித்தாந்தம் தொடர்பாக இது வரை 20 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியக் கூடிய பேச்சாளர். சிவஞான முனிவரின் 32 நூல்களைத் தேடிப் பெற்று ஒரே தொகுதியாகப் பதிப்பாக்கம் செய்த பெருமைக்குரியவர். இதன் நிமித்தம் திருவாவடுதுறை ஆதீனத்தாரால் 'சித்தாந்தச் செம்மணி' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவர்.

இத்தனை சிறப்புக்களை உடைய இவர் ஓயாது கற்பதிலும் தீவிரமாக ஆய்வு செய்வதிலும் தனது கருத்துக்களை நிலைநிறுத்துவதிலும் தீவிரமாகச் செயற்படுகிறார். ஞானச்சுடர் வாசகர்களுக்காக இவரைச் சந்தித்தோம்.

*தீமையும் நன்மையும் பிறர் தரவாரா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகில இலங்கைச் சைவ மாநாட்டில் யாழ்ப்பாணத்துச் சைவ அறிஞர்கள் பாராட்டும் வகையில் பேருரைகளை ஆற்றியிருக்கிறீர்கள். சைவசித்தாந்தத்தைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுள் எவ்வாறு ஏற்பட்டது?**

சைவசித்தாந்தத்தை முதன்முதலாக எனது இளங்கலைப் பட்டப் படிப்பிற்குரிய (B.Lit.) ஒரு பாடமாகக் கற்றேன். அதன்போது எனக்குள் ஏற்பட்ட ஆர்வம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தில் முதுகலைமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெறுவதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது. அத்துடன் நான் பிறந்த இடம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள இடைக்கழிநாடு ஆகும். இங்குள்ள நல்லூரிலேயே நான் பிறந்தேன். சங்க நூல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையைத் தந்த 'நல்லூர் நத்தனார்' என் ஊரவர். சங்க இலக்கியப் புலவனுடைய ஊரில் பிறந்திருக்கிறேன். இவர் வழியில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் இளமையிலேயே ஏற்பட்டுவிட்டது. சைவ சமயம் மீதான பற்றுதலும் பட்டப்படிப்பின் போது பேராசிரியர் வை. இரத்தினசபாபதி போன்ற ஆசான்கள் ஏற்படுத்திய ஆர்வமுமே என்னுள் சைவ சித்தாந்தத்தை ஆழக் கற்க வேண்டும் என்ற விருப்பை உருவாக்கியது.

**சைவசித்தாந்தம் மீது தமிழகத்தாருக்குள்ள ஆர்வத்திற்கும் ஈழத்தவருக்கு உள்ள ஆர்வத்திற்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளைக் காண்கின்றீர்கள்?**

தமிழகத்தில் சமய நூல்களைக் கற்பதற்கான வாய்ப்புப் பாடசாலைக் கல்வியைப் பெறும் ஒருவருக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இங்கு பள்ளிப் பருவத்திலே சமய பாடத்தைப் பிள்ளைகள் கற்கின்றனர்.

இங்குள்ள வீடுகளில் சமயப் பழக்கங்களைப் பெற்றோர் போதிப்பதைப் பார்க்கிறேன். அரசியல் நிலைமைகளால் இச்செயற்பாடுகளில் சிறு தளர்வுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் சைவ சித்தாந்தக் கொள்கைகளை மக்கள் இயக்கமாகச் செயற்படுத்த வல்ல வலு இலங்கையிற்றான் உள்ளது.

**சைவசித்தாந்தத்தின் மூலம் மக்களை ஒருங்கிணைக்கலாம் என்று கருதுகின்றீர்களா?**

ஆமாம். ஒரு கொள்கையை எடுத்துக் கொண்டு அந்தக் கொள்கையிலே விடிவு இருக்கிறது, உழைக்கும் மக்களுக்கான பங்களிப்பு இருக்கிறது, என்ற நம்பிக்கை ஏற்படுமானால் அது மக்கள் சக்தியாக மாற்றம் பெறும். பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் சைவசமய நெறியைப் பக்தி இயக்கமாகக் கைக்கொண்டனர். சமய குரவர்கள் பக்தி இயக்கத்தின் ஊடாக அரசியலை ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். அதைப்போல பெருமான் என்கின்ற தலைவன் அருள் செய்வான் என்ற நம்பிக்கையில் இங்குள்ள சைவர்கள் ஒரு குடைக்கீழ் ஒற்றுமைப்படுவார்கள் ஆயின் மக்கள் இயக்கமாக அது வலுப்பெறும்.

**கோவில்களை நிர்வகிக்கின்ற அறங்காவலர்கள் மற்றும் குருமார்கள் சைவ சித்தாந்தம் தொடர்பாக அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

சமூகப் பொருளாதாரத் தளத்தில் ஓரளவு மேம்பட்டவரைத்தான் ஆலயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்காவலர்களாக அமைத்துக்கொள்கிற வழக்கம் உள்ளது. அவர் சுரண்டல் செய்ய மாட்டார் என்ற நம்பிக்கையிற்றான் அவரைத் தெரிவு செய்கிறோம். சுரண்டல் செய்யாமல் இருப்பதற்கு கடவுள் நம்பிக்கை அவசியமானது. சமய நம்பிக்கையில் பற்றில்லாதவர்களாலேயே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சமய ஆசாரம் ஒழுக்கம் என்பவற்றைப் பேணி நடப்பதற்குச் சைவசித்தாந்த அறிவு அவசியமாக உள்ளது. கடவுள் பற்றிய உண்மையை விளங்கியவர் ஒழுக்கப் பிறழ்வுகளில் ஈடுபடமாட்டார்.

**சைவ சமயத்தளத்திலே சமூகப் பணி நலிவடைந்திருப்பதாகக் கருதுகின்றீர்களா?**

கண்டிப்பாக. மக்களுடைய துன்பத்திலே அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டிய பொறுப்பு சமய நிறுவனங்களுக்கு உள்ளது. சமய நிறுவனங்கள் ஊர் ஊராகத் தமது பணிகளை விஸ்தரிக்க வேண்டும். நலிவுற்ற மக்களுக்கு தொண்டு செய்வதில் சமய நிறுவனங்கள் கூடிய அக்கறை காட்ட வேண்டும். தமிழ்நாட்டில் சமயத் தளத்தில் சமூகப் பணி என்று எடுத்துக் கொண்டால் அது சாதிப் பிரச்சினையாகவோ மொழிப் பிரச்சினையாகவோ உருமாறி விடும். இங்குள்ள நிலைமை அவ்வாறு இல்லை. எனவே தாராளமாக சைவ சமய வாதிகள் அடிநிலை மக்கள் மட்டத்திற்கு இறங்கித் தொண்டாற்ற வேண்டும். உழைப்பு மற்றும் உற்பத்தியைச் சார்ந்த தளத்திலேயே சமயத்தை வளர்க்க முடியும்.

**சைவசித்தாந்தத்தின் மீதான யாழ்ப்பாணத்தவரின் நம்பிக்கை எப்படியிருக்கிறது?**

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் எனக் கூறுவர். சைவசித்தாந்தத்தை வெளிப்படுத்தும் சிறந்த நூல் கந்தபுராணம். இங்குள்ளவர்கள் இந்நூல் தொடர்பான அறிவைப் பெற்றிருக்கிறார்கள். அதைவிட வேதாந்தம் - சைவ சித்தாந்தம் என்ற வகையில் வேதாந்தத்தில் இருந்து சைவ சித்தாந்தத்தைத் தெளிவாக நிலை நிறுத்துவோம் எனச் செயற்படுபவர்கள் ஒரு தொகுதியினர். பட்டத்தைப் பெறுவதற்காகக் கற்பவர்கள் ஒரு தொகுதியினர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஐம்பது பேர் சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். தற்போது ஐம்பது பேர் கற்கின்றனர். தமிழ்நாட்டுடன் ஒப்பிடும் போது இது மிகப் பெரிய விடயம். அதைவிடச் சைவசித்தாந்த பண்டிதர், சைவப் புலவர் முதலிய தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. இவை வெறும் பட்டங்களுக்கான கல்வியாக இருக்கக் கூடாது. இவர்கள் மொழியையும் சித்தாந்தத்தையும் மக்கள் மத்தியில் பரப்புரை செய்து கடவுள் நம்பிக்கையை மேம்படுத்த வேண்டியவர்களாகவும் சைவ வாழ்வியலுக்கு வழிகாட்ட வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

**சைவசித்தாந்தம் பற்றி கற்பதற்கு ஆவலாக உள்ள மாணவர்கள் முதற்கட்டமாகப் படிக்க வேண்டிய நூல்கள் பற்றிச் சொல்லுங்கள்**

சைவசித்தாந்தம் பற்றிக் கற்க விரும்புபவர்கள் முதலில் உண்மை விளக்கத்தையும் திருவருட் பயனையும் படிக்க வேண்டும். உண்மை விளக்கத்தில் பட்டியல் எல்லாம் வந்து விடும் அதன் பிறகு எது எது புதுக்கருத்துக்கள் என்கிற விளக்கம் திருவருட்பயனில் வந்துவிடும். அதன் பின்பு சிவஞான சித்தியாரைக் கற்பது உகந்தது. அதன் பின்பு மெய்கண்டாரின் சிவஞான போதத்தைக் கற்பது உகந்தது.

*அதிக ஓய்வு அதிக வேதனையைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்நாட்டில் சைவ சித்தாந்தத்தைக் கற்பதற்கான கல்வி வாய்ப்புக்கள் பற்றிக் கூறுங்கள்?**

தமிழ் நாட்டில் மதுரைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் சைவ சித்தாந்தத்துறைகள் உள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் நந்தினி என்ற மாணவி சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தில் எம்.ஏ. மற்றும் பி.எச்.டி. பட்டங்களைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாணத்தவர்கள் தமிழகத்திற்கு வந்து இப்பல்கலைக்கழகங்களில் பட்டங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தமிழ்நாட்டு மக்களின் சமய நம்பிக்கைகள் பற்றி உங்கள் பார்வை என்ன?**

அங்கு தற்போது தொலைக்காட்சி நாடகப் பண்பாடே வேருன்றியுள்ளது. தமிழ்நாட்டுக் கல்வியாளர்கள் தொலைக்காட்சிப் பண்பாட்டையே எதிர்த்துக் குரல் கொடுக்க மாட்டாதவர்களாக இருக்கிறார்கள் என நான் அடிக்கடி வேதனைப்பட்டுக் கொள்வேன். இந்நாடகங்கள் ஏற்படுத்துகின்ற தாக்கம் வலிமையானது. தமிழ்நாட்டு நாடகங்களை உலகளாவிய ரீதியில் உள்ள தமிழர்கள் தொலைக்காட்சி ஊடாகப் பார்க்கிறார்கள். இந்த நாடகங்களில் ஒன்றில்தானும் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்துவதாகச் சித்திரிக்கப்படுவதில்லையே.

இதைவிடத் தமிழ்நாட்டில் சமயப் பண்பாட்டை விட சோதிடப் பண்பாடே காணப்படுகின்றது. திராவிடா கழகததைச சோநத தொலைககாட்சி அலைவரிசைகள் கூட புராணங்களுக்கும் சோதிடத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. சைவசமயத்தின் உண்மையை விளக்குவது சைவசித்தாந்தம் ஆனால் புராணங்களை ஒளி பரப்புதற்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கி மூட நம்பிக்கைக்கான தளத்தை விரிப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றனர். அங்கு பத்திற்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளன. இவற்றைக் காலையிலே திறந்து பார்த்தால் ஒரு மணி நேரத்திற்கு பக்தி என்ற பெயரில் ஏதேதையோ எல்லாம் காட்டுகிறார்கள். அறிவியலையோ தத்துவவியலையோ போதிப்பதற்கு அவர்கள் முயற்சிப்பதில்லை. மக்களை மூடநம்பிக்கைகளின் வழி உட்படுத்தவே விரும்புகிறார்கள். இது திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல் ஒன்றின்படி நடப்பதாகவே கருதுகின்றேன்.

**யாழ்ப்பாண மக்களின் சைவ சித்தாந்த அறிவை மேம்படுத்த உங்களால் எத்தகைய பங்களிப்புக்களை வழங்க முடியும் எனக் கருதுகின்றீர்கள்?**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத் துறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அதில் சைவசித்தாந்தப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். தற்போது இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர்களும் மற்றும் சைவ சித்தாந்தம் அறிந்த வெளியாட்களுமே சைவ சித்தாந்த பாடத்தைப் போதிக்கின்றனர். பாடம் போதிப்பது தொடர்பில் என்னாலான உதவிகளை மேற்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

இங்குள்ள மாணவர்கள் தென்னிந்தியத் தல யாத்திரை மேற்கொள்வதும் நலமாயிருக்கும். அங்கு சில காலங்கள் தங்கியிருந்து சைவசித்தாந்த அறிஞர்களிடம் பயில்வதும் வாய்ப்பாக அமையும். சைவ பரிபாலன சபை போன்ற நிறுவனங்கள் சைவ சித்தாந்த அறிவை மக்கள் மத்தியில் பரப்புரை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கும் சந்தர்ப்பங்களில் என்னாலான பங்களிப்புக்களையும் வழங்க ஆவலாயிருக்கிறேன்.

*எச்சரிக்கப்படுவதைவிட எச்சரிக்கை செய்வதே மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிச் சொல்லுங்கள்**

கிடைத்தற்கரிய நூல்களைத் தேடிப் பெற்றுத் தொகுத்து வெளியிட வேண்டும் என விரும்புகின்றேன். சிவஞான முனிவரின் 32 நூல்களைப் பெற்றுத் தொகுத்து வெளியிட்டுள்ளேன். இதே போல மறைமலை அடிகளின் ஆசிரியரான சூளை சோமசுந்தர நாயகரின் 45 நூல்களைத் தேடிப் பெற்று இரண்டு பகுதிகளாகத் தொகுத்து வெளியிட்டுள்ளேன். சைவத்தின் பார்வைகளை இணைத்து இளைஞர்களுக்கான ஒழுக்கவியல் பற்றிய நூல் ஒன்றை எழுதி வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறேன். இதன் மூலம் சைவம் பற்றிய தெளிவான பார்வையொன்றை இளைஞர்கள் மத்தியில் பதிய வைக்க எண்ணியுள்ளேன்.

**ஞானச்சுடர் சஞ்சிகை பற்றி உங்கள் பார்வையைக் கூறுங்கள்**

தமிழகத்தில் மடங்கள் மற்றும் ஆதீனங்களால் சமயச் சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. இன்னும் வியாபார நோக்கிலும் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இவற்றுள் பல மூடநம்பிக்கைகளை மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கே துணைசெய்கின்றன. ஞானச்சுடர் இந்தத் தளத்தில் இருந்து விலகி மக்கள் மத்தியில் சமய நம்பிக்கைகளை வளர்க்கும் நோக்குடன் பயணிப்பது திருப்தி தரக்கூடிய விடயம். சஞ்சிகை வெளியீட்டாளர்கள் அதன் வடிவமைப்பில் கொஞ்சம் கவனம் எடுக்க வேண்டும் என நினைக்கிறேன். இலங்கையில் ஒரு சைவசமய சஞ்சிகை 2000 இற்கும் அதிக பிரதிகளை இலாபநோக்கற்று விநியோகிப்பது என்பது மிகப்பெரிய விடயம்.




*தீய செயல்களிலிருந்து நம்மைத் தடுப்பவன் நண்பன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திருக்கோயில் வரிசை:

# சுவாமிமலை (திருவேரகம்)

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

"நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம்"

-கந்தபுராணம் (துதிப்பாடல்)

முருகனுக்குகந்த நான்காவது படைவீடான சுவாமிமலை திருத்தலம் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்திலிருந்து மேற்கே 8கி.மீ தூரத்திலும், சுவாமிமலை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே சுமார் 2 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளது. கும்பகோணம் பெருநகரிலிருந்து பேருந்துகள் அடிக்கடி சென்று வருகின்றன.

திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் தெய்வானையைத் திருமணங்கொண்டு திருமணக்கோலத்தில் காட்சி தருகிறார். திருச்செந்தூர் சூரனை வென்று தேவர்களுக்குக் காட்சியளித்த தலமாகும். பழநியில், உலகமெலாம் சுற்றி வந்தும் சிவபெருமானிடமிருந்து பழம் கிடைக்காத நிலையில், முருகன், சினந்து வந்து ஞானப்பழமாய் நின்றார் என்பது புராண வரலாறு. சுவாமிமலை சிவபெருமானுக்குத் திருமுருகன் பிரணவப் பொருள் உபதேசித்த ஸ்தலமாகும். திருத்தணி, குன்றக்குடி, விராலிமலை, வள்ளிமலை, மயிலம், திருச்செங்கோடு, கதிர்காமம் ஆகியன குன்றுதோறாடலில் சேரும். மதுரைக்குப் பக்கத்தில் உள்ள பழமுதிர்சோலையும் வேறுபல சோலை சூழ்ந்த தலங்களும் பழமுதிர் சோலையுள் அடங்கும். இவற்றைத் தவிரவும் முருகன் குடிகொண்டுள்ள தலங்கள் இன்னும் பலப்பல. வைத்தீஸ்வரன் கோயில் என்றழைக்கப்படும் புள்ளிருக்கு வேளூர், போரூர், குமாரவயலூர், இலஞ்சி, எண்கண், எட்டுக்குடி, திருவிடைக்கழி, வடபழனி, விரிஞ்சிபுரம், திருமுருகன்பூண்டி, சிக்கல், கந்தகோட்டம் ஆகிய ஸ்தலங்கள் எல்லாவற்றிலும் அன்பர்கள் அகம்மகிழக் காட்சி தருகின்றான் முருகன்.

முருகன் விரும்பி வாழும் திருப்பதிகளை விபரிக்கும்போது சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்று
மேரகமு நீங்கா இறைவன்"

எனப் பாடுகின்றார்.

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் சுவாமிமலையைத் "திருவேரகம்" என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனால் திருமுருகாற்றுப்படைக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், "திருவேரகம் வேறொரு மலையகத் திருக்கோயில்" எனக் குறிப்பிடுவதால் திருவேரகம் சுவாமிமலையைக் குறிக்காது" எனக் கருதுவோரும் உள்ர். அருணகிரிநாதர் சுவாமிமலை மீது பாடிய 39

மனிதர் இழிவடைவது தீய ஒழுக்கத்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழிலும் "ஏரகத்துறை முருகா" எனப் போற்றிப் புகழுகிறார். ஒரு திருப்புகழில் வரும் இரண்டு வரிகள் இவை:

..........................................

திருவே ரகத்தி லுறைவா யுமைக்கோர்
சிறுவா கரிக்கு மிளையோனே

...................................

...................................

இந்திராதி தேவர்கள் அனைவரும் முருகனை வணங்கிச் செல்லவும், "இவன் சிறுவன்தானே" என எண்ணிச் சென்ற பிரம்மாவின் அகந்தையை அடக்க எண்ணிய முருகன் பிரம்மாவை அழைப்பித்து, "ஓம்" என்ற சொல்லுக்குப் பொருள் கூறப் பணித்தார்.

"தாம ரைத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாம றைத்தலை எடுத்தனன் பகர்தலும் வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவேள் நிற்றிமுன் கழறும்
ஓமெ னப்படும் மொழிப்பொருள் இயம்புகென் றுரைத்தான்"

(தாமரைத் தலை- தாமரை மலர்மீது, குடிலை- பிரணவ மந்திரமாகிய "ஓம்", மாமறைத் தலை- நான்கு வேதங்களில் முதன்மையாகிய ருக்வேதம்)

"ஓம்" என்ற சொல்லுக்குப் பொருள்கூற முடியாத பிரம்மாவின் தலைகள் நான்கிலும் குட்டிச் சிறையிலிட்டு தாமே படைப்புத் தொழிலைப் புரியலானார் முருகன். பின்னர் சிவபெருமானிடம் தேவர்கள் முறையிடவே, பிரம்மாவைச் சிறை விடுத்தார் முருகன்.

பிரம்மாவும் விளங்கமுடியாத பிரணவப் பொருளை முருகன் அறிந்திருந்ததனால், அதனைத் தமக்கு உபதேசிக்கும் வண்ணம் சிவபெருமான் கேட்கவே, முருகனும் தன் தந்தையின் மடிமீதமர்ந்து குருமூர்த்தியாகப் பிரணவப் பொருளைச் சிவனது திருச்செவியில் உபதேசித்து சுவாமிநாதனென்றும்- குருநாதனென்றும் பெயர் பெற்றார். சுவாமியாகிய சிவபெருமானுக்கு முருகப் பெருமான் குருவாக விளங்கியபடியால் இப்பதி **"சுவாமிமலை"** என்றும் **"குருமலை"** என்றும் காரணப்பெயர் கொண்டு அழைக்கப்படலாயிற்று.

தந்தைக்கு உபதேசித்த காரணத்தால் குமரனும் **"தகப்பன் சாமி"** எனப் பெயர் பெறுகிறார். சிவபெருமான் சீடராகவும், முருகப்பெருமான் குருவாகவும் இருந்ததை விளக்கும் வண்ணச் சித்திரங்கள் கீழ் மலையில் உள்ள சிவன் சந்நிதியிலும், மேல் மலையில் உள்ள முருகன் சந்நிதியிலும் காணப்படுகின்றன. இரண்டாம் பிரகார வாசலில் உள்ள, விநாயகர்- நாரதர்- மகாவிஷ்ணு- பிரம்மா- அகத்தியர்- வீரவாகுதேவர் முதலானோர் சூழ்ந்திருக்க முருகன் தந்தையின் மடிமீதமர்ந்து உபதேசிக்கும் காட்சியினைச் சித்தரிக்கும் சுதைச் சிற்பம் கோயில் வரலாற்றினைச் சிறப்பாக சித்தரிக்கின்றன. "தன்னிளங் குமரன் தன்னைத் தலைமையோடிருப்ப நல்கி" என்றும், "தாரகத் துருவமாந் தலைமையெய்திய ஏரகத்தறுமுகன்" என்றும் கந்தபுராணம் கூறுவதையுங் காண்க. தகப்பன் சாமியின் மகிமையை அருணகிரிநாதர் தமது திருப்புகழில் இவ்வாறு பாடுகிறார்.

"சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ் சாமி யெமதுளே
சிறக்குஞ் சாமி சொருபமி தொளிகாணச்
செழிக்குஞ் சாமி பிறவியை யொழிக்குஞ் சாமி பவமதை

மகிழ்ச்சி நிறைந்த மனிதன் தியாகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெறிக்குஞ் சாமி முநிவர்க ளிடமேவுந்
தவத்தின் சாமி புரிபிழை பொறுக்குஞ் சாமி குடிநிலை
தரிக்குஞ் சாமி யசுரர்கள் பொடியாகச்
சிதைக்குஞ் சாமி யெமைபணி விதிக்குஞ் சாமி சரவண
தகப்பன் சாமி யெனவரு பெருமாளே"

மருந்துக்குக்கூட மலையில்லாத தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் அருகே அமைந்துள்ள சுவாமிமலை ஒரு கட்டுமலையேயாகும். இத் திருக்கோயில் மூன்று கோபுரங்களுடனும், மூன்று பிரகாரங்களுடனும் அழகுறக் காட்சி தருகிறது. மேலைக் கோபுரமும் கீழைக் கோபுரமும் மொட்டைக் கோபுரங்களாக விளங்க தெற்குக் கோபுரம் மட்டும் ஐந்து நிலைகளுடன், கந்தபுராண நிகழ்வுகளை விளக்கும் எழில்மிகு சுதைச் சிற்பங்களுடைய ராஜ கோபுரமாகத் திகழ்கிறது. முதற் சுற்று கட்டுமலையின் அடிவாரத்திலும், இரண்டாம் சுற்று மலையின் நடுப்பகுதியிலும், (இச்சுற்றிலேதான் சுந்தரரேஸ்வரர், மீனாட்சியம்மைக்கான தனிச்சந்நிதிகள் காணப்படுகின்றன) மூன்றாம் சுற்று மலையுச்சியில் சுவாமிநாதப் பெருமானின் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியும் அமைந்துள்ளன. ராஜகோபுர வாசலையும் அதனை அடுத்துள்ள கல்யாண மண்டபத்தையும் கடந்து சென்றால் முதலில் வருவது மீனாட்சியம்மை சந்நிதியாகும். இங்கு அன்னை தன் குமரனை வணங்கவரும் பக்தர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் வழங்கும் தாயாக விளங்குகிறார்.

அம்பிகை முருகனுக்கு வேலும், காலனை உதைக்கச் சிவபெருமானுக்குக் காலும், திருஞானசம்பந்தருக்குப் பாலும், மன்மதனுக்குச் செங்கோலும் அளித்து உலகத்தைக் காத்துவரும் அவள், தம்மை அண்டி வந்தோருக்கெல்லாம் வாரி வழங்குவாள் என்பதனை படிக்காசுப் புலவர் இவ்வாறு பாடுகிறார்.

"வேல் கொடுத்தாய் திருச்செந்தூரர்க்குக் காலன்மீது வைக்கக்
கால் கொடுத்தாய் நின் மணவாளனுக்குக் கவுணியர்க்குப்
பால் கொடுத்தாய் மதவேளுக்கு மூவர் பயப்படச் செங்
கோல் கொடுத்தாய் அம்மையே எனக்கு ஏதும் கொடுத்திலையே!"

அன்னையின் சந்நிதிக்கருகில் உள்ள கிழக்கு நோக்கிய சுந்தரேஸ்வரரின் தனிக்கோயில் அழகுடன் மிளிர்கிறது. சர்வ அலங்காரங்களுடன் சுந்தரேஸ்வரர் அருள் பாலிக்கிறார். நால்வர்- தட்சணாமூர்த்தி- விஸ்வநாதர்- விசாலாட்சி- சோமாஸ்கந்தர்- வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்- நவக்கிரகங்கள்- துர்க்கை- சண்டிகேஸ்வரர் சந்நிதிகள் பிரகாரத்தில் தனிச் சந்நிதிகளில் அமைந்துள்ளன. அம்மன் சந்நிதிக்குக் கிழக்கில் வசந்த மண்டபமும், அதையடுத்து மலை ஏறுவதற்கான படிகளும் காணப்படுகின்றன. மலை உச்சியை அடைவதற்கு அறுபது படிக்கட்டுகள் உள்ளன. இப்படிகள் தமிழ் வருடங்கள் அறுபதையும் குறிப்பன என்பதைக் குடந்தைப் புராணம் இவ்வாறு வர்ணிக்கிறது.

"வரு பிரபவ முதல் வருட் தேவர்கள்
திருவளர் அம்மலைச் செறிந்த பல்படி"

முதற்படியில் தேங்காய் உடைத்துத் தீபாராதனை செய்து வழிபட்ட பின்னரே மக்கள் படியேறிச் செல்வதைக் காணமுடிந்தது. இதைவிட மனித வாழ்வின் அறுபது ஆண்டுகளின் நிறைவு மணிவிழாவினைக் குறிப்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இந்தப்

மிகப்பெரிய தொழிற்சாலை மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கட்டுகளின் அருகாக அடிவாரத்தில் ஸ்தல விருட்சமான நெல்லிமரம் காணப்படுகிறது. 28 படிகள் ஏறிவந்த நிலையில் ஒரு மாடததில் "படிக்கட்டு விநாயகர்" காணப்படுகிறார். அருகிலேயே ஒரு பரந்த மண்டபமும் தொடர்ந்து இரண்டாம் சுற்றும் காணப்படுகிறது. இச்சுற்றின் தென் பக்கச் சுவரில், அருணகிரிநாத சுவாமிகள் சுவாமிநாதப் பெருமாள்மீது பாடிய "திருஎழுகூற்றிருக்கை" (தேர் வடிவில் அமைந்துள்ள சித்திரகவி) சலவைக் கல்லில் பதிக்கப்பெற்றுள்ளமையும் காணலாம்.

மிகுதியாகவுள்ள 32 படிகளையும் கடந்து சென்றால் ஸ்தல விநாயகர் சந்நிதியையும் தங்கத்தினாலான தம்பத்தையும், மூலமூர்த்தியான சுவாமிநாத சுவாமியின் கிழக்கு நோக்கிய சந்நிதியையும் காணலாம். பலிபீடமருகே மயிலுக்குப் பதிலாக யானை வாகனமாக நிற்கிறது. ஹரிகேசன் எனும் அசுரனால் வலிமையிழந்த இந்திரன் சுவாமிநாதப் பெருமானை வழிபட்டு, மீண்டும் வன்மைபெற்று அசுரனை அழித்ததாகவும்; அந்த நன்றிக்கு அறிகுறியாக தனது யானையாகிய ஐராவதத்தை முருகவேளுக்குத் தொண்டுபுரிய நிறுத்திவிட்டுச் சென்றதாகவும் ஸ்தல வரலாறு கூறுகிறது. (சென்னை பெசன்ற் நகரில் உள்ள அறுபடை வீடு கோயிலைத் தரிசிக்கச் செல்லும் அடியார்கள் சுவாமிமலைச் சந்நிதியில் பலிபீடமருகே யானை நின்ற நிலையில் உள்ளதைப் பார்த்திருப்பீர்கள்.)

மகாமண்டபத்தின் தூண்கள் அழகிய யாளிகளின் சிற்பங்களாலும், கொடுங்கைகளில் (தாழ்வாரங்களில்) தொங்கும் தாமரை மொட்டுப் போன்ற வடிவங்கள் கொண்டும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. மகா மண்டப வாசலருகே இடதுபுறம் அகஸ்தியர்- அருணகிரிநாதர்- நவவீரர் முதலான திருவுருவங்களும், வலதுபுறம் இடும்பனின் திருவுருவமும் காணப்படுகின்றன. மண்டபத்தின் ஒரு பக்கத்தில் சுவாமிநாதப் பெருமானின் உற்சவ மூர்த்தமுள்ள சந்நிதியும் உண்டு.

கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர், விசாலாட்சி விஸ்வநாதர், சந்திரசேகரர், கஜலெட்சுமி, சரஸ்வதி, நம்பிராஜன், வீரவாகுதேவர், வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான், சபாபதி ஆகியோர் அமர்ந்துள்ள தனிச்சந்நிதிகள் காணப்படுகின்றன.

இவ்வடிவங்களில் சந்திரசேகரர், சபாபதி ஆகிய இரு திருவுருவங்களும் சிவபெருமானின் மகேஸ்வர வடிவில் இல்லாமல், முருகனின் தோற்றமாக அமைந்துள்ளது ஒரு அதிவிசேட அம்சமாக உள்ளது. அதிலும் குறிப்பாக முருகன் தெய்வானையுடன் தனித்திருக்கும் (வள்ளி இல்லாமல்) கோலமானது. சூரசம்ஹாரம் முடிந்த பின்னர் திருப்பரங்குன்றத்தில் தெய்வானையைத் திருமணம் செய்துகொண்டு சபாபதி கோலம் தாங்கிய வடிவமாகும். சந்திரசேகரர், சபாபதி இருவரதும் வடிவங்களை முருகன் திருவுருவில் காண்பது மிக அபூர்வமானதே.

கர்ப்பக்கிரகத்தில் சுவாமிநாதப் பெருமான் சுமார் ஆறு அடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் கம்பீரமாக வலது திருக்கரத்தில் தண்டம் பிடித்தும், இடது திருக்கரத்தைத் தொடைமீது வைத்தும் கருணை வழியும் திருமுகத்துடன் பார்ப்போரைப் பரவசப் படுத்தும் வகையில் யோககுருவாகத் தரிசனம் தருகிறார். சுவாமிநாத சுவாமியின் திருக்கரத்தில் விளங்கும் வேல் ஒப்பற்றது. சிவனின் பாகமாய் அமர்ந்த உமையம்மை சூரனை வெல்வதற்காக இந்த வேற்படையை வேலனுக்கு அளித்தாள். அவ்வேலின் மகிமை இவ்வாறு பேசப்படுகிறது.

நல்லெண்ணம் நற்செய்கையை உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்- வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

*பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சொக்கநாதப் புலவர் என்பார் திருவேரகத்திலுள்ள சுவாமிநாத மூர்த்தியைச் செட்டியாராக உருவகப்படுத்தி இரு பொருள்படப் பாடியது ரசிக்கத்தக்கது.*

"வெங்காயம் சுக்கானால், வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்து இருப்பார் இச்சரக்கை - மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே!"

*"வினையைப் போக்குதற்கு ஏற்ற இடம் ஏரகத்துச் செட்டியாராக விளங்கும் முருகப் பெருமானின் திருவடிக் கமலங்களே ஆகும். அவையே நமக்கு வீட்டுப்பேறு (சீர அகம்) அருளவல்லவை" என்கிறார் சொக்கநாதப் புலவர். இக் கருத்தையே பட்டினத்தாரும் "அறமார் புகழ் தில்லை அம்பலவாணர் அடிக்கமலம் மறவாதிரு மனமே! அதுகாண் நல் மருந்துனக்கே!" என்று வலியுறுத்துகிறார்.*

*"வினையைப் போக்கும் வலிமை, எம்பெருமானின் திருப்பாதார விந்தங்களுக்கே உண்டு" என அருணகிரிநாத சுவாமிகளும் பாடுகிறார்.*

"விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்கழ லென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே!"

-கந்தரநுபூதி: பாடல்35)

*சுவாமிநாதப் பெருமான் நமக்கும் கருணை கூர்ந்து இன்னல் போக்கி இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டியருள வேண்டுமெனப் பிராத்தித்து அவன் அருள் பெற்றுய்வோமாக.*

"உருவாய் அருவாய் உளதா யிலதாய்
மருவாய் மலரா மணியா யொளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!"

-கந்தரநுபூதி: பாடல்51)

பி.கு: *சுவாமிமலை சுவாமிநாதப் பெருமானைத் தரிசிக்கச் செல்லும் அன்பர்கள், சுவாமி மலையைச் சுற்றி மிக நெருக்கமாகவுள்ள திருக்கோயில்களையும் தரிசித்து வரலாமே!*

### (1). திருவைகாவூர் (வில்வவனம்):

*சுவாமிமலையிலிருந்து 5 மைல் தூரத்தில் இக்கோயில் காணப்படுகிறது. வேடன் வில்வம் சொரிந்து முத்திபெற்ற ஸ்தலம். சிவராத்திரிக்குச் சிறப்புப் பெற்றது இக்கோயில்.*

*(ஞானச்சுடர்: பங்குனி, 2008)*

பணத்தால் செய்யாததை மனத்தால் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2). பட்டீஸ்வரம்:**

*சுவாமிமலையிலிருந்து (கும்பகோணம் செல்லாமல்) குறுக்குப் பாதையால் 3கி.மீ தூரம் கொண்டது இத்தலம். திருஞானசம்பந்தருக்காக நந்திகள் விலகிய அற்புதம் நடந்த திருத்தலம்.*

*(ஞானச்சுடர்: மார்கழி, 2009)*

**(3) திருவலஞ்சுழி:**

*சுவாமிமலையைச் சென்றடைய 3 கி.மீ முன்பதாக இத்திருக்கோயில் காணப்படுகிறது. ஒன்பது அங்குல உயரமேயுள்ள கடல்நுரைப் பிள்ளையாரைத் தரிசிப்பதுடன், கல்யன்னல், ஒரே இரவில் கட்டப்பட்ட "அபராத மண்டபம்" ஆகியவற்றையும் கண்டு மகிழலாம்.*

*(ஞானச்சுடர்: சித்திரை, 2011)*

**(4) தாராசுரம்:**

*ஐ.நா. ஸ்தாபனத்தின் தொல்பொருட் பிரிவினரால் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழ் நாட்டின் 3 கோயில்களில் ஒன்று இது. ஒவ்வொரு கல்லும் கதை சொல்லும் சிறந்த கலையழகு மிக்க ஸ்தலம். நந்தியின் ஏழு படிகளிலும் ஒலிக்கும் ஏழு சுரங்களையும் கேட்டு மகிழலாம்*

# அதுதான் மழை

**வட சென்னையில், ஒரு பிள்ளையார் கோவிலில் திருவாரியார் சுவாமிகளின் "கந்தபுராண"ச் சொற்பொழிவு. ஏராளமானோர் முன்னாலேயே இடம்பிடித்து உட்கார்ந்து விட்டார்கள். நிகழ்ச்சி திறந்தவெளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைவரது பார்வையும் அமுதமழை பொழியும் சுவாமிகள் வரும் வழியையே பார்த்துக் கொண்டிருந்தது.**

**திடீரென மழை, கூட்டம் முழுவதும் கோவிலுக்குள் சென்று மிக நெருக்கமாக உட்கார்ந்தார்கள். சுவாமிகள் வந்தார். சொற்பொழிவை ஆரம்பித்தவர் எடுத்த எடுப்பிலேயே, "கந்தபுராண"ச் சொற்பொழிவு என்று வால் போஸ்டரை வருணலோகம்வரை ஒட்டி விட்டார்கள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்த அன்பர்கள். வருண பகவான் பார்த்தார். "ஆ! சூரபத்மனின் சிறையிலிருந்து நம்மை விடுவித்த முதல்வன் கதை நாமும் கேட்க வேண்டும்" என்று அவரே வந்துவிட்டார். அதுதான் "மழை" என்றார். கும்பல் மொத்தமும் கைதட்டியது. கை தட்டல் அடங்கியதும் "அது மட்டுமல்ல, நீங்கள் எல்லோரும் நெருக்கமாகவும், ஒற்றுமையாகவும் இருக்கவேண்டும். அதனால்தான் திறந்த வெளயில் இருந்த உங்களை இங்கே உள்ளே நெருக்கமாக உட்காரும்படி செய்தார் வருணபகவான்: அதுதான் மழை" என்றாரே பார்க்கலாம். அடங்கிய கைதட்டல் மீண்டும் எழுந்தது.**

உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதிமாத வாராந்த நிகழ்வுகள்

**02.09.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "செஞ்சொற் புனைமாலை"

வழங்குபவர் :- விரிவுரையாளர் ச. லலீசன் அவர்கள்

[ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்]

---

**09.09.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "வேல் எடுத்த வேள்"

வழங்குபவர் :- ஆசிரியர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

---

**16.09.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

இன்னிசை (பக்கவாத்திய சகிதம்)

---

**23.09.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**30.09.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- சிவ.ஆறுமுகசாமி (J.P)அவர்கள்

மதிப்பீட்டுரை :- துரை கணேசமூர்த்தி அவர்கள்

[ யாழப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை]

புரட்டாதி 165ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org